உள்நாடுவருட சந்தா ரூ. 3-0-0.
வெளிநாடு „ ரூ. 5-0-0

R. No. M. 3606 "PAHUTHARIVU" தனிப்பிரதி விலை ஒரு அணா

# பகுத்தறிவு

எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

எப்பொருளெத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.

மாலை 1. | ஈரோடு, பவ-ஹு கார்த்திகை-மீ 17-உ. ( 2—12—1934) | மலர் 15.

## ஏழைகள் முறைபாடு.

(கடம்பங்குளம் தோழர் ப. நாராயணனவர்கள் பாடியது.)

"மாயச் சூதினுக்கே—ஐயன்" என்னும் மெட்டு.

1. காலுக்குத் தோலுமில்லை—குடிக்கக்
கால்வயிர் கஞ்சியில்லை
மேலுக்குப் போர்த்திடவே—தோழா!
மேன்மைத் துணியுமில்லை.

2. மனைவி வருந்துகின்றாள்—உண்ணும்
மக்கள் பசிக்காக
எனைப்ப யின்றெடுத்தோர்—தோழா!
ஏங்கி வருந்துகின்றார்.

3. வருமை வந்தவுடன்—நோய்கள்
வந்து வளைந்துகொண்டு
தருணம் இதுவென்றே—தோழா!
சதிசெய்யப் பார்க்கிறது.

4. இத்தறி ஓறக்கூரை—வீடு
இடிந்து வீழ்ந்ததுவே
பொத்தச் சுவரெழுப்பத்—தோழா!
பொருளுக் கென்னசெய்வேன்.

5. தள்ளா வயதுடைய—எனது
தாய்தந்தை யென்னசெய்வார்
பிள்ளைகள் கற்றிடுமோ?—தோழா!
பேரறி வுண்டாமா?

6. எனது உழைப்பில்வரும்—கூலி
இரண்டு மூன்றணாவை
மனைவி கைக்கொடுத்தால்—தோழா!
மனமு டையுகின்றாள்.

7. பொய்யன் நானன்று—பிறரைப்
போற்றிப் புகழ்ந்தறியேன்
மெய்யைப் பொய்யாக்கேன்—தோழா!
மேனி மினுக்கறியேன்.

8. மாடிவீ டுவேண்டாம்—படுக்க
மஞ்சம் மெத்தைவேண்டாம்
ஓடக் கார்வேண்டாம்—தோழா!
உடமை பலவேண்டாம்

9. பசிக்குண வுவேண்டும்—பாலர்
படிப்பிற் குதவவேண்டும்
சுசிக்கும் வரையுடலம்—தோழா!
காண்விளை யாற்றுகிறேன்.

10. இந்த முறைதனக்கே—உலகம்
இசைய வில்லையானால்
எந்த முறைகொண்டும்—தோழா!
இயங்குதல் குற்றமையா,

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள

### இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | |
|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 |
| விவாக விடுதலை | 0-4-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 |
| மனித உற்பவம் | 0-8-0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| The Right of Temple Entry (English) | 1-0-0 |
| The Crux of the Indian Problem (English) | 1-0-0 |
| உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| சாமிகளின் அடிமை | 0-12-0 |
| லோகல்போர்டுஆக்ட் (சென்னை) | 2-0-0 |
| பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| நச்சுப்பொய்கை அல்லது நாரியர் வேட்கை | 0-8-0 |
| பெண்ணுரிமைக் கீதங்கள் | 0-1-0 |
| சமதர்மக் கீதங்கள் | 0-0-6 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.


## அறிவியக்கப் பத்திரிக்கைகள்.

### "வெற்றி முரசு"

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை.
கௌரவ ஆசிரியர்:—
S. லக்ஷ்மிகாந்தம் B. A. B. L.
ஆசிரியர்:—
சி. நடராஜன், மாயவரம்.

பழைய மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்து நவீன இந்திய பிரஜைகளாகவும், அடிமைப்பட்ட இந்தியாவின் விடுதலையைக்கோரி ஆண்மையோடு போராடும் சுதந்திர வீரர்களாகவும் சமதர்ம உணர்ச்சியுடையவர்களாகவும், நாட்டின் நலங்கருதும் நல்லோராகவும், வாழவிரும்பும் தோழர்களுக்கு நமது "வெற்றிமுரசு" தக்கதொரு வழிகாட்டியாகும். உயர்ந்தபதிப்பு.

வருட சந்தா ரூ. 3—0—0
தனிப்பிரதி விலை அணா ஒன்று.
விலாசம்:—
மானேஜர்,
"வெற்றி முரசு" மாயவரம்.

### "சமதர்மம்."

ஆசிரியர்:—
வி. பார்த்தசாரதி.

அரிய கருத்துக்கள் தெளிந்த உண்மைகள், சிறந்தகட்டுரைகள், சமதர்மப்பாட்டுகள். பழைய மூடப்பழக்க வழக்கங்களையும், சடங்காசாரங்களையும் அழித்து இந்திய மக்களின் உயர்வைநாடி, அடிமை நாட்டின் விடுதலையைக் கோரி மக்களைச் சுதந்திர வீரர்களாகவும், சமதர்மசீலர்களாகவும், நாட்டின் நலனே முதலெனக் கருதும் நல்லோராகவும் ஆக்கும் கருத்துக்கள் கொண்டது.

வருட சந்தா ரூ 2—8—0.
தனிப்பிரதி விலை 6 பை.
விலாசம்:- மானேஜர்,
"சமதர்மம்" ஜோலார்பேட்டை.

### "நகர தூதன்."

ஓர்சிறந்த வாரப்பத்திரிகை
ஆசிரியர்:—
மணவை ரே. திருமலைசாமி.

பார்ப்பனரல்லாதாரின் விடுதலைக்கும், தொழிலாளர்களின் விடுதலைக்கும் பாடு படுவதுடன் மக்களை சமதர்மவாளர்களாகத் திகழச் செய்யும் கருத்துக்களையும் அறிஞர்களின் அரிய கட்டுரைகளையும் தாங்கி வெளி வரும் ஓர் சிறந்த வாரப் பத்திரிகை.

வருடச் சந்தா ரூ 3—0—0
விலாசம்:—
மானேஜர்,
"நகர தூதன்"
உறையூர், திருச்சி.

நாகர் கோவிலிலிருந்து தோழர் பி. சுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். அவர்களை ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளி வருகிறது.

வருட சந்தா ரூ. 3—0—0
6 மாதம் ,, 2—0—0
3 மாதம் ,, 1—4—0
மானேஜர், "தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.
—0—

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழனே. வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள். அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0
வெளி நாடு ரூ. 5—0—0
விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

### விதவையர் விடுதலை முழக்கம்.

இது விதவைகள்படும் கொடுமைகளையும், அவர்களின் விடுதலைக்குரிய வழிகளையும் விளக்கும் இனிய வர்ன மெட்டுகளாலமையப்பெற்றது. 1¼ அணா ஸ்டாம்பு அனுப்பினால் புக் போஸ்டில் அனுப்பப்படும். விலை அணா ½.
விலாசம்:—க. அ. புன்னைமுத்து
கல்லூரணி, அருப்புக்கோட்டை வழி

### ஏஜண்டுகள் தேவை.

நமது "பகுத்தறிவு" வாரம் பத்திரிகை விற்பனை செய்வதற்கு

1. பொன்மலை
2. சாக்கோட்டை
3. திண்டுக்கல்
4. சென்னை
5. கோலார் தங்கவயல்.
6. பொரையார்
7. கோட்டார்

முதலிய இடங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டு தேவை. மற்ற விபரங்கள் தெரிந்து கொள்ள விரும்புகின்றவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.
மானேஜர், "பகுத்தறிவு" ஈரோடு.

# மதமொழிக்கும் உலகப்புரட்சி.

## ஜோசப் மெக்காபி எழுதியதின் மொழிபெயர்ப்பு.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மேலும் பிரான்ஸ் வாசிகள் மிகுந்த வேடிக்கைக்காரர்கள். பாதிரிக் கூட்டங்களும் நீதிஸ்தலங்களும் பகிரங்கமாகவே ஒழுக்கந்தவறி நடக்கையில் மதக்கோட்பாடுகளைப்பற்றி ஏன் பற்பல அர்த்தம் செய்து கொண்டிருக்க வேண்டும்? சில மத நூலாசிரியர்கள் வால்டேருடைய காதல் விஷயங்களைப்பற்றிப் பேசுகிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்வதால் நாஸ்திகத்திற்கு மதிப்புத் தாழ்வு என்று அவர்கள் நினைக்கிறார்கள். இந்த ஜனங்களுக்குப் புரட்சிக்காலம் வரையில் பாதிரிக் கூட்டங்களும் ஆசை நாயகிகளை வைத்திருந்தார்கள் என்ற விஷயம் தெரியவில்லையென்று தோன்றுகிறது. ஜெஸ்யூட். பாதிரிகள் அரசர்களுடைய பலமற்ற மனசாட்சிகளையும், அவர்களுடைய ஆசை நாயகிகளையும் பல தலைமுறைகளாகக்கொலை செய்து கொண்டிருந்தார்கள். பாரிஸிலுள்ள கன்னிகாமடங்கள் காதலர் கூடுமிடங்களாக இருந்தன. மோலியரி என்னும் பெரிய பிரஞ்சு விகடகவி ஒரு பகுத்தறிவுக் கொள்கைக்காரன்.

வால்டேர் தன் ஏகீஸ்வர வாதத்தை இங்கிலாந்தில் தான் கற்றுக் கொண்டார் என்று தெரிகிறது. ஆனால் ஆங்கில தத்துவ சாஸ்திரிகள் மிகுந்த சிரமப்பட்டு எழுதிய ஒழுக்கச்சட்ட இயல்புகளைப் பற்றிய விஷயமும், பைபிளின் பழைய ஏற்பாட்டின் குற்றங்களையும். கேவலங்களையும் பற்றி எழுந்த பலமான தர்க்கமும் இப்போது புதிய உருவங்களை அடைந்தன. வால்டேர் பைபிள் தர்க்கத்தை ஜ்வலிக்கும்படி செய்தார். அவர் தமது நூல்களில் கவிகளையும் சேர்த்திருந்தார். அவர் புத்தகங்களில் வேடிக்கை விநோதப் பேச்சுகள் காணப்படும். பிரபுக்கள் வீட்டுச் சீமாட்டிகளும், தாராள நோக்கமுடைய பாதிரிகளும், வியாபாரிகளும், டாக்டர்களும், நியாய வாதிகளும் தெய்வீகக் கதைகள் வாக்குகள் என்று அவர் புஸ்தகத்தில் சொல்லப்படுபவைகளைக் கேட்டு தேகங் குலுங்க நகைத்தார்கள்.

அவர் காலத்தில் இருந்த ஒரு சிறந்த பெரியார் ஜீன்ஜாக்குஸ் ரூஸோ என்பவர். அவரும் ஏகீச்சுர வாதிதான். அவர் வேறு விதமான மனோ இயல்பு கொண்டவர். அவர்மதாபிமானம் கொண்டவர். உற்சாக புருஷர். உண்மையானவர். அவர் கிறிஸ்து ஒரு சாதாரண மனிதனாகவே மதித்துப் பிரசங்கஞ் செய்து வந்தார். ஆனால் அவரைத் தெய்வீக புருஷனாக மதிக்கவில்லை. வால்டேர் தன் சொந்த விஷயத்தில் மிகத்தாராளமானவர். அவருக்கு அநீதியை எதிர்க்க அதிகப் பிரியம். அவர் தன் மனம் போல் நடப்பவர். பிரஞ்சுக்காரருக்குரிய உல்லாசம் கொண்டவர். அவர் தீட்சண்யமானவர்.

ஏகீச்சுரக் கொள்கை இதற்கு முன்பு வெகு நிதானமாகவே பரவிற்று. சாத்மீகமான சிலரே அதைப் பின் பற்றினர். இப்பொழுது அது ஜனங்களால் பெரிதும் விரும்பப் படுகிறது. பிரான்ஸிலுள்ளவர்கள் அதற்காக மிகுந்த ஆவல் கொண்டார்கள். பாதிரிகளும் போலீஸ்காரர்களும் அதைத் தடுத்தும் ஜனங்களுக்குப் பிரீதி அதிகமாயிற்று. இத்தாலியிலும், ஸ்பெயினிலும், ஜெர்மனியிலும் அதை ஜனங்கள் விரும்பிக் கேட்டார்கள். ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு நகரத்திலும் வால்டேரைப் பின் பற்றியவர்களுடைய கூட்டம் ஏராளமாக இருந்தது. பாதிரிகளுடைய பெரிய பதில்களெல்லாம் ஜனங்களுக்கு அதிக நகைப்பையே உண்டாக்கின. பாதிரிக் கூட்டங்களும் நாஸ்திகத்தையே கொண்டிருந்தனர். வால்டேருடைய மதக் கண்டனங்களும், தமாஷாக்களும் படிப்பில்லாத ஜனங்களிடம் மெதுவாய் வியாபிக்கலாயின. வேலைக்காரர்களும், குதிரைக்காரர்களும் தெருக்களில் அத்தமாஷாக்களையும் கண்டனங்களையும் எடுத்துக் கூறினார்கள். இதற்கு முந்தி உலக சரித்திரத்தில் இவரைப் போன்ற மிகப் பெரிய செல்வாக்குப் பெற்ற நூலாசிரியர் ஒரு போதும் இருந்ததில்லை. வால்டேர் எழுதிய நூல்கள் லிஸ்பன், மாத்ரிட், நேப்பிள்ஸ், வியன்னா, இங்கிலாந்து, ஸ்வீடன் முதலியவிடங்களின் நீதிஸ்தலங்களில் வாசிக்கப்பட்டன. மனிதக்கூட்டத்தில் எந்த வகுப்பாரும் எதிர் பாராத அவருடைய கடுமையான கண்டனங்களுக்குத் தப்பியதில்லை.

இந்த விதமாக நவீன நாஸ்திகம் உண்டாக்கப்பட்டது. ஆங்கில ஏகீச்சுரக்கொள்கையினர் அதற்கு ஆணித்தரமான இலக்கிய அஸ்திவாரத்தைப் போட்டார்கள். அக்காலத்தில் கல்வியும் அதிகமாகி வந்தது. வால்டேர் அதைப் பிரபலப் படுத்தினார். அதனால் அவர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். பாதிரிகள் கிறிஸ்து விரோதிகள் தோன்றி விட்டதாகவும், உலகத்தின் முடிவு சமீபித்து விட்டதாகவும் நினைத்தார்கள், நாஸ்திகம் உலகமெங்கும் பரவியது. ஆனால் அது தீர்க்க தரிசன மதத்தைப் பற்றிய நாஸ்திகம் தான். அது கடவுளைப் பற்றியதல்ல. ஆனால் அது இப்போது மத நம்பிக்கைகளின் மூலக் கொள்கைகளுக்கே சென்று விட்டதை நாம் கவனிக்க வேண்டும்.

### 19-ஆம் நூற்றாண்டின் போராட்டம்.

### 4-ம் அத்தியாயம்.

மேலே விவரிக்கப்பட்ட ஏகீச்சுரக் கொள்கையின் காலமுடிவில் பிரஞ்சு தேசத்தில் மிகப் பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டது. அது சரித்திரத்திலேயே மகத்தான சம்பவங்களில் ஒன்று.

ப்ரான்ஸ் பொருளாதாரநிலையிலும், அரசியல் நிலையிலும் மகா கேவலமான அந்தஸ்தில் இருந்தது. குடிகளில் பெரும்பான்மையோர் மகா கொடிய வறுமையில் இருந்தார்கள். குடிகளுக்குத் தாங்க முடியாத வரிகள் விதிக்கப்பட்டன. அவ்வரிகள் உபயோகமற்ற நீதிஸ்தலத்திற்கும், ஒழுக்கம் கெட்ட கோவில்களுக்கும் செலவழிக்கப்பட்டன. அதனால் தேசமக்களுக்கே ஒரு மிக்க வெறுப்பும், கோபமும் உண்டாயின. உலக முழுதுமே அத்தேசத்தின் பரபரப்பு எட்டிற்று நெப்போலியன் அரசியல் புரட்சியை வென்ற போதும், அவனை முறையே இங்கிலீஷ் காரர்களும், ஜெர்மன்காரர்களும் வென்றபோதும் எதிரிடையான காரியங்கள் நடைபெறலாயின. அரசியல் புரட்சிக்கும் அதன் பயங்கரச் செயல்களுக்கும் காரணம் நாஸ்திகமே யென்று அதைக்கண்டனம் செய்தார்கள். ஆகவே நாஸ்திகத்தை வளரவிடாமல் தடுத்து விடுவதற்கு ஐரோப்பா முழுவதும் தீவிர முயற்சிகள் நடந்தன. கிறிஸ்துமத ஆதிக்கத்தை மறுபடியும்அமைக்க அரசாங்கத்தார் சட்டம் போட்டு வேலைசெய்தார்கள்.

நாஸ்திகத்தையும், பிரஞ்சு அரசியல் புரட்சியையும்பற்றி நமது பிரத்தியேகமான வேறு சிறிய புஸ்தகத்தில் இனிவிஸ்தாரமாய் எடுத்துச்சொல்லுவோம். விஷயத்தைப்பற்றிய பிரபலமானகருத்துக்களும், விசேஷமாய் பிரசங்கங்களும், மதநூல்களும் முற்றிலும் தப்பானவை. உதாரணமாக பாரிஸில் நாட்ரிடேம் மாதா கோவிலில் ஒரு விபசாரி பகுத்தறிவுக்கு அதிதேவதையாக பட்டஞ்சூட்டப்பட்டாள் என்ற சாமான்ய கதை பொய்யானது. நாஸ்திகம் அரசியல் புரட்சியின் மிகவும் நல்ல காரியத்திற்கே பெரிதும் காரணமாயிருந்தது. ஆனால் கொடிய தீங்கு ஒன்றும் விளைவதற்குக்காரணமாயிருந்ததில்லை. ஆனால் அதைப்பற்றிப் பிறகு பேசுவோம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோவில்களுக்கு விரோதமாக எழுந்த புரட்சியைத்தடுத்தது சர்க்கார்தான் என்பதைக்குறித்துக் கொள்ளவேண்டும். ஜனங்கள் நம்பிக்கை பெற்றுத்திரும்பியதில்லை. நாஸ்திக இயக்கம் சென்று கொண்டுதானிருந்தது. அது நாளுக்கு நாள் வலுவுற்றது. விக்கிரக ஆராதனைக்கு வெறுப்பு வளர்ந்து கொண்டு வந்தது.

தாமஸ்பேனி, ரூஸோ, வால்டேர், ஆகிய மிகுந்த சக்தி வாய்ந்த மூன்று நாஸ்திக நூலாசிரியர்களும் ஏகீச்சுரக் கொள்கையினர். இம் மூவர்களும் ஒரே கடவுளிடத்தில் உறுதியான நம்பிக்கையுடையவர்கள். ஆனால் வால்டேர் மட்டும் சிற்சில சமயங்களில் அந்நம்பிக்கையினின்று சற்று விலகியிருப்பதாகச் சொல்லலாம். பிரான்ஸில் அரசியல் புரட்சி ஏற்படுவதற்கு முந்தி நாஸ்திகத்திற்குப்புதிய தலைமுறைகள் தோன்றின. அவர்கள் கடவுளைப்பற்றிச்சந்தேகம் கொண்டவர்களாயும் கடவுள் இல்லையென்று சாதிப்பவர்களாயும் இருந்தார்கள். நாஸ்திகமும் லோகாயுதமும் தோன்றின. இவைகளைப்பின் பற்றியவர்கள்கற்றுத்தேர்ந்த அறிஞர்களும், மிகக்கியாதிபெற்றவர்களுமாவர். இதன்அபிவிருத்திச் சரித்திரத்தை நான் இப்போது எழுதிக்கொண்டு போகவில்லை. ஆகையால்டீடிராட், ஹோல்பாக், கோண்டர் செட், ஹெல்விடியஸ் முதலியவர்கள் புதிய இயக்கத்தலைவர்களாக இருந்தார்கள் என்று மட்டும் நான் சொல்லுவேன். அவர்களைத் தத்துவ சாஸ்திரிகள் என்று அழைத்தார்கள். "என் சைக்ளோபீடியா" என்னும் பெரிய நூல் முதல்முதலாக எழுதப்பட்ட போது, மேலே கூறப்பட்டவர்கள் பிரதானமாய் தங்களுடைய அபிப்பிராயங்களைக் கூறியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு "என் சைகளோ பீடிஸ்ட்கள்" என்ற ஒரு பெயரும் உண்டு.

இப்போதுமதத்திற்குவிரோதமான நவீன புரட்சியின் ஒழுங்கான வளர்ச்சியைப்பற்றிஆராய்ந்து பார்க்க விரும்புகிறோம். அதன் விபரங்களைப்பற்றிகற்க நாம் விரும்பவில்லை. நவீன அறிவு விருத்தியின் காரணத்தாலே யேசுபாவீகமாக அத்தகைய நிலைமை ஏற்பட்டது என்று நாம் அறியவேண்டும். அதுதோன்றி மறையும் இயல்பினதல்ல. புரொபெஷர் ஆஸ்பர்ன் போன்ற நூலாசிரியர் தெளிந்தவிஞ்ஞான அறிவுடையவர் அவர் மத நூல் ஆசிரியர்களுடன் சேர்ந்துகொண்டு, புரட்சிசென்றதலை முறையின் விஞ்ஞானம் காரணமாய் எழுத லோகாயதத்திலிருந்து தோன்றினதுஎன்றும், இந்த லோகாயத அலை ஓய்ந்து விட்டது நாம் எதிர்பார்க்கலாமெனவும் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட உரைகள் அறவே பொய்யானவை.

பிரஞ்சு தத்துவ சாஸ்திரிகளுடைய ஆழ்ந்த நாஸ்திகம் விஞ்ஞானம்

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

# பெண்கள் பகுதி.

## துருக்கிப் பெண்கள்.

துருக்கியில் ஆண்களைப் போல் பெண்களும் எல்லாவித உலக விவகாரங்களையும் கவனித்து வருகின்றனர். வியாபாரம், விவசாயம், தொழிற்சாலை முதலிய துறைகளிலெல்லாம் ஈடுபட்டிருந்து வருகின்றனர். எண்ணற்ற பெண்கள் சுய சம்பாத்தியமாக கைத்தொழில் புரிந்தும், நாட்டுத்தொழில்களை விருத்தி செய்தும் வருகின்றார்கள்.

எனவே இவ்விதம் துருக்கிப் பெண்கள் எந்தெந்தத் துறையில் எத்தனை பெண்கள் ஈடுபட்டிருந்து வருகின்றனர் என்ற ஜாபிதா விபரம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:-

துருக்கியில் முக்கிய பகுதிகளில் மட்டும் இருக்கும் ஜனங்களின் தொகை 1,60,00,000. இவர்களில் 90,00,000 பேர்கள் பெண்கள். இத்தொகையில் அன்னிய நாட்டினர் அதாவது உலக விவகாரார்த்தமாய்த் துருக்கியில் குடியேறியிருப்பவர்கள் சேர்க்கப்படவில்லை.

பொதுவாகத் துருக்கிப் பெண்களில் 8,00,000 பேர்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்து வருகிறார்கள். இவர்கள் கிராமாந்தரவாசிகள்.

## நகரப்பெண்கள்.

அதல்லாமல் சுமார் 10 லட்சம் பெண்கள் நகரப் பகுதிகளில் உத்தியோகம், தொழிற்சாலை, கூலிவேலை, சுயசம்பாதனை முதலியவற்றில் ஈடுபட்டிருக்கின்றனர். இங்ஙனம் பிரதமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் பெரும்பாலும் இஸ்தாம்பூல், அங்கோரா ஆகிய பகுதிகளில் தானிருந்து வருகின்றனர். அதன் விபரம் வருமாறு:-

15 பெண்கள் மாஜிஸ்திரேட் உத்தியோகத்திலிருந்து வருகிறார்கள்.

12 பெண்கள் வக்கீல் நியாயவாதித் தொழில் புரிந்து வருகின்றனர்.

8 பெண்கள் டாக்டர் (வைத்தியம்) தொழில் செய்து வருகின்றனர்.

5 பெண்கள் இரசாயன ஆராய்ச்சித்தொழில் புரிந்து வருகிறார்கள்.

4 பெண்கள் முனிசிபல் கவுன்சிலர்களாயிருந்து வருகின்றனர்.

20 பெண்கள் சர்வகலாசாலைகளில் புரொபஸர் (போதகாசிரியை)களாயிருந்து வருகிறார்கள்.

800 பெண்கள் டைப் அடிக்கும் குமாஸ்தாக்களாக சம்பளத்திலிருந்து வருகின்றார்கள்.

1500 பெண்கள் பாங்குகளிலும், பொதுப்படையான பல உத்தியோகங்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

20,000 பெண்களுக்கு மேல் அதிகமாய் (சிறுமிகளும் பெரிய மாதர்களுமாய்) இஸ்தாம்பூல், அங்கோரா ஆகிய நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளில் கூலிவேலை செய்து ஜீவித்து வருகின்றார்கள்.

இம்மட்டல்ல, சுதேசிய நாடக-நடனசாலைகளில் கணக்கற்ற பெண்கள் ஈடுபட்டிருந்து வருகின்றனர். உள்நாட்டு வினிமாத் தொழிலில் மட்டும் 30 கன்னிகைகள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் நோக்குமிடத்து, துருக்கியில் ஆண்களைப் போல் பெண்களும் சகல துறையிலும் ஈடுபட்டு நாட்டை நாகரீகமடையச் செய்கின்றனரென்றும் குடியரசியலில் போதிய ஸ்வதந்திரம் பெற்று விட்டனரென்றும் கூறப்படுகிறது.

## ரஷியாவும், பெண்களும்.

ரஷியாவில் ஆண்கள் செய்யும் தொழிலையும் பெண்கள் புரிய அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர். அதே ஊதியத்தையும் பெண்கள் பெறச் சட்டம் அனுமதிக்கின்றது. ஒரு ரஷியப் பெண்ணின் ஊதியமானது ஒரு குடும்பத்தின் பாதித் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கிறது. கர்ப்பந்தரித்த பெண்கள் தங்கள் பொருள் நிர்வாகத்தைச் சரிவர நடத்திக் கொள்வதற்கு, வேலை செய்ய இயலாத காலத்திலும், தொழிற்சாலைகளிலிருந்து பணம் அவர்களுக்கு அனுமதிக்கப் படுகின்றது. இது தவிர ரஷியப் பெண்களுக்கு எல்லா விஷயத்திலும் சாத்தியமாகும் நிலையில் அரசியல் சட்டங்கள் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

## குதிரை பழக்கும் பெண்கள்.

ஐக்கிய அமெரிக்காவில் யோக்கிய தொழில்கள் 572 வகுக்கப் பட்டிருக்கின்றன. அவைகளில் 35 தொழில்களில்தான் பெண்கள் இன்னும் பிரவேசிக்க வில்லை. மற்றத் துறைகளிலெல்லாம் பெண்கள் புகுந்து விட்டனர். அந்த 35-ல் குதிரைகளைப் பழக்கும் வேலை ஒன்று. இப்போது அந்த வேலைக்கும் ஒரு பெண் சேர்ந்து விட்டதாகச்சங்கதி கிடைத்திருக்கிறது. பந்தயக் குதிரைகளைப் பழக்கும் நிபுணர்களெல்லாம் அப்பெண்ணின் தொழில் திறமையைக் கண்டு வியப்படைகிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

(குமரன்)

## வயது தடைச்சங்கம்.

35-வயதுச் சங்கமென்ற பெயருடன் டோக்கியோப் பெண்கள் ஓர் சங்கம் ஆரம்பித்திருக்கின்றனர். இச் சங்கத்தின் முக்கிய நோக்கம் எப்பொழுதுமே பெண்கள் 35-வயதினராக இருக்க முயற்சி செய்வதாகும். பெண்களின் தேகத்தை எப்பொழுதுமே 35-வயதின் பொழுதிருக்கும் உடற்கட்டுடையதாகச் செய்யமுடியுமென்பதற்கு ஸ்ரீமதி சிகோயாமனே என்பவர் உத்தர வாதமளிக்கிறார்.

சமீபத்தில் 35-வயதிலிருந்து 72 வயது வரை ஆண் பெண்கள்-சுமார் 24-பேர் டோக்கியோவில் தமது சங்கத்தில் கூடினர். 72-வயதுடைய கிழவியும் 32-வயதுடையவளின் தோற்றத்தோடே காணப்படுவதற்குரிய முறைகளை அவர்கள் அனுஷ்டித்து அதன் பயனேஜனங்களுக்கு நிரூபித்துக் காட்டினர். அவர்களுடைய உடல் ஆச்சரியப்படத் தக்கதாக நல்லமைப்புடன் விளங்கியது. ஒரு கூட்டத்தில் ஸ்ரீ மதியாமனே தலைமை வகித்துப் பேசியபொழுது கூறியதாவது:—

எனக்கு இப்பொழுது உண்மையான வயது 40 என்றாலும் நான் எனது முயற்சியினால் முதுமையைக் குறைத்து இளம் வயதுடையவளாகிக்கொண்டு வருகிறேன். பெண்களின் லட்சணபூர்த்தியான வயது35. இவ்வயதில்தான் பெண்களின் உடலில் பூரண வளர்ச்சியும் காணப்படுகின்றது. இவ்வயதில் தான் அவர்கள் மனம் சோர்வற்றதாக இருக்கின்றது.

## நிர்வாண மணக்கோலம்.

சிகாகோவில் சமீபத்தில் மிகப்புதுமையான விவாகமொன்று நடைபெற்றது. இத்தகைய விவாகமானது இது தான் உலகில் முதல்தடவையாக நடப்பதாகுமென்று சொல்லப்படுகின்றது. இவ்விவாகத்தின் பொழுது மந்திரி யொருவர் பிரசன்னமாயிருந்தார்.

மணமக்கள் புன்முறுவலைத் தவிர வேறொன்றும் அணிந்திருக்கவில்லை. முழுநிர்வாணக் கோலத்துடன் காணப்பட்டனர். கலியாண மணமக்கள் சம்பந்தமான 9பேர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்களும் ஆடையின்றியே காணப்பட்டனர். சூரிய உஷ்ணமானது 90 டிக்கிரியில் இருந்தது. எவ்விதக்காலணியும் இன்றி உஷ்ணத்தையும் பொருட்படுத்தாது இம்மணமானது மிக விநோதமாக நடைபெற்றது.

ஏராளமான நிருபர்களும் போட்டோக்காரர்களும் இம்மணத்திற்கு விஜயஞ்செய்திருந்தனர். எனினும் குறிப்பிட்ட சிலரே அனுமதிக்கப் பெற்றனர்.

எவ்விதமான நாணமுமின்றி மணமக்கள் "சரி" என்று சொன்னவுடன் வெளியிலிருக்கும் மற்ற பத்திரிகா நிருபர்கள் வர அனுமதிக்கப்பட்டனர். சிறிது நேரத்தில் மணமுடிந்தது. மண மக்கள் தாங்கள் ஆடையை அணிந்து கொண்டனர். பிறகு தங்களது நிர்வாணசங்கத்திற்கு வாழ்த்துக் கூறி விடுத்தங்கள் இருப்பிடமாகிய நிர்வாணசாலைக்குச் சென்றனர். தங்கள் "மான்ஜுனே" நிர்வாணசாலையில் கழித்தனர்.

வீ. கே.

## சென்னை சட்டசபை உப தேர்தல்.

### தோழர் ஜே. சிவ ஷண்முகம் அவர்களுக்குப் பேராதரவு. மூல கொத்தளத்தில் மாபெரும் கூட்டம்.

சமதர்ம இலவச வாசகசாலையின் ஆதரவில் தோழர் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் தலைமையில் ஓர் கூட்டம் கூடியது. அது சமயம் தோழர்கள் திருஞான சம்பந்தம், என். பி. பத்மநாபன், செல்வம், எஸ். பி. ஐ. பாலகுருசிவம், தங்கராஜ், விஜயரங்கம் முதலியோர் சென்னை சட்டசபை உப தேர்தலுக்கு நிற்க உத்தேசித்திருக்கும் முனிசிபல் கவுன்சிலர் தோழர் ஜே. சிவ ஷண்முகத்தை ஆதரித்து பேசி, எந்தக்கட்சிக்காரரும் டி தேர்தலில் போட்டி போடாமலிருந்து ஆதரிக்குமாறும் கேட்டுக் கொண்டனர்.

பின்னர் தலைவர் முடிவுரையில் பேசியதாவது:—

தோழர் சிவ ஷண்முகம் அவர்களை ஆதரித்தும், ஒவ்வொருவரும் இது சமயம் விட்டுக் கொடுப்பது உசிதமென்றும் இப்படி விட்டுக் கொடுப்பது தான் ஆதிதிராவிடர்களை முன்னேற்றுவதற்கு அறிகுறி என்றும், வாயளவில் இல்லாமல் செயற்கையிலிருக்க வேண்டியது என்றும் பேசினர். தோழர் சுந்தரலிங்கம் வந்தனங் கூற கூட்டம் சுமார் 8-30 மணிக்கு இனிது கலைவுற்றது என் காரியதரிசி தோழர் ஜி. ராஜரத்தினம் அறிவிக்கிறார்.

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

டி மன்றத்தின் ஆதரவில் 21-11-34ல் தோழர் கே. எஸ். நாதன் அவர்களின் தலைமையில் மன்றத்தின் காரியாலயத்தில் அங்கத்தினர்கள் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

அது சமயம் தோழர் ஜே. என். ராமநாதன் இறந்ததைக் குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்று நிறைவேறியது.

## சுயமரியாதை கலப்பு மண அழைப்பு.

மணமகள் புதுக்கோட்டை தோழர் இராஜம் அவர்களுக்கும் மணமகன் தஞ்சை ஜில்லா போர்டு இஞ்சினியர் ஆபீஸ் குமாஸ்தாவாக விருக்கும் தோழர் சிற்சபேசன் அவர்களுக்கும் புத்தூர் பெத்தாச்சி செட்டியார் பங்களாவில் 1934 ஷு டிசம்பர் மீ 2-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சென்னை தோழர் எஸ். குஞ்சிதம் பி. ஏ., எல். டி., தலைமையில் தமிழ் நாடு புரோகித மறுப்புச் சங்க ஆதரவில் திருமணம் நடைபெறுமென்றும், அவ்வமயம் நண்பர்கள் விஜயம் செய்து சிறப்பிக்க வேண்டுமென்றும் டி தமிழ் நாடு புரோகித மறுப்புச்சங்கத்தார் அறிவிக்கிறார்கள்.

ரஷியாவில் விவாக ரத்தும்

# குழந்தைகள் விஷயமும்

## புருஷன் மனைவி பிரிந்து கொண்டால் குழந்தைகளை என்ன செய்வது?

### மதசம்மந்தமான கல்யாணம் சட்டவிரோதமானது

ரஷியாவில் கணவன் மனைவிமார்களின்நிலை மற்றெந்த சமூக சீர்திருத்த வாதிகள் கனவு காண்பதை விட மிக உயர்ந்த அந்தஸ்துடையதாக இருப்பது கவனிக்கத்தக்கது. சட்டம், பொருளாதாரம் முதலிய அனைத்திலும் கணவன்மார்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறஅளவு உரிமை மனைவிமார்களும் பெற்றுவருகின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் செய்யும் தொழிலையும், பெண்கள் புரிய ரஷியாவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். அதே ஊதியத்தையும் பெண்கள் பெறச் சட்டம் அனுமதிக்கின்றது. ஆனொருவன் ரஷியாவில் அடையும் ஊதியம் தன்னைத்தவிர மற்றொரு உயிரைக்காப்பாற்றக்கூடிய அளவினதாக இல்லை. ஒரு ஆள் பெறும் கூலியானது அந்த ஒரு ஆளின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாகவே இருக்கும். எனவே ஒரு பெண்ணின் ஊதியமானது ஒரு குடும்பத்தின் பாதித்தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பது உணரத்தக்கது.

கர்ப்பந்தரித்த பெண்கள் தங்கள் பொருளாதாரநிர்வாகத்தைச்சரிவரநடத்திக்கொள்வதற்கு, வேலைசெய்யஇயலாத காலத்திலும் தொழிற்சாலைகளிலிருந்து பணம் அனுமதிக்கப்பெறுகின்றனர். பிரசவமாவதற்கு ஆறு வாரங்கள் முன்னிருந்து பிரசவம் முடிந்து ஆறு வாரங்கள் இறுதியாக பெண்கட்கு இலவசப்படி அனுமதிக்கப்படுகின்றது. பிரசவம் முடிந்த ஆறுவாரங்கட்குப் பிறகு தனது பழைய தொழிலைப் பழைய கூலியிலேயே ஆரம்பிக்கும் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ரஷிய மனைவிமார்களே உலகில் மிக விரிந்த சுதந்திரம் வாய்ந்தவர்கள். ஏனென்றால், ஒரு குடும்பத்தாருடைய இல்லத்தில் பாதியளவு ரஷிய மனைவியரைச் சேர்ந்ததாகும். மேலும் வீட்டின் தட்டுமுட்டுச் சாமான்களில் பாதியளவும் அவர்களுக்கு உரித்தானதாகக் கருதப்பட்டிருக்கின்றது. தமது கணவன்மாரை எதிர்பார்க்கவேண்டிய எந்த விதமான அவசியமும் ரஷிய மனைவிமார்க்கு ஏற்பட்டிருக்கவில்லை. தம்முடைய தேவைகளைத் தாமே நிர்வகித்துக் கொள்ளும் வசதிகள் ரஷிய மனைவிமார் பெற்றிருக்கின்றனர். பொருளாதார சுதந்திர வசதியினால் ரஷிய மாதர் உலக மாதர் அனைவரிலும் மிகப்பெருகிய சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்றன ரென்பது மிகையன்று.

ரஷிய மனைவியர்களுக்கு எல்லா விஷயங்களும் சாத்தியமாகும் நிலையில் அரசியல் சட்டங்கள் அமைக்கப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. ரஷிய மனைவியர்க்கு குடும்பத்திற்கு வேண்டிய இடங்கள் தனியாக அமைக்கப்பட்டிருப்பதைத்தவிர தனியான சமையல் அறை, உல்லாச சாலை, படுக்கையறை முலியன கிடையா. குழந்தையற்ற தம்பதிகளுக்கும், கலியாணமாகாதவர்களுக்கும் வீடுகளில் பிரிவுகளேற்படுத்திக் கொடுக்கப்பெறுகின்றன.

ரஷியாவில் தனியான சமையலறை கிடையாதென்று முன்பு கூறப்பட்டிருக்கிறது. பொதுக் கக்கூஸ் பொது ஸ்நான அறை, முதலியவைகள் எவ்வாறு எல்லோராலும் உபயோகிக்கப்படுகின்றனவோ அவ்வாறே பொதுச்சமையலறைகள் உபயோகிக்கப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக வழங்கப்படும் உணவுத்தட்டுகளைத் தவிர வேறு பிரிவு ரஷியாவில் கிடையா. தனித்தனியானசமையலறைகள்ரஷியாவில் தேவையற்றுப்போய்விட்டன வேறாகப் பிரிக்கப்பட்ட குடும்பங்களே ரஷியாவினின்று நீக்கப்பெற்று விட்டன. குழந்தைகளையுடைய மனைவித் தொழிலாளர்கள், குழந்தைகளினால் எவ்விதத் தொந்தரவும் அடையாமலிருக்க வசதிகள் செய்து கொடுக்கப்பெறுகிறார்கள். குழந்தைகளை மூடு வண்டிகளில் வைத்துத் தனியான தாதிகள் மேற்பார்த்துக்கொள்கின்றனர். மனைவிமார்கள் வயல்களில் வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தால் மூடுவண்டிகளில்குழந்தைகளை வைத்துக்கொண்டு தாயைத் தொடர்ந்து செல்லத் தாதிமார் பலரிருக்கின்றனர். இவையன்றிக் குழந்தைகளுக்கு விளையாடுவதற்கென்று பிரத்தியேகமான விளையாட்டு மைதானங்கள், பார்க்குகள் முதலியன ஏராளமாயிருக்கின்றன.

விவாகரத்து ரஷியாவில் மிக எளிதான விஷயம். இது சம்பந்தமாக ஜான்ஸ்டன் என்பவர் பின்வருமாறு ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்றார்:—

“நான் (Z. A. G. S.) என்ற விலாசமுடைய சிவில் சட்ட சம்பந்தமான ரிஜிஸ்டர் காரியாலயத்திற்குச் சென்றிருந்தேன். ஒரு இளைய மாது ஓர்கைக்குட்டையைத் தலையில் சுற்றிக்கொண்டு, ஓர் அறையில் பேனா புஸ்தகங்கள் முதலியவற்றுடன் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இச்சந்தர்ப்பத்தில் ஓர்சீனன் உள்நுழைந்தான். அவன் தனது மனைவியை விவாகரத்துச் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பினான். உடனே மூன்று (ரூபிள்ஸ்) என்ற ரஷிய நாணயம் கொடுக்கப் பெற்றது. ஒரு தாளில் இவன் தனது கையெழுத்தை எழுதினான். உடனே இவனுக்கு ஓர் விவாக ரத்து ரசீது அளிக்கப் பெற்றது. “இவன் ரத்துச் செய்த விஷயம் இவனது மனைவிக்குத் தெரியுமா?” என்று நான் கேட்டேன்.

தலையில் கைக்குட்டை யணிந்திருந்த அப்பெண் (அக்காரியாலய உத்தியோகஸ்தர்):—முதல் தபாலில் அவளுக்கு அவளது கணவன் ரத்துச் செய்து விட்ட சங்கதி தெரிவிக்கப்படும். கணவன் விவாகரத்துச் செய்து கொள்வதாயிருந்தால் முன்னரே தெரிவிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. கணவனோ மனைவியோ தங்கள் விவாக பந்தத்தை அறுத்துக் கொள்ள ஆசைப்பட்டால் இவ்வாறு செய்தல் போதுமானது. முன்னறிக்கை யொன்றும் அவசியமில்லை. உனது சுக துக்கங்களில் பங்கெடுத்துக் கொண்ட மனைவியை நீ விலக்கி விட வேண்டுமென்றோ அவள் உன்னை விலக்கிவிட வேண்டுமென்றோ கருதினால் அது, உனது, சட்டை, கால் ஜோடு முதலியவைகளை விலக்கி விடுவது போன்ற செயலேயாகும். கலியாண பந்த விலக்கானது கணவன் மனைவி இருவருடைய விருப்பத்தையும் பொறுத்ததாகும்.”

நான்:— அப்படியானால் குழந்தைகள் விஷயமென்ன?

அப்பெண்:— குழந்தைகளுக்குத் தனியாக சம்ரட்சணை படிகள் அளிக்கப்பெறும். கணவன் மனைவிமாரின் வரும்படியில் முக்கியமான பாகஸ்தர்கள் குழந்தைகளே. குழந்தைகளுக்குக் கொடுக்கும் செலவு தொகையைக் கணவன் மனைவி மார்களின் ஊதியத்திலிருந்து அவர்கள் வேலை செய்யும் காரியாலயத்திலேயே பிடித்தம் செய்யப்படும். குழந்தைகளின் பராமரிப்புக்குக்கணவனும், மனைவியும், சமமான உதவியே செய்ய வேண்டுமென்ற நிபந்தனை குறிப்பிடத்தக்கதாகும். நிலைமைக்குத் தக்கவாறு இச்செலவு தொகை நிர்ணயிக்கப்பெறும்.

நான்:—சரி. இக்குழந்தைகளை வைத்துக் கொள்வது யார்?

அப்பெண்:—வழக்கமாக தாயாரே. தகாறு ஏதேனும் இதில் ஏற்படுமாயின் பொதுஜன நியாயஸ்தலத்தில் இவ்விஷயம் முடிவு செய்யப்படும்.” இவ்வாறு நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது விவாகரத்துச் செய்து கொண்ட சீனன் வந்தான். வேறொரு பெண்ணை அவன் மணஞ்செய்து கொள்வதாக முடிவு செய்தான். அப்பெண்ணும் அங்கு பிரசன்னமாக விருந்தாள். கையெழுத்து இடப்பட்டு ஏழு ரூபிள்கள் கட்டப்பெற்றன. இருவரும் உடற் பரிசோதனை செய்து கொள்ள விரும்புகிறீர்களா என்று கேட்கப்பட்டனர். அவ்வளவுதான். விவாகம் முடிந்தது. எவ்வளவு சுறுசுறுப்பான செயல்!

“மத சம்பந்தமான அனுஷ்டானங்களோடு நடைபெறும் எந்த மணமும் சட்ட அனுமதி பெற்றதாகாது” என்பது ரஷியாவின் சட்ட புத்தகத்தில் இருக்கும் ஓர் விதியாகும்.

ஆனால் மணஞ் செய்து கொள்ள விரும்புகிறவர்கள் ரிஜிஸ்டர் செய்து கொள்ள வேண்டுமென்ற சட்டமிருப்பதினால் குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் இல்லையென்று சொல்லப்படுகிறது. எனினும் ரிஜிஸ்டர் மணம் செய்து கொள்ளாமல் தற்செயலான ஆண் பெண் தொடர்பினால் பிறக்கும் குழந்தைகளுக்கும் ரிஜிஸ்டர் மணத்தாற் பிறந்த குழந்தைகளைப் போலவே வசதிகள் அளிக்கப் பெறுகின்றன. ஆராய்ந்து பார்த்தால் ரஷியாவில் தவறாகப் பிறந்த குழந்தைகள் ஒன்றுமேயில்லையென்பது விளங்கும். இதன் மூலமாக அங்கு விபசாரத் தன்மையும் ஒழிந்து விட்டதென்பது குறிப்பிடத்தக்கது. 40 லட்சம் ஜனத்தொகையுடைய மாஸ்கோவில் ஏறக்குறைய 500-க்குக் குறைந்த விபசாரிகளே இருக்கின்றனர் என்பதன் மூலம் ரஷியா விவாகரத்து முறையானது மிகப் பயனுடையதென்று கருதப்படுகின்றது.

விவாக ரத்தும் பொருளாதார சுதந்திரமுமே விபசார ஒழிப்புக்கு வழி என்பதை ரஷ்யர்கள் நன்குணர்ந்திருக்கின்றனர். குடும்பங்களில் ஒற்றுமை இல்லாமல், கணவன் மனைவிமார்களிடம் வெறுப்பேற்படுவதற்குரிய முக்கியமான பல காரணங்களில் ஆண் பெண் தேக சம்பந்தத்தில் திருப்தியற்ற நிலை ஏற்படுவது மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. (குமரன்)

## சூலூர் பஞ்சாயத்துப் போர்டு.

இவ்வூர் பஞ்சாயத்துப் போர்டு மெம்பர்களின் கூட்டம் 12-11-34ந் தேதி நடைபெற்றது.

சுமார் 12 வருடங்களாக சேர்மெனாக இருந்து வந்த தோழர் எஸ். கே. கருப்பணத்தேவர் அவர்களே மறுமுறையும், ஏகமனதாக சேர்மெனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

வைஸ் சேர்மனாக தோழர் எஸ். வி. ராமசாமித்தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். [இவரும் முன் வைஸ் சேர்மனாக இருந்து வந்தவர்] என ஒரு நிருபர் எழுதுகிறார்.

# நாடகங்கள் எதற்காக?

## அறிவுக்காகவா? வெறும் ஆனந்தத்திற்காகவா?

சோவியத் ருஷியாவின் தலை நகரமாகிய மாஸ்கோவில் நூற்றுக்கணக்கான நாடக மண்டபங்களும், படக்காட்சி மண்டபங்களுமிருக்கின்றன. இவற்றிற்பெரும்பாலானவைபுரட்சிக்குப்பின்னர் தோன்றியவையாகும். புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் மன்னர் குடும்பத்தைச்சேர்ந்தவர்களும், பிரபுக்களுமே படக்காட்சி மண்டபங்களுக்கும், நாடகமண்டபங்களுக்கும், விஜயம்செய்துகொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுது குடியானவர்களும், ஏழை மக்களுமே தியேட்டர்களுக்குச் செல்கின்றனர். தியேட்டர்கள் என்பது ஒருங்கே படக்காட்சி நாடக மண்டபங்களைக் குறிக்கும்.

### மாஸ்கோ நகரின் தியேட்டர்கள்.

தியேட்டர்களுக்குச்செல்வதை ஆடம்பரமாகக் கருதலாம். மற்றும் சிலர் பொழுது போக்கின் நிமித்தம் தியேட்டர்களுக்கு விஜயம் செய்யலாம். ஆனால் மாஸ்கோ ஜனங்கள் தியேட்டர்களுக்குச் செல்வதைத் தங்களுடைய முக்கியமான கடமையாகக் கருதுகின்றனர். சோவியத் அதிகாரிகளும், அறிஞர்களும் தியேட்டர்களுக்குச் செல்லவேண்டிய அவசியத்தைத் தீவிரமாகப் பிரசாரம் செய்து வருகின்றனர். "தியேட்டர்களுக்குச் செல்வதால் உங்களுடைய அறிவு வளர்ச்சியடையும். இதரதேசங்களில் வாழும் ஜனங்களுடைய பழக்க வழக்கங்களை அறிந்து கொள்ளலாம். ஆதலால் தியேட்டர்களுக்குச் செல்லவேண்டிய வழக்கம் உங்களில் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும் என்று சோவியத் அறிஞர்கள் வீதிகளிலும், மைதானங்களிலும் பிரசாரம் செய்வதை நாம் பார்க்கலாம். ஒவ்வொரு நாள் மாலையிலும் மாஸ்கோ நகரிலுள்ள தியேட்டர்கள் பல வர்ணங்களுள்ள மின்சார விளக்குகளில் ஜோதி மயமாகப் பிரகாசிக்கின்றன. அவையாவும் மின்சார விளக்குகளாலேயே கதைகளைப் பற்றிய விபரங்களை விளம்பரம் செய்கின்றன. இலக்கிய சம்பந்தப்பட்ட கதைகளும் தினசரி வாழ்க்கை சம்பந்தப்பட்ட கதைகளும் மாஸ்கோ தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. சோகம், ஹாஸ்யம், கோபம் முதலிய நவரசங்களும் பொருந்திய கதைகள் தினந்தோறும் மாஸ்கோ தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. இதர நாடுகளில் விடுமுறை தினங்களிலேயே தியேட்டர்களில் கூட்டத்தைப்பார்க்கலாம். ஆனால் மாஸ்கோ நகரத்திலுள்ள தியேட்டர்களில் தினந்தோறும் கூட்டமாகவே இருக்கிறது. மாஸ்கோ ஜனங்கள் ஒவ்வொருவரின் பிரியத்திற்குத் தகுந்த கதைகள் தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. குடியானவர்கள், அதிகாரிகள், தொழிலாளர்கள் முதலியவர்களனைவரும் சரி சமமான ஆசனங்களிலேயே அமர்கின்றனர். ஆகவே மாஸ்கோ நகரத்திலசகலஜனங்களும் தியேட்டர்களுக்கு விஜயம் செய்ய வசதிகளைப் பெறுகின்றனர்.

### ஊக்கமான முன்னேற்றம்.

புரட்சி ஏற்படுவதற்கு முன்னர் மாஸ்கோ நகரத்திலிருந்த தியேட்டர்களின் தனிப்பட்ட சொந்தக்காரர்கள் சொந்த லாபத்தைக்கருதியே நாடகங்களையும், சினிமாக்களையும் நடத்திக்கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுது மாஸ்கோநகரத்திலுள்ள தியேட்டர்களின் சொந்தக்காரர்கள் பொது ஜனங்களை உற்சாகப் படுத்தக்கூடிய சினிமாக்கதைகளையும், நாடகக்கதைகளையுமே காண்பிக்கின்றனர். எத்தகைய கதைகளும் அவர்களுடைய தியேட்டர்களுக்குச் சென்றதும் புதியசுவையையும், அழகையும் பெறுகின்றன. தினசரி வாழ்க்கையை ஒழுங்கு படுத்திக்கொள்வதற்குத் தகுந்த மார்க்கங்களடங்கிய கதைகளும் தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றன. மாஸ்கோ பிரஜைகள் ஒவ்வொரு நாள் மாலையிலும் தங்களுடைய வேலை முடிந்த பின்னர் தியேட்டர்களுக்குச் செல்கின்றனர். அவர்கள் பணத்தைப்பற்றியேனும் தேகத்தைப்பற்றியேனும் கவலைப் படுவதில்லை. சோவியத் சர்க்கார் ஆயுள் முழுவதும்அவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களை காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றனர். அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதில் சோவியத் சர்க்கார் விசேஷஊக்கமும் சிரத்தையும் கொண்டிருக்கின்றனர். ஆகவே ஜனங்கள் எவ்விதமான கவலையும் வைத்துக் கொள்ளாமல் தியேட்டர்களில் பிரவேசிக்கின்றனர். அவர்கள் தங்களுடைய தினசரிவாழ்க்கையைப் புதிய முறையில் திருத்தி அமைத்துக் கொள்ள ஆவலாக இருக்கின்றனர். மற்றும் அவர்கள் அந்நிய நாடுகளில் ஜனங்கள் எவ்வாறு வாழ்ந்து வருகின்றனரென்பதையும் அவர்களுடைய நாடகாசிரியர், இலக்கிய ஆசிரியர் முதலியோரின் கருத்துக்களையும் அறிந்து கொள்ள ஆவலாக இருக்கின்றனர். இது காரணமாகவே மாஸ்கோ தியேட்டர்களில் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி முதலிய தேசங்களைச்சேர்ந்த நாடகாசிரியர்கள் எழுதியுள்ள கதைகளை அடிக்கடி காண்பிக்கின்றனர். ஷேக்ஸ்பியர், பர்னட்ஷா, விக்டர் ஹியூகோ முதலியவர்கள் வரைந்த நாடகக் கதைகள் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன. இதேபோல் உள்நாட்டு நாடகாசிரியர்கள் வரைந்த நாடகக்கதைகளும் அடிக்கடி காண்பிக்கப்படுகின்றன. ருஷ்ய மக்கள் தங்களுடைய இலக்கிய ஆசிரியர்களின் பெருமையையும், நாடகாசிரியர்களின் கௌரவத்தையும் காப்பாற்றும் பொருட்டு மகத்தான தியாகங்களைச் செய்யத்தயாராக இருக்கின்றனர். பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளின் மக்கள் தங்களுடைய தேசியக் கௌரவத்தைக் காப்பாற்றுவதற்கே தியாகங்களைச்செய்ய முன் வருகின்றனர். ஆனால் சோவியத் ருஷ்ய மக்கள் தங்களுடைய தேசத்தை மாத்திரமல்ல, கலைகளையும் காப்பாற்றும் பொருட்டுத் தியாகங்களைச் செய்யத்தயாராக இருக்கின்றனர்.

### கல்வி மணம் வீசிய வரலாறு.

புரட்சி ஏற்படுத்துவதற்கு முன்னர் ருஷ்ய மக்களிற் பெரும்பாலர் கல்வி மணம் வீசப் பெறாதவர்களாகவே இருந்தனர். அவர்கள் "அ" என்ற எழுத்தை எழுதச்சொன்னால் யானையின் படத்தை வரைந்து காட்டுவார்கள். இந்நிலைமையிலிருந்த சோவியத் ருஷ்ய மக்கள் இப்பொழுது சிறந்த அறிவாளிகளாகத் திகழ்கின்றனர். அவர்கள் நாடகத்தின் இயல்புகளையும், இலக்கியத்தின் ரகசியங்களையும் நன்கு அறிந்திருக்கின்றனர். இலக்கிய நூல்களை அவர்கள் பெரும் பணம் கொடுத்து வாங்கத்தயாராக இருக்கின்றனர். அவர்களுடையஇலக்கிய அறிவை அபிவிருத்தி செய்வதற்குச் சோவியத் அதிகாரிகள் அவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர்.

### முக்கியமான விதிகள்.

மாஸ்கோ நகரத்திலுள்ள தியேட்டர்கள் சரியாக மணிக்கணக்குப் பிரகாரம் சினிமாக்கதைகளையும் நாடகக் கதைகளையும் காட்டத்தொடங்கிவிடுகின்றன. ஒரு நிமிஷம் பிந்தி வந்தாலும், ஒருவரும் தியேட்டர்களில் அநுமதிக்கப்படமாட்டார்கள். இது காரணமாக அனைவரும் மணிப்பிரகாரம் சரியாகத் தியேட்டர்களுக்கு வந்துவிடுகின்றனர்.

### சோவியத் சர்க்காரின் மனோபாவம்.

மேனாடுகளில் பெரும்பாலனவற்றில் தியேட்டர்களின் சொந்தக்காரர்கள் தங்களுடைய இஷ்டம்போல் ஆபாசமான கதைகளைக் காண்பித்துப் பொது ஜனங்களின் பணத்தைச் சூறையாடிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் மாஸ்கோ நகரத்தில் தியேட்டர்கள் யாவும் சோவியத் சர்க்காரின் மேற்பார்வையிலேயே இருக்கின்றன. பொதுஜனங்களின் அறிவையும், தினசரி வாழ்க்கையையும், அபிவிருத்தி செய்யத் தகுந்த கதைகளையே காட்டுவதற்குச் சோவியத் அதிகாரிகள் அனுமதி வழங்குவார்கள். நாடகத்திலும் சினிமாவிலும் நடிப்பவர்களுக்கு வாரமொன்றுக்கு ஆயிரக்கணக்கான பவுன்கள் ஹோலிவுட் நகரத்தைப்போல கொடுக்கப்படவில்லை. நடிகர், நடிகைகளின் சம்பள விகிதங்கள் யாவும் கட்டுப்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. வாரமொன்றுக்கு 100 பவுனுக்கு அதிகமாகச் சம்பளம் பெறும் நடிகர்களேனும், நடிகைகளேனும் மாஸ்கோ நகரத்தில் கிடையாது. சோவியத் அதிகாரிகள் தங்களுடைய பிரஜைகளின் அறிவு வளர்ச்சிக்கும் முற்போக்குக்கும்தியேட்டர்களே பொறுப்பானவையென்று அபிப்பிராயப்படுகின்றனர். இதரநாடுகளில் தியேட்டர்கள் உல்லாசப் பொழுது போக்கிற்காக அமைக்கப்பட்டிருக்கும் நிலையங்களாகக் கருதப்படுகின்றன. ஆனால் சோவியத் அதிகாரிகள் தியேட்டர்களை அறிவுவளர்க்கும் நிலையங்களாகக் கருதுகின்றனர்.

### சிறுவர்களின் தியேட்டர்கள்.

சோவியத் ருஷ்யாவின் வருங்காலம் அதன் சிறுவர்களையும், சிறுமிகளையும் பொருத்திருக்கின்றதென்பதை சோவியத் அதிகாரிகள் நன்கு அறிந்திருக்கின்றனர். சிறுவர்களுக்கும், சிறுமிகளுக்கும் பிரத்தியேகமாகத் தியேட்டர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தியேட்டர்களில் எப்பொழுதும் வேடிக்கையான கதைகளும் உயர்ந்த கருத்துக்களடங்கிய நாடகங்களும் காண்பிக்கப்படுகின்றன. தினந்தோறும் ஆயிரக்கணக்கானகுழந்தைகள் மேற்கூறிய தியேட்டர்களுக்கு விஜயம் செய்கின்றனர்.

### வினோதக் கல்லூரிகள்.

தியேட்டர்களில் நடிப்பதற்கும், அவற்றின் நிர்வாகஸ்தர்களாவதற்கும், நாடகக் கதைகளையும், சினிமாக்கதைகளையும் எழுதுவதற்குப் பயிற்சி கொடுப்பதற்கு மாஸ்கோ நகரத்தில் கல்லூரிகள் இருக்கின்றன. இக்கல்லூரிகள் யாவும் சோவியத் சர்க்காரின் ஆதரவிலேயே நடைபெறுகின்றன. இனி நாடகக்கதைகளையும் சினிமாக்கதைகளையும் சரியான முறையில் எவ்வாறுகவனிப்பதென்பதைப் பொதுஜனங்களுக்குப் புகட்டுவதற்குக் கல்லூரிகள் ஏற்படக்கூடும்.

## சேலம் முனிசிபாலிட்டி

### வைஸ் சேர்மன் தேர்தல்.

சேலம் முனிசிபாலிட்டிக் கூட்டம் 23-11-34ந் தேதி சேர்மன் தோழர் எஸ். ஏ. அய்யாசாமி அவர்களின் தலைமையில் வைஸ் சேர்மன் தேர்தல் நடைபெற்றது. அதில் தோழர் ஜி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் போட்டியின்றி வைஸ் சேர்மனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# அதுவும் சொல்லுவார்கள் இன்னமும் அனேகம் சொல்லுவார்கள்.

இந்திய சட்டசபைத் தேர்தல்கள் நடந்து விட்டன.

இந்த மாகாணத்தின் பொதுத் தொகுதியில் பத்து ஸ்தானங்களில் ஐந்து ஸ்தானங்கள் பார்ப்பனர்கள் கைப்பற்றி விட்டார்கள்.

அதாவது தோழர்கள்:—

1. S. சத்தியமூர்த்தி அய்யர்,
2. K. நாகேஸ்வரராவ் பந்துலு,
3. டாக்டர் ராஜன் அய்யங்கார்,
4. V. V. கிரி பந்துலு,
5. T. N. அநந்தசயனம் அய்யங்கார் ஆகிய 5 பேர்போக பாக்கி ஸ்தானங்களில் தோழர் N. G. ரங்கா அவர்கள் பார்ப்பனரா அல்லாதவரா என்பது நமக்கு தக்கவில்லை. மற்ற நான்கு ஸ்தானங்களில் ஒன்று கிருஸ்தவர் ஆனாலும் அந்தக் கிருஸ்தவர்கள் சுவற்று மேல் பூனையாய் இருந்தாலும் அவரையும் தோழர் ரங்கா அவர்களையும் பார்ப்பனரல்லாதார் கூட்டத்திலேயே சேர்த்துக் கொண்டு கணக்குப் பார்த்தாலும் கூட 100-க்கு 3 பேர்களாய் உள்ள வகுப்பினர்கள் 100-க்கு 50 ஸ்தானங்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆனால் அவர்கள் வாயில் பேசும்போது மாத்திரம் தாங்கள் வகுப்பு வாதிகள் அல்லவென்றும் தகுதியானவர்கள் கிடைத்தால் எல்லா ஸ்தானங்களையும் பார்ப்பனரல்லாதார்களுக்கே கொடுத்து விடுகிறோம் என்றும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் காந்தியார் உள்பட எல்லாப் பார்ப்பனர்களும் பேசுகின்றார்கள்.

அப்படியாவது தகுதி உள்ள பார்ப்பனரல்லாதார்களுக்கு பகுதியோ அல்லது மூன்றில் ஒரு பங்கோ நான்கில் ஒரு பங்கோ ஆவது கொடுக்கிறார்களா என்று பார்த்தால் பார்ப்பனர்கள் கண்களுக்கு தோழர்கள் முத்துரங்க முதலியார், அவனாசிலிங்கம் செட்டியார், குமாரசாமி ராஜா ஆகியவர்கள் தான் தகுதி உள்ளவர்கள் என்று தோன்றுவதாய் சொல்லுகின்றார்கள்.

தகுதி என்பதற்கு அருத்தம் என்ன என்றால் தங்களுக்கு தகுதி உள்ளவர்கள் என்றும், தங்கள் மூலமாய் தங்கள் தாசர்களாய் இல்லாத எவரும் எப்படிப்பட்டவரும் தகுதி இல்லாதவர்கள் என்றுமேஹிட்லரிசம் பேசுகிறார்கள். இந்த லக்ஷணத்தில் தோழர் அன்சாரி அவர்கள் சென்னை தேர்தலில் வகுப்புவாதம் ஒழிக்கப்பட்டு விட்டது என்று மகிழ்ச்சி அடைகின்றார்.

தோழர் காந்தியார் சத்தியம் வெற்றி பெற்றுவிட்டதுஎன்றும் பந்தயம் ஜெயித்து விட்டது என்றும் தந்தி அடிக்கிறார்-

வகுப்பு வாதத்திற்கும், சத்தியத்திற்கும் இவ்விருபெரியார்களின் பாஷ்யம் என்ன என்பதைப்பற்றி நாம் விவரிக்க வேண்டியதில்லை என்றே கருதுகின்றோம். சென்னைப்பார்ப்பனர்கள் தோழர் ராஜகோபாலாச்சாரியார் உள்பட தேர்தல் விஷயத்தில் செய்த பிரசாரத்தைக் கண்ட ஒருவர் அல்லது தெரிந்த ஒருவர் சத்தியம் வெற்றி பெற்று விட்டது என்று சொல்லப்படுவதை ஒப்புக் கொள்ள வேண்டுமானால் அவர் யோக்கியராய் இருந்தால் சத்தியம் என்கின்ற வார்த்தை எந்த பாஷையிலும் எந்த அகராதியிலும் எப்படிப்பட்ட மாறு பெயரிலும் உச்சரிப்பிலும் கூடவே கூடாது என்றுதான் சொல்லுவார்.

நிற்க நம் கையே நம் கண்ணைக்குத்த முனைந்திருக்குமானால் பிறகு எந்த அவயவத்தைக் கொண்டு அதைத்தடுப்பது என்பது நமக்கு விளங்க வில்லை.

இந்திய சட்ட சபைத் தேர்தல்கள் என்றாலேநம்மாகாணபார்ப்பனரல்லாதார்களுக்கு மிகஅலக்ஷியமான காரியமாகும். ஏனெனில் அதன் மூலம் யாரும் மந்திரியாக முடியாது என்பதுடன் ஜில்லா போர்ட்பிரசிடெண்ட், சேர்மென் முதலிய பதவிகளும் பெறமுடியாது. வேறுவித உத்தியோக சிபார்சு முதலிய காரியங்களோ மந்திரிகள் தயவோ அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தயவோ பெறவும் முடியாது. ஆகையால் அதைப்பற்றி யாரும் லக்ஷியம் செய்வதில்லை என்பதோடு இப்படிப்பட்ட "அனுவசியமான" காரியத்துக்கு 10 ஆயிரம் 15 ஆயிரம் ரூபாய்கள் செலவு செய்யவும் எவரும் துணிவதில்லை.

இந்த தேர்தலில் தோழர் நாகேசுவரராவுக்கு 40 ஆயிர ரூ செலவும் டாக்டர் ராஜனுக்கு 20 ஆயிரம் ரூ செலவும் ஆயிருப்பதாக சொல்லுகிறார்கள்

பார்ப்பனர்களுக்கு பலவழிகளிலும் ஊரார்பணங்கள் தாராளமாய் இருந்திருக்கின்றது. வடநாட்டு செல்வவான்களை ஏமாற்றி தருவித்த பணங்களும், கதர் மதுவிலக்கு தீண்டாமை விலக்கு ஆகியவைகளுக்கு சேகரித்த பணங்களும் அவற்றிற்காக அமைத்திருந்த ஆட்களும் தாராளமாய் வேலைக்கு உதவி இருக்கின்றன.

அதுவுமல்லாமல் இந்தியசட்டசபைக்கு ஒரு நபர் போனால் அது அவருடைய சொந்த நன்மைக்குதான் பயன் படுமே தவிர அதனால் மற்றபடி அவரை ஆதரிக்கின்றவர்களுக்கு எவ்வித பயனும் அளிப்பதில்லை என்கின்ற ஒரு எண்ணமும் மக்கள் ஒன்று சேர்ந்து அபேட்சகரை ஆதரிக்கச் செய்யாமல் செய்து விடுகின்றது.

ஆகவே பல "சரியான காரணங்கள்" இந்திய சட்ட சபைக்கு பார்ப்பனர்களையும், அவர்கள்கண்களுக்குத் தக்க ஆட்கள் என்பவர்களையும் மாத்திரமே வெற்றிபெறச் செய்தது என்றால் இதில் அதிசயமெதுவும்இல்லை.

தோழர் ஷண்முகம் தோல்விக்கு இந்த சமாதானங்கள் போராது என்று சொல்லப்படுமானாலும் போதுமான சமாதானங்கள் முன்னமேயே சொல்லப்பட்டுவிட்டது என்றே கருதுகின்றோம்.

சிங்கார ரசத்தில் "கண்டிதா நாயகி" மற்றொரு பரகிய நாயகியைப்பார்த்து அதுவும் சொல்லுவாள், இன்னமும் அனேகம் சொல்லுவாள் அவள் மீதிற்குற்றமென்னடி என்று சொன்ன பாட்டைப்போல் இந்த நிலையில் நம் பார்ப்பனர்களும் ஆச்சாரிகளும் காந்திகளும் சூதுப்பந்தயத்தில் தாங்கள் வெற்றி பெற்று விட்டதைப் பற்றி அவர்கள் அதுவும் சொல்லுவார்கள்இன்னமும்அனேகம் சொல்லுவார்கள் அவர்கள் மீது குற்றமென்னய்யா என்று தான் கூறியாகவேண்டும்.

---

# I. C. S. செங்கோடையன் முடிவெய்தினார்.

ஐ. சி. எஸ். செங்கோடையன் அவர்கள் ஒரு சிறுபருவில் காயம் பட்டதின் காரணமாக இரத்தம் விஷமாகி 29ந்தேதி சென்னையில் காலமானதாகக் கேட்டு மிகவும் வருந்துகிறோம்.

அவர் ஈரோட்டிற்கு 6-வது மைலில் உள்ள நஞ்சை ஊத்துக்குளி என்னும் கிராமத்தில் உள்ள ஒரு கொங்கு வேளாள குலத்தில் பிறந்து வளர்ந்து ஈரோட்டிலும் கரூரிலும் கல்வி கற்று அவரது திறமையினால் நமது சர்க்காரால் லண்டனுக்கு ஐ. சி. எஸ். பரீக்ஷைக்கு அனுப்பப்பட்டு அதில் தேறி கலெக்டராக ஆனவர். கோயமுத்தூரில் பிரபல குடும்பஸ்தராய் இருக்கும் தோழர் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களது வீட்டில் அவரது சகோதரர் தோழர் பழனிச்சாமிக்கவுண்டர் அவர்களது குமாரத்தியை மணந்தவர். சமீபத்தில் அவர் அனந்தப்பூர் ஜில்லாவுக்கு கலெக்டராக மாற்றப்பட்டதாகக்கேள்வி:—

மிகவும் வருணாச்சிரமச் சார்பான வீட்டில் பெண் கொண்டிருந்தாலும் கூட தோழர் செங்கோடையன் அவர்கள் சீர்திருத்தத் துறையில் மிகுதியும் ஆர்வமுடையவர்.

அவர் முதல் முதல் 1919ல் ஐ. சி. எஸ். பாஸ்செய்து விட்டு 1920ல் இங்கு வந்தசமயம் அவருக்காக சிலர் ஈரோடு முனிசிபல் ஆபீசில் ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தின சமயத்தில் ஒரு பெருங்கூட்டத்தில் அவர் பதிலளிக்கும் போது "இந்தியாவில் என்றைய தினம் ஜாதி ஆணவம் மறைவு படுகின்றதோ அன்று தான் இந்தியா விடுதலை பெற்று ஒரு சுதந்திர நாடாக உலகத்தில் விளங்க முடியும்" என்று சொன்னவர்.

அப்படிப்பட்ட ஒரு சீர்திருத்த வாதியும், இன்னமும் எவ்வளவோ முன்னுக்கு வரக்கூடியவரும், தமிழ்நாடு கொங்கு வேளாள சமூகத்துக்கு திலகமாய் இருந்தவரும், நமது தாலூக்காவாசியும், நமது அயலாரும் [பக்கத்து பூமிக்காரரும்] ஆகிய தோழர் சொங்கோடையார் முடிவெய்தியது கோவை ஜில்லாவுக்கே பெரியதொரு நஷ்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு அவர்களது குடும்பத்தாருக்கும், தோழர் வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த துக்கத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அவருக்கு இப்போது வயது 39. ஒரு பெண் குழந்தையும், மனைவியும், 65 வயதுடைய தாயாரும், 45 வயதுடைய ஒரு தமயனும் இருக்கிறார்கள்.

## "இன்னமும் பார்ப்பனர்—அல்லாதார் பிரச்சினை ஏன்?"

"பார்ப்பனர்களைஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக்கொள்வது என்று தீர்மானம் செய்துகொண்டபிறகு பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்என்கின்ற பிரச்சினை ஏன் தேர்தலில் உபயோகப்படுத்தப்பட்டது?" என்று சிலர் கேழ்வி கேட்கின்றார்கள்.

இதற்கும் சமாதானம் சொல்லக்கடமைப்பட்டிருக்கின்றோம்.

ஜஸ்டிஸ் கட்சியில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்வது என்கின்ற பிரச்சினை வந்த காலங்களில்அதாவது ஜஸ்டிஸ் கட்சியாரின் ஒரு சாதாரண கூட்டத்திலும், ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு கூட்டத்திலும் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் எதற்காக சேர்த்துக் கொள்ளப்படுகின்றது என்றும் எப்படிப்பட்டவர்களை சேர்த்துக் கொள்வது என்றும், இதுவரை ஏன்சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதைப்பற்றியும், சேர்த்துக் கொண்ட பிறகும் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப்பற்றியும் விபரமாய் பேசியிருக்கின்றார்.

அதை ஒருதரமாவது படித்துப் பார்ப்பவர்களுக்கு பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார்பிரச்சினை அடியோடு போய்விட வேண்டியது தானா அல்லது இன்னமும் இருக்கவேண்டியது தானா என்பது நன்றாய் விளங்கும்.

ஜஸ்டிஸ் கட்சியில்பார்ப்பனர்களைசேர்த்துக்கொள்வது என்பதில் ஒரு முக்கியமான நிபந்தனை இருக்கின்றது என்பதை யாவரும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது மக்களுக்கு சமுதாயத்துறையில் சகல வகுப்புகளுக்கும் சமசுதந்திரமும், அரசியலில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமும் அளிக்கசம்மதப்படும்பார்ப்பனர்களைத்தான்ஜஸ்டிஸ் கட்சியில்சேர்த்துக்கொள்வது என்கின்ற நிபந்தனை இருக்கிறது. இதையே பார்ப்பனர்களுக்காக இப்போது சிபார்சு பேசும் தர்மவான்கள் மறந்துவிட்டதாகத் தெரிகின்றது.

எல்லோரையும் காங்கிரசில் சேர்த்துக்கொள்வது என்று காங்கிரசுக்காரர்கள் தீர்மானம் செய்துகொண்ட பிறகு ஏன் இந்தப்பார்ப்பனர்கள் காங்கிரசின் பெயரால் ஜஸ்டிஸ் கட்சியைவெட்டிப்புதைக்கவேண்டும் என்றும் பார்ப்பனரல்லாதார் கட்சியைஒழிக்கவேண்டும் என்றும் பேசுகிறார்கள்—கருதிஇருக்கின்றார்கள்? என்று கேட்டால் இந்த பார்ப்பனர்களுக்காக சிபார்சு பேசும் மேதாவிகள் என்னபதில் சொல்லுவார்களோ அதைதான் "பார்ப்பனர்களை சேர்த்துக்கொண்ட பிறகு ஜஸ்டிஸ் கட்சிக்காரர்கள் பார்ப்பனர்—அல்லாதார் என்பதைப் பற்றி ஏன் பேசுகின்றார்கள்" என்று கேழ்க்கின்ற கேழ்விக்கு பதில் சொல்ல வேண்டி இருக்கின்றது.

சகல வகுப்பாருக்கும் சமுதாயத்துறையில் சமசுதந்திரம் கொடுக்கவும், சகல வகுப்பாருக்கும் அரசியல் துறையில் வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கவும் சம்மதித்து ஒரு பார்ப்பனராவது இது வரையில் ஜஸ்டிஸ் கட்சியில் வந்துசேர்ந்திருக்கின்றார்களா என்றுகேட்கின்றோம்.

காங்கிரசை ஒப்புக்கொள்ளாத பார்ப்பனர்களோ அல்லது மிதவாதம் பேசும் பார்ப்பனர்களோ அல்லது சர்க்காரை ஆதரிக்கும் பார்ப்பனர்களோ யாராவது ஒரு பார்ப்பனராவது இதுவரை வந்துசேர்ந்து இருக்கின்றார்களா என்றுபார்த்தால் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினை பார்ப்பனர்களிடத்திலேயே இருக்கின்றதா அல்லது போய்விட்டதா என்று கேட்கின்றோம்.

ஆகவே பார்ப்பனர்களை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்துக்கொள்ளுவது என்பது ஒரு நிபந்தனையின் பேரில் என்றும், அந்த நிபந்தனையை இதுவரை எந்தப்பார்ப்பனரும் ஒப்புக்கொள்ளவில்லை என்றும் நிபந்தனையில் பற்றுள்ளவர்கள் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பிரச்சினையை அடியோடு கைவிட்டு விட முடியாதென்றும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

### மதஸ்தாபனத்திற்கு தடை.

### ஜேர்மனியில் அமுல். சொத்துக்கள் பறிமுதல்.

ப்ரஷ்யாவிலுள்ள மதக் கூட்ட சங்கங்களுக்கெல்லாம் தடை விதித்துஜெனரல் கொயரிங்ஙர் கட்டளை பிறப்பித்துள்ளார். ஷை ஸ்தாபனத்தின் சொத்துக்களை யெல்லாம் பறிமுதல் செய்து விட்டார்கள். மார்க்ஸ் கட்சியைச் சேர்ந்த பல மாஜி தலைவர்களுக்கு ஷை ஸ்தாபனத்தில் அங்கத்தினர் பதவி அளித்திருக்கிறார்களாம். சிலரை சில ஸ்தாபனங்களுக்கு தலைவர்களாகக் கூட நியமித்திருக்கிறார்களாம். ஷை தடை யுத்திரவிற்கு அதுதான் காரணம்.

## "வகுப்புவாதம் கூடாது, ஆனால் 100—க்கு 50—நமக்கே வேண்டும்."

சென்னை மாகாண சார்பாய் இந்திய சட்டசபை பொதுத்தொகுதிக்கு 10ஸ்தானங்களுக்கும் தேர்தல் நடந்து விட்டது. அவற்றின் முடிவு.

சென்னை நகரத்திற்கு,
தோழர் சத்தியமூர்த்தி அய்யர் (பார்ப்பனர்)

தஞ்சை திருச்சிக்கு.
தோழர் Dr. ராஜ அய்யங்கார் (பார்ப்பனர்)

கிருஷ்ணா கோதாவரி.
தோழர் நாகேஸ்வரராவ் பந்துலு (பார்ப்பனர்)

சித்தூர்.
தோழர் யம் அனந்தசயன அய்யங்கார் (பார்ப்பனர்)

கஞ்சம் விசாகபட்டணம்.
தோழர் வி. வி. கிரிபந்துலு (பார்ப்பனர்)

குண்டூர் நெல்லூர்.
தோழர் யன். ஜீ. ரங்கா (தெரியாது)

மலையாளம்.
தோழர் சாமுவேல் ஆரன் (கிருஸ்தவர்)

கோவை, சேலம், வடஆற்காடு.
தோழர் டி. எஸ். அவனாசிலிங்கம் செட்டியார் (பார்ப்பனரல்லாதார்)

செங்கல்பட்டு தென்ஆற்காடு.
தோழர் சி. என். முத்துரங்க முதலியார் பார்ப்பனரல்லாதார்)

மதுரை ராமநாதபுரம்.
தோழர் பி. எஸ். குமாரசாமி ராஜா (பார்ப்பனரல்லாதார்)

ஆகவே மேற்படி பத்து ஸ்தானங்களில் 5-பார்ப்பனர்களும், 1-கிருஸ்தவரும், 1-நமக்கு விபரம் தெரியாதவரும், 3-பார்ப்பனரல்லாதாரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். எனவே பார்ப்பனர்களே பார்ப்பனரல்லாதாரை விட மெஜாரிட்டியாய் வெற்றி பெற்றிருக்கிறார்கள். வகுப்பு வாதம் கூடாது. வகுப்பு பிரதிநிதித்துவம் கூடாது என்று பார்ப்பனர்கள் கூப்பாடுபோட்டு தங்கள் வகுப்பை உயர்த்திக்கொள்ளும் வகுப்பு வாதமும் தங்கள் வகுப்புக்கு அதிக ஸ்தானம் பெற்றுக்கொள்ளும் வகுப்பு வாரிப்பிரதிநிதித்துவமும் அடைவதை இப்போதாவது வகுப்பு வாதம் கூடாது என்று சொல்லும் பார்ப்பனரல்லாத "வீரர்"கள் (துரோகிகள்) உணர்வார்களாக.

## இந்திய கவர்ன்மெண்டுக்கு அறிவிப்பு.

இந்தியசட்டசபைத் தேர்தலானது காங்கிரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பலரால் மோசம், பொய், பித்தலாட்டம், சூட்சி, திரித்துக்கூறுதல் ஆகிய எண்ணங்களை மலிவாய் உபயோகப்படுத்தியும், மற்றும் மத சம்மந்தமான புராணப்பிரசாரங்கள் செய்து மக்களுக்கு மூடநம்பிக்கைகளையும் வெறியையும் உண்டாக்கியும் ஓட்டர்களை பெரும்பாலும்ஏமாற்றிஓட்டுகள் பெற்று முடிவுகள் ஏற்பட்டிருப்பதால் தேர்தலில் இந்நாட்டு மக்களுடைய சரியான—உண்மையான பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டதாக கருத முடியாமல் போய் விட்டது.

ஆதலால் அரசாங்கத்தார் உண்மையான பிரதிநிதிகள்சட்ட சபையில் அமருவதற்கு தகுந்த ஏற்பாடு செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## கல்கத்தாவில் கடன் மறுப்புச் சங்கம்.

ஒரு வாதியின் டிக்கிரியைநிறைவேற்றுவதற்காக போலீசார் பந்தோபஸ்துடன் சென்ற போது கடன் மறுப்புச் சங்கத்தைச் சேர்ந்த ஆட்கள் கூட்டமாகக்கூடி போலீசாரையும் வாதி ஆட்களையும் எதிர்த்து விரட்டி அடித்திருக்கிறார்கள். இதன் மீது நவகாலிடிப்டி மாஜிஸ்டிரேட் இடம் 37 முஸ்லீம்கள் மீதும் போலீசார் பிராது செய்ததை விசாரித்த மாஜிஸ்டிரேட் கேசைத்தள்ளிவிட்டார். மாகாண சர்க்கார் ஹைக்கோர்ட்டு இக்கேசை புனர் விசாரணை செய்ய மனுக்கொடுத்ததில் எதிரிகளுக்கு வாரண்டு அனுப்பப்பட்டிருக்கிறது என்று தெரிய வருகிறது.

# வருணாச்சிரமமும் சுயமரியாதையும்.

இந்திய சட்டசபைத் தேர்தலில் வருணாச்சிரமக்காரர்களை சுயமரியாதைக்காரர்கள் ஆதரித்ததாகவும் அதனால் சுயமரியாதைக்காரர்களுக்கு யாதொரு கொள்கையும் இல்லை என்றும் சில பத்திரிக்கைகள் எழுதி வருகின்றன.

அது மாத்திரமல்லாமல் சில தோழர்களும் அந்தப் படியே பேசி வருகின்றார்கள்.

இதற்கு நம்மை சமாதானம் சொல்ல வேண்டுமென்று இரண்டொரு நண்பர்கள் எழுதியும் இருக்கிறார்கள்.

சுயமரியாதைக்காரர்கள் அந்தப்படி செய்தார்களா இல்லையா என்பது ஒரு புறமிருந்தாலும் எலக்ஷன் பிரச்சினை இன்னதென்றும் ஒவ்வொருவரும் என்ன பிரச்சினையின்மீது பிரச்சாரம்செய்தார்கள் என்றும் தெரிந்து கொண்டால் பிறகு யார் யார் யாருடன் சேர்ந்து வேலை செய்ய வேண்டியதென்பதையும் யார் யார் யாருக்கு உதவி செய்ய வேண்டியது நியாயம் என்பதையும் ஒருவாறு முடிவு செய்து கொள்ளலாம்.

காங்கிரசுக்காரருடைய பிரச்சினையெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியை எப்படியாவது ஒழித்து விட வேண்டும் என்பதும் அரசியலில் பார்ப்பனரல்லாதார் பெற்றிருக்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை அழித்துவிட வேண்டும் என்பதும், மற்றும் பல துறைகளில் பார்ப்பனரல்லாதார் அடைந்திருக்கும் சிறிது முன்னேற்றத்தையும் கெடுத்து சகல துறைகளிலும் பார்ப்பனர்களே ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதுமேயாகும்.

இந்தக் கொள்கைகளை பிரச்சினையாக வைத்தே தென்னாட்டில் உள்ள சகல பார்ப்பனரும் அதாவது உத்தியோகப் பார்ப்பனர், ஹைகோர்ட் ஜட்ஜி முதல் பெஞ்சு கோர்ட் வரை உள்ள அதிகாரிப் பார்ப்பனர்கள் சகல வக்கீல் பார்ப்பனர்கள் டாக்டர் பார்ப்பனர்கள் உபாதானம் சவுண்டி, புரோகிதம், மாமா பார்ப்பனர்கள் எல்லோரும் மற்றும் காப்பிக்கடை, வக்கீல் குமாஸ்தா, ஓட்டல் பார்ப்பனர்கள் யாவரும் பள்ளிப்பார்ப்பனர் உள்பட ஒன்று சேர்ந்து ஒரே மூச்சாக காங்கிரசை ஆதரித்து இருக்கிறார்கள். அனேக பார்ப்பனர்கள் தங்கள் வருணாச்சிரமத்தை அனுசரிக்கின்றவர்களாயிருந்தும், காங்கிரசை அனுசரிக்காதவர்களாயிருந்தும் எலக்ஷன் பிரச்சினையானது பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார்என்கிற பிரச்சினையாகவே இருக்கின்றது என்று தெரிந்ததினாலேயே காங்கிரஸ் காங்கிரஸ் என்று சொல்லிக் கொண்டு காங்கிரசில் கலந்து வேலை செய்து இருக்கிறார்கள். தென்னாட்டு பார்ப்பனர்கள் காங்கிரஸ் போர்வைக்குள் இருந்திருந்தாலும் கூட அவர்களுடைய கவலை எல்லாம் எப்படியாவது சர் ஷண்முகம் சட்டசபை மெம்பர் ஆகக்கூடாது என்பதும், ஒரு சமயம் சர் ஷண்முகம் சட்டசபை மெம்பர் ஆகி விட்டாலும் கூட இந்திய சட்ட சபையில் அவர் பிரசிடெண்டாக ஆகக்கூடாது என்றும் கவலை வைத்தே ஒவ்வொரு தொகுதிக்கும் வேலை செய்திருக்கிறார்கள்.

வருணாச்சிரமக்காரர்களோ காங்கிரசை எதிர்த்து காங்கிரசுக்காரரை தோற்கடிக்க வேண்டும் என்பதையே இந்தத் தேர்தலைப் பொருத்த மட்டில் முக்கிய கருத்தாய்க்கொண்டவர்களே தவிர ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைக்க வேண்டும் என்கின்ற பிரச்சினையையோ சர் ஷண்முகம் பிரசிடெண்டாகக் கூடாது என்கின்ற பிரச்சினையையோ தேர்தல் பிரசாரமாகக்கொண்டவர்கள் அல்ல என்பது நமதபிப்பிராயம்.

அன்றியும் வருணாச்சிரமக்காரர் இந்திய சட்ட சபையில் பார்ப்பனரல்லாதாருக்கோ அல்லது சீர்திருத்தக்காரருக்கோ காங்கிரசுக்காரரை விட அதிகமான கெடுதி ஒன்றும் செய்து விட முடியாது.

ஏனென்றால் காங்கிரசுக்காரர் சமூக சீர்திருத்த சம்மந்தமான எவ்வித மசோதாவையும் கொண்டு வருவதில்லை என்றும் வேறு யாராவது கொண்டு வந்தாலும் அதை ஆதரிப்பதில்லை என்றும் எதிர்ப்பதாகவும் வாக்கு கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் வருணாச்சிரமக்காரர்கள் இந்திய சட்ட சபையில் என்ன கெடுதி செய்து விட முடியும் என்பது நமக்கு விளங்க வில்லை.

அன்றியும் கொல்லங் கோடு ராஜா, ராஜா பகதூர், கிருஷ்ணமாச்சாரி முதலியவர்கள் தோழர் ஷண்முகத்தை ஆதரிப்பதாகவும், ஜஸ்டிஸ் கட்சியிடம் தங்களுக்கு வைரமோ துவேஷமோ இல்லையென்றும் வெளிப்படையாகச் சொல்லி இருப்பதுடன் சில சமயங்களில் சர் ஷண்முகத்தை ஆதரித்தும் இருக்கிறார்கள்.

வருணாச்சிரமம் சீர்திருத்தம் என்பவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரணான அபிப்பிராயமானாலும் இதில் வஞ்சகம், சூது, சதி, மோசம், பித்தலாட்டம், ஏமாற்றம், நாணயக் குறைவு ஏதும் இல்லை என்றே கருதுகிறோம்.

ஆனால் காங்கிரசின் போர்வை போர்த்த பார்ப்பனர்களே இவை சகலத்தையும் அஸ்திவாரமாக வைத்தே ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப் புதைப்பது, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தை ஒழிப்பது சர் ஷண்முகத்தைக் கவிழ்ப்பது என்கின்ற பிரச்சினையை வைத்து வேலை செய்திருக்கிறார்கள். இந்த நிலையில் அறிவுள்ள ஒருவன் காங்கிரசை ஆதரிப்பதா எப்படியாவது காங்கிரசை எதிர்ப்பதா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுமாய் வாசகர்களை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

காங்கிரசுக்காரர்கள் வெற்றி பெற்ற பிறகு அவர்கள் பேசிய பேச்சில் இருந்தே நாம் கூறுவது சரி என்று நன்றாய் விளங்கி இருக்கலாம். தோழர்கள் சத்தியமூர்த்தி அய்யர், ராஜகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜம் அய்யங்கார் ஆகியவர்கள் தாங்கள் வெற்றி பெற்றதன் மூலம் ஜஸ்டிஸ் கட்சி 500 கஜ ஆழத்தில் வெட்டிப் புதைக்கப்பட்டு விட்டதாகவும் வகுப்புவாதம் என்னும் பாாப்பனர்—பார்ப்பனரலலாதார் என்னும் விஷயம் அடியோடு ஒழிந்து விட்டது என்றும் பேசி மகிழ்ந்து இருக்கிறார்கள்.

சுயமரியாதைக்காரர்கள் தாங்கள் ஜஸ்டிஸ் கட்சியில் எவ்வித சம்மந்தமும் வைத்துக் கொண்டிருக்கவில்லை என்றோ, அல்லது தங்களுக்கு இப்போது பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் என்கின்ற விஷயமே இல்லை என்றோ சொல்லிக் கொள்ளுவதானால் அவர்கள் தங்களைப் பொருத்த வரை எலக்ஷனில் கலந்து கொள்ளாதிருந்தது ஞாயம் என்று கருதிக் கொள்ளலாம்.

மற்றபடி சுயமரியாதைக்காரர்கள் என்பவர்கள் காங்கிரசுக்கு எதிராக இருந்ததோ, அல்லது காங்கிரசுக்கு எதிராக இருந்தவர்களை ஆதரித்ததோ ஜஸ்டிஸ் கட்சியை ஆதரித்ததோ எவ்விதத்திலும் தப்பிதம் என்று சொல்லி விட முடியாது.

ஆகவே சுயமரியாதைக்காரர்கள் எலக்ஷனில் நடந்து கொண்டது எலக்ஷனில் நின்ற ஒவ்வொரு கட்சிக்காரரும் அவரவர்கள் என்ன பிரச்சினையின் மீது எலக்ஷன் பிரசாரம் செய்தார்களோ அந்தப் பிரச்சினையைப் பொருத்தே ஒழிய மற்றபடி வேறு வித மான காரியங்களைக் குறித்து அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

## வர்த்தகர்களுக்கு ஆபத்து.
### தரகர்கள் வேண்டாம்.

சரக்குகளை விற்பனை செய்பவருக்கும், வாங்குபவருக்கு மிடையில் அனுவசியமாகத் தரகர்களாக நிடுநிலையில் இருந்து லாபம் அடிப்பவர்களைக் கூடியமட்டிலும் ஒழித்துவிட வேண்டுமென ஜெர்மன் சர்க்கார் பலவிதமான உத்திரவுகளை அமுல் நடத்துகிறது. இவ் விஷயம் அகிலை சர்வாதிகாரியான டாக்டர் கோர்டலர் என்பவரின் ஆதிக்கத்திலுள்ளது. இன்னும், பொருள் உற்பத்தி செய்வோரும், மொத்த வியாபாரிகளும், அகிலை சர்வாதிகாரியின் சம்மதத்தைப்பெறாமல் விலையை உயர்த்தக்கூடாது; எந்தெந்த சந்தர்ப்பத்தில் தரகர்கள் இருக்க அனுமதி தரலாம்? என்பதை நிர்ணயிக்க வேண்டியதும் இவர்தான்.

---

## தஞ்சை ஜில்லா சு. ம. மகாநாடு.

தஞ்சைமாநகரில் தஞ்சை ஜில்லா நான்காவது சுயமரியாதை மகாநாட்டைக் கூட்ட வேண்டுமென்று இச் சங்கம் தீர்மானித்து இருப்பதால் இதைப் பற்றிய அபிப்பிராயத்தை ஜில்லாவிலுள்ள சுயமரியாதைச் சங்கங்கள் இச் சங்கக் காரியதரிசிக்கு தெரியப்படுத்த வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறது.

இந்த ஜில்லாவிலுள்ள சுயமரியாதைச் சங்கங்கள் தங்கள் முழுவிலாசங்களையும் தெரியப்படுத்தும் படி கேட்டுக் கொள்ளுகிறது.

டி. ஏ. ஏகாம்பரம்,
காரியதரிசி,
சுயமரியாதைச் சங்கம்,
சாமந்தாங்குளம், வடகரை,
தஞ்சாவூர்.

# பகுத்தறிவு.

ஈரோடு, 1934-ஹு டிசம்பர்-மீ 2-உ


## வகுப்பு வாதிகளே வெற்றியடைந்தார்கள்.

சென்னை மாகாணத்தில் நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்ற வீரர்கள் "வகுப்பு வாதம் தோற்று விட்டது" என்றும் "வகுப்புவாதத்தை ஜனங்கள் விரும்ப வில்லை" என்றும் பேசி மக்களை மனதார ஏய்க்கின்றார்கள். ஆனால் உண்மையில் பார்க்கப் போனால் கடுகளவு அறிவுள்ள எவனும் வகுப்பு வாதம் வெற்றி பெற்றுவிட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

இன்று இந்த நாட்டில் உள்ள ஜஸ்டிஸ் கட்சி ஆகட்டும் அல்லது சுயமரியாதைக்கட்சியாகட்டும் உண்மையில் வகுப்பு வித்தியாசங்கள், வகுப்பு உயர்வு தாழ்வுகள், வகுப்புப்பிரிவுகள் ஆகியவை ஒழிய வேண்டுமென்று பாடுபடுகின்றனவா அல்லது இருக்கவேண்டுமென்று பாடுபடுகின்றனவா என்று கேழ்க்கின்றோம்; யாரைக்கேழ்க்கின்றோம் என்றால் ஜஸ்டிஸ் கட்சியும், சுயமரியாதைக் கட்சியும் வகுப்புவாதக் கட்சி என்று யார் யார் சொல்லுகின்றார்களோ அவர்கள் ஒவ்வொருவரையுமே கேழ்க்கின்றோம்.

தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஆகட்டும், தோழர் சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் தானாகட்டும் உண்மையில் இந்தியாவில் மக்களிடையில் ஜாதியின் பேராலோ, சமையத்தின் பேராலோ, உள்வகுப்பின் பேராலோ எவ்வித பாகு பாடு—பிரிவினை—வித்தியாசம் ஆகியவைகள் இருக்கக் கூடாது என்பதை ஒப்புக்கொள்ளுகிறார்களா என்று கேழ்க்கின்றோம். இவ்விருவர்களது பூணூல், உச்சிக்குடுமி, நாமம், விபூதி, நித்திய கர்மம் ஆகியவைகளின் பேதங்கள் மனிதத்தன்மையில் எவ்வளவு மாறுதல்களை காட்டுகிறது என்பதும், இது போலவே மற்ற மக்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசங்கள்—பேதங்கள்—மாறுதல்கள் இருந்து வருகின்றன என்பதையும் யோசித்துப் பார்க்கும் போது வகுப்பு வாதத்துக்கும், வகுப்புப் பிரிவினைக்கும் இவர்கள் உட்பட்டவர்களா இல்லையா என்று கேழ்க்கின்றோம்.

இவற்றை ஒரு சமயம் வெகு சாதாரணமாய் கருதி விடலாம். இவற்றால் எல்லாம் ஒன்றும் முழுகிப்போய் விடவில்லை என்று சொல்லிவிடலாம். ஆனால் ஒன்று கேழ்க்கின்றோம் அதென்ன வென்றால் நாம் மேலே குறிப்பிட்ட வகுப்பு வாதமும், பேதமும்; பிரிவினையும் இந்நாட்டு மக்களை சமூகவாழ்விலும் அரசியலிலும் கூட பேதப்படுத்தி பிரித்து உயர்வு தாழ்வாக்கி வைத்திருக்கின்றதா இல்லையா என்பது தான்.

வகுப்பு காரணமாகவே சமூக வாழ்வில் வித்தியாசம் ஏற்படுவதும் சமூக வாழ்வில் உயர்வு தாழ்வு வித்தியாசம் ஏற்பட்டதின் காரணமாகவே அரசியலிலும், அரசியல் பிரதிநிதித்துவத்திலும், அரசியல் உத்தியோகத்திலும், பதவியிலும் பொருளாதாரத்திலும் கூட அது பிரதிபலித்து மக்களை பாதிக்கின்றதா இல்லையா என்றும் கேழ்க்கின்றோம்.

அவ்வித வித்தியாசங்களைப் போக்குவதற்கும், போக்குவதற்கு அனுகூலமாக வகுப்புகளின் நிலைமைகளை அனுசரித்து வகுப்புகளுக்கு தக்கபடி கவனிப்பதற்கும் வகுப்பு வாதம் என்று சொல்லுவதா அல்லது அந்தப்படி எதையும் செய்யவொட்டாமல் தடுத்து முட்டுக்கட்டை போட்டுக்கொண்டு "இருக்கிறபடி இருக்க வேண்டும்" என்பதற்கு வகுப்பு வாதம் என்று சொல்லுவதா என்று தான் கேழ்க்கின்றோம்.

மற்றும் ஒரு வகுப்புக்கும், மற்றொருவகுப்புக்கும் வித்தியாசமும்—உயர்வு தாழ்வு தன்மைகளும் நிலைத்து இருக்கும்படி செய்வதும், இப்போது இருப்பதை ஆதரிப்பதும் வகுப்பு வாதமா அல்லது வகுப்புக்கு வகுப்பு எவ்வித வித்தியாசமும் கூடாது என்பதும், அது எந்த ரூபத்திலும் இருக்கக் கூடாது என்று சொல்லுவதும் வகுப்புவாதமா என்று கேழ்க்கின்றோம்.

பாமர மக்கள் பெரும்பாலும் மூடர்களாய்—மடையர்களாய் இருக்கும் காரணத்தைப்பயன்படுத்திக் கொண்டு நமது பார்ப்பனர்கள் வெகு தைரியமாக ஜஸ்டிஸ் கட்சியையும், சுயமரியாதைக் கட்சியையும், அவைவகுப்புப்பிரிவும், வகுப்பு வித்தியாசமும் கண்டிப்பாய் கூடவே கூடாது என்பதற்காக அவைகளை வகுப்பு வாதக்கட்சிகள் என்று சொல்லுவதும், தாங்கள் வகுப்பு வித்தியாசமும் பிரிவும் இருந்தே ஆகவேண்டும் என்றும், அவைகளை சிறிது கூட அழிக்கக்கூடாது என்றும் சொல்லும் வகுப்பு வாதத்தை வகுப்புவாத மில்லாத கட்சி என்றும் சொல்லி மக்களை நம்பச்செய்வது என்றால் அதை நம்பும் மக்கள் மடையர்களா அல்லது அந்தப்படி நம்பச் செய்யும் ஆட்கள் அபார தந்திரக்காரர்களா என்று கேட்கின்றோம்.

வகுப்பு பேதம் இருக்கக் கூடாது என்பவர்கள் தோற்றுப் போய் வகுப்பு பேதம் இருக்க வேண்டும் என்பவர்கள் வெற்றி பெற்றால் வகுப்பு வாதம் தோற்றதா அல்லது வகுப்பு வாதம் வெற்றி பெற்றதா என்றுதான் கேட்கின்றோம்.

சுமார் இந்த 10 வருஷகாலமாக காங்கிரசின் பேராலும் பல மகாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. சுயமரியாதை இயக்கத்தின் பேராலும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் பேராலும் பல மகாநாடுகள் நடைபெற்று இருக்கின்றன. இருகட்சி மகாநாடுகளிலும் நூறு பேர்கள் முதல் கொண்டு பதினாயிரம் பேர்கள் வரை கூடி சாப்பிட்டும் இருக்கலாம்.

காங்கிரஸ் சம்மந்தமான கூட்டங்களில் எல்லாம் பார்ப்பனர்களே சமைத்து இருப்பார்கள். அல்லது பார்ப்பனருக்கு வேறு சமையல் மற்றவர்களுக்கு வேறு சமையல்கள் தான் நடந்திருக்கும். அது மாத்திரமல்லாமல் பார்ப்பனர்களுக்கு வேறு சாப்பாட்டு இடமும், பார்ப்பனரல்லாதாருக்கு வேறு சாப்பாட்டு இடமும் பார்ப்பனர்களே பரிமாறுகின்றது என்கின்ற முறையும் தான் நடந்திருக்கும்.

ஆனால் சுயமரியாதை மகாநாடோ, பார்ப்பனரல்லாதார் மகாநாடோ ஆகியவைகளில் பார்ப்பனர் தவிர மற்ற ஏனைய பல பிரிவுக்காரர்கள் சைவர்கள் முதல் எத்தனையோ பிரிவுக்காரர்கள் இருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட மக்கள் என்று யார் யாரைக் கருதுகின்றோமோ அவர்கள் முதல் பல வகுப்புக்காரர்களும் சேர்ந்தே ஒரே சமையல் செய்வதும், ஒரே பந்தியில் யாவரும் உட்கார்ந்து உண்பதும், சகலவகுப்பாரும் சகல சமையல்தர்களும் பரிமாறுவதுமான காரியங்கள் தான் இன்றும் நடந்து வருகின்றன.

இப்படியெல்லாம் இருந்தும் சுயமரியாதைக்காரர்களும், பார்ப்பனரல்லாத கட்சியார்களும் தான் வகுப்பு வாதிகளாம். காங்கிரஸ்காரர்கள் வகுப்பு வாதிகள் அல்லவாம்.

எனவே இது கேட்பவர்களின் முட்டாள் தனமா, அல்லது இந்தப்படி சொல்லுகின்றவர்களின் அயோக்கியத்தனமா என்று கேட்கவேண்டியிருப்பதற்கு வருந்துகின்றோம்.

இன்று ஓட்டல் தெருக்கள் வழி நடந்தால் பிராமணாள் ஓட்டல் என்றும், அதற்குள்பிராமணர்களுக்கு வேறு இடம் என்றும், பிராமணர்கள் அல்லாதாருக்கு வேறு இடம் என்றும், கிறிஸ்தவர், முகமதியர், பஞ்சமர் ஆகியவர்களுக்கு இடமில்லை என்றும் எழுதி வைத்திருக்கும் காப்பி ஓட்டல்காரப்பார்ப்பனர் தங்களை வகுப்பு வாதிகள் அல்லவென்றும், இந்தப்படி உள்ள முறையை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுபவர்களை வகுப்பு வாதிகள் என்றும் சொல்வது என்றால் இதைக்கேட்டுக்கொள்ளுகின்றவர்கள் முட்டாள் தனமா அல்லது சொல்லுகின்றவர்கள் அயோக்கியத்தனமா என்று கேட்கின்றோம்.

சாப்பாட்டு ஓட்டல்களில் "பிராமணர்களுக்கு மாத்திரம் சாப்பாடு போடப்படும்" என்று போர்டுகள் வெளிப்படையாய் எழுதித் தொங்க விட்டுக் கொண்டு மற்றவர்களை தெருத் திண்ணை மீது கூட இருக்க வொட்டாமல் விரட்டி அடித்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள் தங்களை வகுப்பு வாதிகள் அல்லவென்று சொல்லுவதும், இந்த முறை இருக்கக் கூடாது என்று பாடு படுகின்றவர்களை வகுப்பு வாதிகள் என்று சொல்லுவதுமாய் இருந்தால் இதைக் கேட்டுக் கொள்ளுகின்றவர்கள் முட்டாள்களா அல்லது சொல்லுகின்றவர்கள் அயோக்கியர்களா என்று மறுபடியும் கேட்கின்றோம்.

நடை உடை பாவனை, மற்றவர்களை நடத்துதல் ஆகிய சகல காரி

யங்களிலும், கோவில், சத்திரம், சாவடி முதலிய சகல இடங்களிலும் பேதமும், பிரிவினையும் வைத்து அதன் மூலமே மக்களின் இழிவையும் சிறுமையையும் நிலை நிறுத்தி ஒருவனுக்கு ஒருவனைகீழ்மைப் படுத்தி வைத்திருக்கும் முறைகளை அடியோடு ஒழிக்க வேண்டும் என்றும், அதற்கு ஆதரவளிப்பவர்களை அடக்க வேண்டும் என்றும் சொன்னால் அதை வகுப்புவாதம் என்று சொல்லுவதும், அந்தப்படியான பேதத்தையும் இழிவையும் சிறுமைகளையும் நிலை நிறுத்த வேண்டுமென்று சொல்லுவதையும் வகுப்பு வாதம் அல்ல என்றும் சொல்லப்படுமானால் சொல்லுகின்றவர்கள் அயோக்கியர்களா அல்லது கேட்டுக் கொண்டிருக்கிறவர்கள் முட்டாள்களா என்று கேட்கின்றோம்.

வகுப்புவாதம் என்பது வகுப்பு பேதத்தில் இருந்தும், வகுப்புப்பிரிவினையில் இருந்தும் தான் உண்டானதே தவிர மற்றபடி அது ஆகாயத்தில் இருந்து தொப்பென்று குதித்தது என்று யாரும் சொல்ல முடியாது. எப்படி இருந்த போதிலும் வகுப்பு வாதிகள் என்று சொல்லப் படுகின்றவர்கள் வகுப்பு பேதமும் வகுப்பு பிரிவும் கூடாது என்று சொல்லுகின்றார்களா அல்லது வகுப்பு பிரிவும் பேதமும் இருக்க வேண்டும் என்று சொல்லுகின்றார்களா என்பதைத் தான் மக்கள் கவனித்துப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றோமே ஒழிய வேறில்லை.

அது போலவே தங்களை வகுப்பு வாதிகள் அல்ல என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனர்கள் வகுப்பு உயர்வு தாழ்வு பேதமும் பிரிவும் இருக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின் மீது இவ்வளவு பாடும் படுகின்றார்களா அல்லது அவைகள் ஒழிந்து போக சம்மதித்து இவ்வளவு பாடும் படுகின்றார்களா என்பதையும் நடு நிலையில் இருந்து சுய அறிவோடு யோசனை செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப் படுகின்றோம்.

இந்தப் படியான நடு நிலை ஆராய்ச்சியின் மீது உண்மை கண்டு பிடிக்கப் பட்டால் அவ்வுண்மையை வைத்துக் கொண்டு இன்றைய இந்திய சட்டசபை தேர்தலில் வகுப்பு வாதிகள் வெற்றி பெற்றார்களா அது இல்லாதவர்கள் வெற்றி பெற்றார்களா என்றால் வகுப்பு வாதிகள் வெற்றி பெற்றார்கள் என்கின்ற முடிவைத்தான் அடையக்கூடும்.

# இதை நீங்கள் தயவு செய்து கவனியுங்ககள்.

:0:

## எதற்காக தெரியுமா?

நீங்கள் ஒவ்வொருவரும் எப்படியாவது கஷ்டப்பட்டு இரண்டு அல்லதுஒரு சந்தாதாரரையாவது சேர்த்து 8 அணாவாவது அட்வான்ஸ் வாங்கி விலாசத்துடன் நமக்கு அனுப்பிக் கொடுங்கள்.

## ஏன்?

பகுத்தறிவு ஒரு தனி மனிதனுடைய சுயநலத்துக்கோ ஒரு தனி வகுப்பாருடைய நன்மைக்கோ நடைபெறுவதல்ல.

ஆனால் இன்று ஆதிக்கத்திலிருக்கும் வகுப்பாருடைய விஷமமும் சூழ்ச்சியும் நிறைந்த எவ்வளவோ எதிர்ப்புகளையும், தொல்லைகளையும் சமாளித்துக்கொண்டு இழிவு படுத்தப்பட்ட மக்களுக்காகவும், ஏழ்மைப்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், பின் தள்ளப்பட்ட மக்களுக்காகவும் நடைபெறுகின்றது.

இந்த வருஷத்தில் மாத்திரம் 3தடவை பத்திரிகைநிறுத்தப்பட்டு விட்டதாலும், 2, 3 தடவை ஜாமீன்கட்டும்படிஉத்திரவு செய்யப்பட்டதாலும், பத்திரிகை விஷயமாய் 3 கேசுகள் ஏற்பட்டு அபராதங்களும், தண்டனைகளும் விதிக்கப்பட்டதாலும், கேசுகளை எதிர்வழக்காடியதாலும் 5000 ரூபாய்க்கு மேற்பட்ட நஷ்டங்களேற்பட்டதோடு பத்திரிகை சந்தா எண்ணிக்கையும் குறையத் தலைப்பட்டு விட்டது. ஏஜண்டுகள் பெரும்பாலோர் அதாவது "இயக்கத்தின்மேல் உள்ள ஆர்வத்தினால்—இயக்கத்தில் உள்ளவர்களால்—இயக்க நன்மைக்காக பாடுபட்டவர்கள் என்று சொல்லிக்கொள்ளுபவர்கள் எங்கெங்கு ஏஜண்டாயிருந்தார்களோ அவர்களது பாக்கிகள் 100-க்கு 90-ரூபாய் வீதம் வசூலாகாமல் போய்விட்டதுடன் கண்டித்து கேட்கப்பட்டதினால் அவர்களது விரோதத்துக்கும் ஆளாக நேரிட்டுவிட்டது. மற்ற பொது ஏஜண்டுகளும் சிலர் ஒழுங்காய் நடந்து கொள்ளாததால் எலக்ஷனுக்குப்பிறகு பத்திரிகை அனுப்புவதை நிறுத்திக்கொள்ள வேண்டியதாகிவிடடது.

ஆதலால் "பகுத்தறிவுக்கு" ஆதரவளிக்க வேண்டும் என்று கருதுகின்ற ஒவ்வொரு தோழர்களும் தயவு செய்து இரண்டு சந்தாதாரர்களையாவது சேர்த்துக்கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்பட வேண்டியவர்களாகி விட்டார்கள். இதைச் சிறிது முக்கியமானதாகக் கருதவேண்டுமாய் வேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

குறிப்பு:—உதவி செய்தவர்கள் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.

..........................................................

"பகுத்தறிவு" காரியாலயம் மானேஜர் அவர்களுக்கு...... ..........ஐயா அடியில் கண்ட விலாசப்படிக்கு ஒருவருஷத்துக்கு பகுத்தறிவு பத்திரிகை அனுப்பி வைக்கக்கோறுகிறேன். சந்தா ரூபாய் 3. இத்துடன் அனுப்பி இருக்கிறேன்.

தேதி.................... கையெழுத்து

விலாசம்..........................................

பேர்..............................குறிப்பு.................

ஊர்.................................................

போஸ்டாபீஸ்......................................

## தாரகர்கள் ஒழிப்பு.

தாரகர்கள் என்பது பெரும்பாலும் வியாபாரிகள் என்பதையே குறிக்கும்.

வியாபாரிகள் என்பவர்கள் அனேகமாக சரக்குகளை உற்பத்தி செய்யும் விவசாயக்காரர்கள், தொழிலாளர்கள் ஆகியவர்களுக்கும் அச்சரக்குகளைவாங்கிஉபயோகிக்கும் பொது ஜனங்கள் என்பவர்களுக்கும் இடையில் இருந்து கொண்டு குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிப்பவர்களே ஆவார்கள்.

பணம் சம்பாதித்து முதலாளிகளாக ஆவதுஎன்பதற்கு அல்லாமல் வேறு எந்தக்காரியத்திற்கும் இந்தக்கூட்டத்தார்கள் உலகிற்கு தேவையே இல்லை.

இவர்களாலேயே தான் வெள்ளாமை செய்யும் விவசாயியும், சாமான்கள்செய்யும் தொழிலாளியும் என்றென்றைக்கும் ஏழைகளாயும் தரித்திரர்களாகவும் இருக்கவேண்டி இருக்கிறது. ஆனால் இந்த இருதரத்தாருமே தான் உலகம் நடைபெறுவதற்கு ஆதாரமாய் இருந்து வருகின்றார்கள். அப்படி இருந்தும் இவர்களது குறைந்த அளவு தேவைகளையோ, நலனையோ கூட கவனிக்க உலகில் எந்த மதமும், எந்த அரசாங்கமும் நாளதுவரை கவலை எடுத்துக்கொண்டதே இல்லை.

மனிதன் எப்பொழுது இயற்கைக்கு விரோதமாக வாழ்க்கை நடத்த நினைத்தானோ அல்லது இணங்கினானோ அன்று முதல் மனிதன் பாடுபட வேண்டியவனானான். ஆதலால் மனிதன் பாடுபடுவதைப் பற்றி நாம் பரிதாபப் படவில்லை. ஆனால் அந்தப்பாட்டின்—உழைப்பின் பயனை அந்த உழைப்பாளி அடையாமல்சும்மா இருக்கும் (உழைக்காத) சோம்பேரி அடைவதென்றால் இது எந்த முறையில் நியாயமாகும்?

இங்கு இந்த சாக்கில் பொது உடமையைப் பற்றிப்பேசவோ, சமதர்மத்தைப் பற்றிப் பேசவோ நாம்வரவில்லை. நீதி, நியாயம் என்பது வேண்டாமா என்று தான் கேட்கின்றோம்.

உழைப்பாளிக்கும், விவசாயிக்கும் பண்டங்களைச்செய்யும் பாட்டாளிக்கும் வீடில்லை,கல்வியில்லை. சரீர சௌக்கிய மில்லை, உடலில் வலிவு இல்லை, அறிவும் இல்லை என்றால்அவர்கள் உலகத்தில் ஏன் இருக்கவேண்டும் என்பது நமக்கு விளங்க வில்லை.

விளைபொருள்கள் 100க்கு 100 பங்கு, விலை அதிகம் விற்று கொள்ளை லாபம்வந்தாலும் விவசாயக் கூலியானவன்பஞ்சகாலத்தில்வாழ்வதுபோல் வாழவேண்டி இருக்கின்றதைப் பார்க்கின்றோம். அதுபோலவேஉற்பத்திசெய்த சாமான்கள் 100க்கு100பங்கு லாபத்துக்கு விற்றுலாபம்பெற்றாலும்தொழிலாளிகைக்கும், வாயுக்கும் கணக்கு சரியாகும்படி தான் வாழ்கிறான். இவை கவனிக்கப்பட வேண்டியது தான் அரசியல்வாதிகள், சமுதாய இயல் வாதிகள் கடமை என்பதோடு ஒரு நல்ல அரசாங்கத்தினுடையவும், ஒரு உண்மையும், யோக்கியமும் பொருந்திய மதத்தினுடையவும் கடமையாகும் என்பது நமதபிப்பிராயம்.

அதை விட்டு விட்டு இதெல்லாம் கடவுள் செயல் என்று சொல்லி விட்டு இதற்காக யாதொரு காரியமும்செய்யவேண்டியதில்லை என்றும் சொல்லப்படுமானால் தூக்கு மரங்களையும், சிறைக்கூடங்களையும் பெயர்த்து அழித்துவிட்டு கொலைகளையும், திருட்டுகளையும் பற்றி யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் அவைகளையும்கடவுள் செயல் என்றுவன் சொல்லிவிடக் கூடாது என்று கேட்கின்றோம்.

இந்தகஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக நாம் பிரமாதமான முறை எதையும் சொல்ல வரவில்லை. உண்மையிலேயேவிவசாயிகள்பூமிக்கு சொந்தக்காரர்களாய் இருக்கின்றவர்கள் முதல் கொண்டு வாரத்துக்குகுத்தகைக்கு உழுகிறவர்கள் உள்பட விவசாயக்கூலிகள் வரையில் கடன் காரர்களாகவே தரகர்களுக்கும், லேவாதேவிக்காரர்களுக்கும் உழைத்து உழைத்துப் போட்டு விட்டு பட்டினிகிடப்பவர்களாகவே இருக்கிறார்கள். இவர்கள் ஏன் இந்தப்படி இருக்கவேண்டும்? தொழிலாளிகளும் ஏன் இப்படியே இருக்கவேண்டும்? என்பதைச்சிறிதுகவலையுடன் யோசித்து தக்கது செய்யுங்கள் என்று தான் சொல்லவருகின்றோம்.

அதற்கு நாம் சொல்லும் மார்க்கம் மிகமிக சுருக்கமானதும், சுலபமானதுமாகும் தான். இதில் பலாத்காரமோ, சமாதான பங்கமோ இருக்கவோ ஏற்படவோ இடமும் இல்லை.

அதாவது விவசாயக்காரன் சர்க்காரிலேயோ, அல்லதுகூட்டுறவு ஸ்தாபனங்களிலேயோ தவிர வேறெங்கும் கடன் வாங்க மார்க்கமில்லாமலும் அவனுக்கு வேறு தனிப்பட்ட நபர் யாரும் கடன் கொடுக்காமலும் செய்ய வேண்டியது. முதன்மையான காரியமாகும். அதோடு விவசாயத்தில் ஈடுபட்ட கூலி ஆட்களுக்குக் கூலி தவிர விவசாயத்தில் ஒரு பங்கு இருக்கும்படி செய்யவேண்டும்.

பிறகு விளைபொருள்கள், அதாவது ஆகாரசாமான்கள், கூட்டுறவு பண்டசாலைகளே விலைக்கு வாங்கி அதாவது விவசாயிக்குக் கட்டும்படியான விலைக்கு வாங்கி அக்கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவே வாங்குபவர்களுக்குக் குறைந்த லாபத்தில் விற்பனை செய்யவேண்டும்.இதனால் யாருக்கும் கஷ்டம் ஏற்படாது. அதிகலாபம்வைத்து விற்பதானாலும் அந்த லாபம் சாமான்விற்ற விவசாயிகளுக்கும் வாங்குகின்ற ஜனங்களுக்கும் பிரயோஜனப்படும்படியே செய்யவேண்டும்.

இந்தப்படி செய்வதாயிருந்தால் மிடில்மேன் அதாவது தரகன் அல்லது வியாபாரி என்கின்ற கூட்டத்திற்கு நாட்டில் தேவையே ஏற்படாமல் போய்விடும். அப்போது அனாவசியமாக ஏராளமான பணக்காரர்கள் உற்பத்தி ஆகமாட்டார்கள் என்பது மாத்திரமல்லாமல் உண்மையிலேயே விவசாயக்காரர்களுக்கு நஷ்டமும் கஷ்டமும்இல்லாமல் போவதுடன் மனிதத்தன்மைக்கு வேண்டிய சகல காரியங்களும் விகிதாச்சாரம் அவனும் அடைய சவுகரிய மேற்பட்டு விடும்.

தொழிலாளிகள் விஷயத்திலும் மனித சமூகத்துக்கு வேண்டிய அனுபவ சாமான்கள் யாவும் இக்கூட்டுறவு முறையினாலேயே செய்யப்பட்டு அக்கூட்டுறவு முறையினாலேயே வினியோகிக்கப்படுமானால் மில் முதலாளிகள் என்கின்ற கூட்டம் எப்படி உற்பத்தியாகும்? அவர்களுக்கு வேலைதான் ஏது? ஒரு வஸ்துவின் லாபத்தை அந்தவஸ்துவை பாடுபட்டு செய்தவனாவது அல்லது பாடுபட்டபணத்தைக் கொடுத்து வாங்குபவனாவது அனுபவிக்கவேண்டுமே அல்லாமல் சும்மாயிருக்கும் சோம்பேறி தரகன் ஏன் அனுபவிக்கவேண்டுமென்று தான் கேட்கின்றோமே ஒழிய யாரையும் நாம் தூக்கில் போடும்படியோ, சிறையில் வைக்கும்படியோ சொல்ல வரவில்லை.

பிறகுதொழிலாளிகள் இருக்கும் இடங்களில் குறைந்தது 5 மைல் சுற்றளவு தூரத்துக்காவதுகள்ளுக்கடைகளோ,மார்வாடிகளோ,நாட்டுக்கோட்டையார்களோ இல்லாமல் இருக்கும்படி செய்து விட்டு அவர்களுக்கு தேவையான பணத்தைத்தொழில்சாலை நிர்வாகிகளிடமே வாங்கிக் கொள்ளும்படி செய்துவிட்டு லாபத்தில் ஒரு பகுதியோ, அல்லது அத்தொழிலாளிக்குப்போதியஅளவு தாராளமான கூலியைக்கொடுத்து அக்கூலியை சாமான் மீதுவைத்து விற்கும்படியாகவோ செய்துவிட்டால் தொழிலாளிகளைப்பற்றியாரும் கவலைப்படவேண்டிய அவசியமே இருக்காது.

இந்த இரண்டு காரியங்கள் அதாவது விவசாயி விஷயமும்சாமான்கள் உற்பத்திசெய்யும் தொழிலாளி விஷயமும்இந்த முறையில் முடிவுசெய்யப்பட்டுவிட்டால் உலகில் வேறு எவ்விதமான நெருக்கடிகளும் இருக்காதுஎன்பதோடு அரசியல் நிர்வாகத்துக்கும் இவ்வளவு கஷ்டமும், பளுவும் இருக்க நியாயமும் இல்லாமல் போய் விடும்.

இதற்காக இப்போது நமது அரசாங்கம் செய்ய வேண்டிய வேலையெல்லாம் சமீபத்தில் ஜர்மனி சர்க்கார் செய்திருப்பதுபோல் கூட்டுறவு ஸ்தாபனங்களை பலப்படுத்தி அவைகளை இன்னமும் சற்று அதிகமான சர்க்கார் மேல் பார்வைபார்த்து நிர்வகிப்பது என்ற ஒன்றே போதுமானதுஎன்று சொல்லுவோம்.

இன்று இந்த நாட்டில் S.S.L.C, B.A, M.A. படித்து விட்டு மக்கள் ஆயிரம், பதினாயிரம் கணக்காய் வேலைஇல்லாமல்கஷ்டப்படுகின்றதை நேரில் பார்க்கின்றோம்.

இவர்களில் அனேகர் போலீஸ் கான்ஸ்டேபில்வேலைக்குக்கூட வரத்தயாராய் இருக்கிறார்கள். மாதம் 15 ரூபாய் 20 ரூபாய்க்கு குமாஸ்தா—மேஸ்திரி வேலைக்குக் கூடவரகெஞ்சுகின்றார்கள்.

இவர்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யாமல் எத்தனை நாளைக்கு விட்டு வைத்துக்கொண்டு இருக்கிறது என்பது நமக்கு விளக்கவில்லை.

மேலும் இந்த நாட்டில் ஏதாவது அரசியல் கிளர்ச்சிஉண்மையில் இருக்கின்றது என்று சொல்லப்படுமானால் இந்தமாதிரி வேலையில்லாத ஆட்களுடைய கஷ்டமே அப்படிப்பட்ட அரசியல் கிளர்ச்சிக்குக் காரணமாகும் ஆதலால் அப்படிப்பட்ட தொல்லைகளும், ஒருவாறு ஒழிந்து ஜனங்கள் சமாதானத்தோடு வாழுவதற்கும் அனுகூலமாயிருக்கும் என்பது நமதபிப்பிராயம்.

இன்று நடக்கும் கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பவை இந்த மாகாணத்தில் தமிழ் நாட்டைப் பொருத்தவரை கிரிமினலுக்குஇடமில்லாமல் நடைபெறுகிறது என்பது ஒரு அளவுக்கு திருப்தியானாலும் ஆந்திரதேசத்தில் பெரும்பாலும் மோசடியாகவே நடைபெற்று அனேககேசுகள் கிரிமினலுக்கு போவதாகக் கேழ்விப்பட்டோம்.

ஆதலால் கூட்டுறவு இலாக்கா சற்று விரிவடைந்து இன்னமும் அநேக துறைகளில் பிரவேசித்து தக்க மேற்பார்வையுடனும் உண்மையான நல்ல எண்ணத்துடனும் ஏழைமக்களுக்கும் பாடுபடும் உழைப்பாளி மக்களுக்கும் உதவும் படியாகவும் நடைபெறச் செய்யவேண்டும் என்கின்ற ஆசையினாலே இதை எழுதுகின்றோம்.

## ஈரோடு முனிசிபல்

## வைஸ் சேர்மன் தேர்தல்.

ஈரோடு முனிசிபாலிட்டியின் கூட்டம் 30-11-34-ந்தேதி மாலை 5-30-மணிக்கு சேர்மன் கான்சாகிப் கே. ஏ. ஷேக்தாவுது அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். சிக்கையா அவர்கள் பிரரேபிக்க தோழர் ஈ. ஓ. சி. முத்துசாமிக்கவுண்டர் அவர்கள் ஆமோதிக்க தோழர் தா. வீரபத்திர செட்டியார் அவர்கள் போட்டியின்றி வைஸ் சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பொது தொகுதியின் யோக்கியதை.

இந்திய சட்டசபைப் பொதுத் தொகுதியின் பொது ஓட்டர் தொகுதியில் ஒரு கிருஸ்தவர் வெற்றி பெற்று விட்டதற்காக பார்ப்பனர்கள் வகுப்பு வாரி ஓட்டர் தொகுதி இனி வேண்டியதில்லை என்றும், பொதுத்தொகுதியே போதும் என்றும், அதிலும் கிருஸ்தவர்களுக்கு என்று ஸ்தானம் ஒதுக்கி வைக்கக்கூட வேண்டியதில்லை என்றும் இப்போது முன்னிலும் அதிகமாக கூப்பாடு போடுகிறார்கள்.

ஆனால் எப்படிப்பட்ட கிருஸ்தவர் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றால் அவர்கள் சமூக முடிவுக்கு விரோதமான கருத்துடைய கிருஸ்தவர் தான் பொதுத்தொகுதியில் வெற்றி பெற்றிருக்கிறாரே தவிர கிருஸ்தவ சமூக நலனுக்கு ஏற்பட்ட கருத்தை நிலை நிறுத்தப்பாடுபடும் கிருஸ்தவர் வெற்றி பெறவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம், என்பதும் வெள்ளை அறிக்கையை பகிஷ்கரிக்க வேண்டும் என்பதும், காங்கிரசினுடன் கூட்டுறவு கொள்ளவேண்டும் என்பதும், காங்கிரசு கிருஸ்தவ சமூகத்துக்கும்பிரதிநிதித்துவம் உடையது என்பதும், பெரும்பான்மையான அல்லது 100க்கு 99பேர்களான கிருஸ்தவர்களுடைய எண்ணமா? அவர்களுடைய சமூக சங்கத்தினுடைய முடிவா என்பதை உணர்ந்து பார்த்தால் தங்கள் சமூக மக்களில் 100க்கு 99-பேர்களுக்கு விரோதமான அபிப்பிராயம் உடைவரும் சமூக சங்க முடிவுக்கு எதிரிடையான அபிப்பிராயம், முடையவருமான ஒருவர் எதிரிகளின் கையாளாகி அவர்களுடைய இஷ்டப்படி சம்மதித்த ஒருவர்தான் அல்லது தமது சமூக உரிமைகள் கோரிக்கைகள் என்பதற்கு துரோகம் செய்ய சக்தி வாய்ந்த ஒருவர் தான் பொதுத்தொகுதியில் தெரிந்தெடுக்கப்பட முடிகின்றது. ஆகவேஇது தான் இன்று பொதுத் தொகுதியாய் கருதப்படுகின்றது.

எனவே இந்த பொதுத்தொகுதியை கிருஸ்தவ சமூகம் ஒப்புக்கொள்ளுகின்றதா என்று கேட்கின்றோம்.

## தோழர் ரெங்கம்மாள்— சிதம்பரம் அவர்கள் பினாங்கு விஜயம்.

15-11-34 வியாழக்கிழமை மாலை 6மணிக்குராஜுலாக்கப்பல் துறைமுகத்திற்கு வந்தது. பினாங்கிலுள்ள பல நண்பர்கள் துறைமுகத்திற்கு வந்திருந்தார்கள். தம்பதிகள் கப்பலை விட்டுஇறங்கியதும் கானாடுகாத்தானில்பெரிய குடும்பத்தைச்சார்ந்தவரும், பிரபல தனவணிகருமான பினாங்கு கௌரவதோழர் க. வெ. ராம. அளகப்பா செட்டியாரவர்கள் மலர் மாலை அணிவித்தார்கள் பல அன்பர்கள் சூழ தம்பதிகள் புறப்பட்டு கீக்கீ ஓட்டலுக்கு வந்தார்கள்.

மறுதினம் மாலை 5மணிக்கு இந்து சபை கட்டிடத்தில் ரங்கம்மாள் சிதம்பரம் அவர்களைப் பாராட்ட ஓர் தேநீர்விருந்துக்கூட்டம் நடைபெற்றது. இந்துக்களும், ஏராளமான தனவைசிய நண்பர்களும் பெண்மணிகளும் 200-பேர் விஜயம் செய்திருந்தனர்.

வந்திருந்தவர்களில்முக்கியமானவர்கள் வருமாறு:— தோழர்கள் சுங்குரும்பை பெ. நா. மு. முத்துப்பழநியப்ப செட்டியாரவர்கள்,ஜே.பி. வே. நடேசம்பிள்ளை,ஜே.பி.மெ. ராம. அ. அண்ணாமலைசெட்டியார், ஆ. வி. பள.ராமநாதன் செட்டியார், நா. கு. குப்பாஞ்செட்டியார், தெ.ராம. வெ. சித. வெங்கிடாசலம் செட்டியார், உ. ரா. ம. உ. மு. அளகப்பசெட்டியார், உ. ராம. மெ. சுப. சேவு. ராமசாமி செட்டியார், அள. கரு. அண்ணாமலை செட்டியார். க. வீ. அள. அள. வெங்கிடாசலம் செட்டியார், க. வீ. அள. ராம. அருணாசலம் செட்டியார், உ. ராம. மெ. சு. மெநாச்சியப்ப செட்டியார், பெ.வி. வீரசண்முகம் செட்டியார், லெ. சித. சுப. சாமிநாதன் செட்டியரர், அரு. வீர. சொக்கலிங்கம் செட்டியார், க. வெ. ராம அளகப்ப செட்டியார், பள. நாக. நாகப்ப செட்டியார், க. சொ. நடேசன் செட்டியார், கூலிம் ராம. யே. சித. சிதம்பரம் செட்டியார்; கோலப்பிரை. சு. மு. ராம. முத்துராமன் செட்டியார், மு. பள. பழநியப்ப செட்டியார், கோ. சாமிப்பிள்ளை அவர்கள், ஆ. மு. கருப்பஞ்செட்டியார், சா. நா. று. நா. முத்துராமன் செட்டியார், வாலயப் பாஸ் முரு சுப. அண்ணாமலை செட்டியார் ஆகிய இன்னும் பல முக்கியஸ்தர்கள் விஜயம் செய்தார்கள்.

வந்திருந்தோர்அனைவருக்கும் உயரிய முறையில் தின்பண்டமும் தேநீரும் வழங்கப்பெற்றது. அந்தக்கூட்டத்திற்கு தோழர் பிச்சப்பா சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். விருந்தினரை சபையோருக்கு அறிமுகப்படுத்தி வைத்து முன்னுரையாக சில வார்த்தைகள் பேசினார்கள். சுப. முத்தையா செட்டியாரவர்களும்,பெ. நா. மு. முத்துப்பழனியப்ப செட்டியாரவர்களும், வே. நடேசம்பிள்ளை அவர்களும், மா. அருணாசலம் அவர்களும் பேசினார்கள்.

பின்னர் சோதரி ரங்கம்மாள் அவர்கள் எங்கள் விவாகத்திற்குப் பிறகு தாய் நாட்டில் எங்களுக்கு பல பாராட்டு விருந்து நடந்ததென்றும், கடல் கடந்த இந்திய சகோதரர்கள் இங்கு எங்களுக்கு இத்தகையதொரு பேருபசாரம் செய்வீர்களென்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை யென்றும், உங்கள் சீர்திருத்த ஆர்வத்தை பெரிதும் பாராட்டி மகிழ்கிறோமென்றும், பெண்களின் துயர நிலையை நீக்க நீங்கள் முயலவேணுமென்றும், பெண்ணும் ஆணும் ஒத்த அறிவு பெறுதல் வாழ்விற்கு நலம் பயக்குமென்றும், ஆதலால் பெண்களும் உயர்தரக்கல்வி பெறவேண்டுமென்றும் பேசினார்கள்.

தோழர்சித. சிதம்பரம் செட்டியாரவர்கள் வாழ்க்கையில் உள்ள சிக்கல்களை அறுக்க சீர்திருத்தத்தில் முனைதல் அத்யாவசியமென்றும், வாழ்விற்கேற்ற வசதிகளை அமைத்துக் கொள்வது நம் கையில் உள்ள தென்றும் துணைவியை இழந்தஒருவர் மறுமணம் விரும்பும் மங்கை ஒருவரையே மணக்க வேண்டுமென்றும், இசைந்திருந்தால் நம் சமூகத்திலுள்ள நூலிழந்தாரொருவரையே நான் மணந்திருப்பேனென்றும், நீங்களெல்லாம் இவ்வகையில் இனி ஊக்கம் காட்டவேண்டுமென்றும், கலப்பு மணத்தால் சமூகச்சடங்கில் உள்ள துயரங்கள் நீங்கி இன்ப வாழ்க்கைக்கு இடம் இருக்கிறதென்றும், மற்றும் மூடபழக்க வழக்கங்களை, அனாவசியச் செலவுகளை ஒழித்து விடுதல் நலமல்லவா என்பதை நீங்கள் யோசித்துப்பார்க்க வேணுமென்றும் ஏராளமானவர்கள் இருந்துஎங்களை உபசரித்ததிற்கு பின்னுமொரு முறை வந்தனம் செலுத்துவதாகவும் கூறி அமர்ந்தார்கள்.

பிறகு தலைவர் முடிவுரையாக சில நல்லுரை வழங்கிய பிறகு சபையாரால் வந்தனம் கூறப்பெற்று ஏழரை மணிக்கு கூட்டம் இனிது நிறைவேறியது.

17ந் தேதி சனிக்கிழமை காலை பல நண்பர்களிருந்து வழியனுப்ப அவர்களதுகாரிலேயே யீப்போ வழியாக கோலாலம்பூர் சென்று திங்கட்கிழமை மலாக்கா சேர்வர். ஆண்டொரு கடற்கரை பங்களாவில் வதிவரென்று தெரிகிறது.

### கோலாலம்பூர்.

தன வைசிய சார்பாக தோழர் துக. பெரி. முத்தையா செட்டியார் தம்பதிகளுக்கு மாலை யிட்டு வரவேற்றார்கள். தோழர் ஜேகோப் அம்மையரர் மலர்மாலை அணிந்து இந்து பெண்மணிகளுக்காக வரவேற்றார்கள். கோலாலம்பூர் செட்டியார் சேம்பரில் ஓர் வரவேற்பும் டவுன் ஹாலில் விசேஷ வரவேற்பும் நடந்து மலாக்காவில் பாரியானவரவேற்பு ஒன்றுசகல செட்டியார்களும் சேர்ந்து செய்தனர்.

## முடிந்துபோன விஷயமாம்.

கும்பகோணத்தில் தேர்தல் கொண்டாட்டம் கொண்டாட வந்த தோழர் ராஜகோபாலாச்சாரியார் அவர்களை கூட்டத்தில் ஒரு கேள்வி கேட்டார்கள்.

அதாவது "இந்திய சட்டசபை மெம்பர் ஆகிவிட்டதற்காக இவ்வளவு பிரமாதமான வெற்றிக் கொண்டாட்டம் கொண்டாடுகின்றீர்களே- நீங்கள் எல்லோரும் அங்கு போய் என்ன செய்யப் போகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு ராஜகோபாலாச்சாரியார்அவர்கள் ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டார்.

அதாவது "இது முடிந்துபோனவிஷயம் எப்படியோ ஒரு விதத்தில் நாங்கள் ஜெயித்து விட்டோமாகையால் முடிந்துபோன விஷயத்துக்கு இனி கேள்விகேட்கவோ பதிலளிக்கவோ இடமில்லை" என்று சொல்லி விட்டாராம். எந்த விதத்திலோ காரியம் கைகூடினபிறகு வெற்றி பெற்றவர்கள் சொல்ல வேண்டிய பதில் இதுதான். அவர்களது தைரியத்தைக்கண்டு நாம் அதிசயிக்காமல் இருக்க முடியவில்லை.

## ஈரோடு முனிசிபாலிட்டி நோட்டீஸ்.

ஈரோடு முனிசிபல் சங்கத்தார் 29—4—33-ந்தேதி 19-நெ. தீர்மானத்திலும், 28—3—34 தேதி 450-நெ. தீர்மானத்திலும் ஜனாப் K. காதர்சாயபு அவர்களுக்கு ஷெயாரால்கிரக்காரத்தெருவில் ட. ச. 967, 970-நெம்பர்களில் ஆக்ரமிப்புச் செய்துள்ள 1422-ச. அடி நிலத்தை சதுர அடி ஒன்றுக்கு ரூ. 0—4—0 வீதம் விற்று விடுவதாக தீர்மானித்திருக்கிறார்கள்.

இது விஷயமாக ஆக்ஷேபணையுள்ளவர்கள் அடியில் கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுத்து மூலமாய் இந்தநோட்டீஸ் கோயமுத்தூர் ஜில்லா கெஜட்டில் பிரசுரம் செய்த ஒருமாதத்திற்குள் தெரியப்படுத்திக்கொள்ள வேண்டியது. ஈரோடுமுனிசிபல்ஆபீஸ்,

15—11—1934.

T. புருஷோத்தம், கமிஷனர்.

## வகுப்புவாத வெற்றி

### வாணியம்பாடி முனிசிபாலிடி

### வைஸ் சேர்மன் தேர்தல்.

25-11-84 மாலை 4-30-மணிக்கு இந்த நகரசபை மண்டபத்தில் வைஸ் சேர்மென் தேருதல் நடத்த ஓர் முனிசிபல் கூட்டம் தலைவர் ஜனுப் என. மௌலானா சாயபு அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. கூட்டத்திற்கு 15 கவுன்சிலர்கள் ஆஜராயிருந்தனர். இவர்களில் முஸ்லீம்கள் 9 பேரும் இந்துக்கள் 6 பேரும் இருந்தார்கள். தேர்தல் முடிவையறிய ஏராளமான இந்த முஸ்லீம்கள் குழுமியிருந்தனர்.

கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன் சபை அனுமதி பெற்று ஸ்ரீ வி. எஸ். விஸ்வநாத முதலியார் பேசியதின் சுருக்கமாவது:- நான் எவர் மீதும் பொறாமை கொண்டோ, துவேசங் கொண்டோ இப்பொழுது நடைபெறப்போகும் வைஸ் சேர்மென் தேர்தலில் நான் அபேக்ஷகனாய் நிற்க முன்வரவில்லை. ஆனால் இம்முனிசிபாலிட்டிக்கு உத்தியோகப் பற்றற்ற சேர்மென் ஸ்தானம் ஏற்பட்டு சுமார் 30 வருடங்களுக்கு மேலாகியும், நாளது வரை சேர்மன் ஸ்தானத்திலோ அன்றி வைஸ் சேர்மென் ஸ்தானத்திலோ ஒரு இந்து பங்கெடுத்துக் கொள்ள முடியாமலே போயிருக்கிறது. கடந்த இருமுறை வைஸ்சேர்மென் ஸ்தானத்திற்கு இந்து அபேக்ஷகர் போட்டியிட்டும் முஸ்லீம் மெஜார்ட்டியினால் தோல்வியுற்றிருக்கின்றனர்.

இந்நகரின் ஜனத்தொகை சுமார் 22,000-த்தில் இந்துக்கள் சுமார் 10000 பேரிருந்து வருகின்றனர். வித்தியாசம் இரண்டாயிரம் தான். மற்ற முனிசிபாலிட்டிகளில் முஸ்லீம்கள் மிகக்குறைந்தமைனாரிட்டியாகஇருந்தும் முஸ்லீம்களுக்கு சலுகை காட்டப்பட்டு வருவது பிரத்தியக்ஷத்திலறியலாம். ஈரோட்டில் ஒரு முஸ்லீம் கனவானே மீண்டும் மூன்றாம் முறையாக போட்டியின்றி சேர்மெனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். நம் ஜில்லாவைச் சேர்ந்த குடியாத்தம், திருப்பத்தூர் முதலிய இடங்களிலும் முஸ்லீம்கள் சேர்மெனாகவுமிருந்திருக்கின்றனர். வைஸ்சேர்மெனாகவுமிருந்துவருகின்றனர். மற்றும் அநேக முனிசிபாலிட்டிகளிலெல்லாம் முஸ்லீம்களுக்கு ஸ்தானங்கள் வழங்கப்பட்டு வந்திருக்கிறது.

நமது வட ஆற்காடு ஜில்லாபோர்டில் சுமார் 54 அங்கத்தினர்களிருந்து வருகின்றனர். அதில் முஸ்லீம்கள் 4 பேர்கள்தான் அங்கம் வகிப்பதாக தெரிகிறது. அப்படியிருந்தும் தோழர் ஜனுப், சௌகார்வி. அப்துல்ஹக்கீம்சாயபுவை தலைவராக தேர்ந்தெடுக்கவில்லையா? அப்போர்டில் ஒரு முஸ்லீம் தலைவராக வந்துவிட்டதால் இந்துக்கள் குடி முழுகிப் போய்விட்டதா? ஒன்றுமேயில்லை. ஆனால் இந்நகர சபையில் சேர்மென் வைஸ் சேர்மன் ஊரிலில்லாமற் போகும் சமயங்களில் டெலிகேட் செய்வதாயிருந்தாலும் முஸ்லீம்களுக்கே வழங்கப்பட்டுவருகிறது. தற்பொழுதோ கமிஷனர் நியமனத்தால் சேர்மென் அதிகாரங்கள் பல பறிக்கப்பட்டிருக்கிறதென்றே கூறலாம். அத்தகைய அதிகாரமற்ற ஒரு வைஸ் சேர்மென் பதவியையேனும் இம்முறையாவது ஒரு இந்துவுக்கு அளிப்பார்களென்று எதிர்பார்க்கிறேன். இதற்குமுன்பு ஏதாவது கட்டுப்பாடு செய்திருந்தாலும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களை புனராலோசனை செய்வார்களாக.

### வைஸ் சேர்மென் தேர்தல்

பின்பு கூட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு மலையாளம் அப்துல் சுபான் சாயபு பி. எ. பெயரை ஜனுப் வேலூர் அப்துல் கபூர் சாயபு பிரரேபிக்க ஜனுப் சௌளவரம் அப்துல் சுபான் சாயபு ஆமோதித்தார்.

தோழர் எஸ். வி. விஸ்வநாதமுதலியார் பெயரை தோழர் வி. கோவிந்தராஜன் பிரரேபிக்க தோழர் ராஜரத்தினசெட்டியார் ஆமோதித்தார்.

பிறகு ஓட்டுகளை கணக்கெடுத்ததில் அபேக்ஷகர்கள் இருவர் நீங்கலாகவுள்ள ஓட்டுகள் 13-ல் ஜனுப் மலையாளம் அப்துல் சுபான் சாயபுவுக்கு 8 ஓட்டுகளும், தோழர் வி. எஸ். விஸவநாத முதலியாருக்கு 5 ஓட்டுகளும் கிடைத்ததால் முன்னவர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

### வாழ்த்துதல்.

வெற்றிபெற்றவரை வாழ்த்து முகத்தான் தோழர் வி. எஸ். விஸ்வநாதம் பேசியதாவது:- ஜனுப்மலையாளம் அப்துல் சுபான் சாயபு வெற்றியடைந்ததைக் குறித்து நான் உண்மையாகவே பாராட்டுகிறேன். ஏனெனில் அவர் ஒரு பி ஏ. வாசித்த பட்டதாரி. அதோடு ஒரு பிரபல குடும்பத்தைச் சார்ந்தவர். கண்ணியமும் பொறுப்பும் வாய்ந்தவர். அவர் சேர்மென் ஸ்தானத்திற்கேபோட்டியின்றி தேர்ந்தெடுக்கவேண்டிய அந்தஸ்துள்ளவர். அத்தகைய ஒருவர் அதிலும் நமது நகர சபையிலுள்ள ஒரே ஒரு பட்டதாரி வைஸ் சேர்மெனாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதற்கு சந்தோஷமுறாமலிருக்கமுடியாது.

தற்பொழுது நடைபெற்ற தேர்தலில் இந்துக்கள், இந்து அபேக்ஷகரையும் முஸ்லீம்கள் முஸ்லீம் அபேக்ஷகரையும் ஆதரித்து ஓட்டளித்திருப்பது நன்கு புலனாகிறது. இதிலிருந்து இம்முனிசிபாலிட்டி மத வாதத்தையே தனது பூரண கொள்கையாகக் கொண்டிருப்பது புலனாகும்.

மற்ற முனிசிபாலிட்டிகளிலோ, ஸ்தல ஸ்தாபனங்களிலோ முஸ்லீம் அங்கத்தினர்கள் இம்மாதிரி கட்டுப்பாட்டை அனுசரித்தால் ஒரு இடத்திலேனும் வெற்றிபெறக்கூடுமா வென்பதை சிறிது யோசிக்கவேண்டுவது அவசியமாகும்.

நமது மாகாணத்திற்கு தலை நகராகிய சென்னை கார்பொரேஷனில் ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளதாலன்றோ, நூற்றுக்கு மூன்று பேர் உள்ள சமூகமாகிய பிராம்மண சமூகத்தைச்சேர்ந்த தோழர் டி. எஸ். ராமசாமி அய்யரும், ஆறாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஐரோப்பிய வகுப்பைசார்ந்ததோழர்லேடனும்மேயராயிருக்கசந்தர்ப்பங் கிடைத்தது. அடுத்த முறை ஒரு முஸ்லீமும் மேயராகத் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார்.

எந்த தனிப்பட்ட மதத்தினரின் மூலதனம் ஒன்றும் இம்முனிசிபாலிட்டியிலில்லை. மழையும், சூரியனும் எப்படி எல்லோருக்கும் பொதுவோ அதேபோன்று தான் மனிதப் பிறவியுள்ள ஒவ்வொருவருக்கும் முனிசிபாலிட்டி சொந்தமாகும். எப்படி ஒரு மனிதன் தன் வாழ் நாட்களை, சுகமாகக் கழிக்க சம்பாதிக்க முயலுகிறானோ, அதேபோன்று மக்களிடத்தில் விகிதாச்சாரப்படி வரி வசூலித்து மக்களுக்கு கல்வி, சுகாதாரம் முதலியவைகளையளிக்க ஏற்பட்ட ஒரு பொது ஸ்தாபனத்தில் எப்பொழுதும் கட்டுப்பாட்டுடனிருந்து வருவதானது முஸ்லீம் அங்கத்தினர்களின் குறுகிய மனப்பான்மையையே காட்டுகிறது.

இதுகாறும் இந்துக்களுக்கு ஒரு முறையேனும் ஒரு ஸ்தானமேனும் அளிக்காமல் வந்ததற்காக முஸ்லீம்கள் வருந்தக்கூடியதும், விசனிக்கக்கூடியதுமான காலமும்வருமென்றே நம்புகிறேன். இனியேனும் முஸ்லீம்கள்தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ளுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

பின்பு உபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஜனுப் மலையாளம் அப்துல்சுபான் சாயபுக்கு மாலை சூட்டப்பட்டு அவர் நன்றி கூறியபின் சேர்மென்வாழ்த்துக்கூற கூட்டம் கலைந்தது.

## சென்னை சட்டசபை. தேர்தல்.

சமீபத்தில் காலியான சென்னை தொகுதிக்கும் திருச்சி தொகுதிக்கும் டிசம்பர் 14ந் தேதிக்குள் நியமனச் சீட்டுகள் தாக்கல் செய்யவேண்டும்— 17ந் தேதி அவை பரிசீலனை செய்யப்படும். ஜனவரி மாதம் 18ந் தேதி தேர்தல் நடைபெறும். என தெரிகிறது.

## திருப்பூர் ஹைஸ்கூலுக்கு 50,000 தருமம்.

### தோழர் சிக்கண செட்டியார் நன்கொடை.

இது சமயம் திருப்பூர் முனிசிபல் உயர்தரப்பாடசாலையைவாரச்சந்தைப் பேட்டையில் கட்டுவதாய் இருப்பதை ஷை இடம் சுகாதாரக் கேடான இடத்திலிருப்பதாலும், தேவைக்குப் போதாமலுமிருப்பதாலும், நொய்யல் நதிக்கு வடபுறம் திருப்பூர் புதிய டவுனில் விஸ்தாரமான இடத்தில் கட்டித்தந்து தகப்பனார் காலஞ்சென்ற தோழர் நஞ்சப்ப செட்டியாரின் ஞாபகார்த்தமாய் கட்டிடத்திற்குப்பெயர் வைப்பதாயிருந்தால், தான் ரூபாய் 50000 நன்கொடையாய் கொடுப்பதற்குத் தயாராயிருப்பதாய் திருப்பூர் முனிசிபாலிட்டிக்கும், கல்வி அதிகாரிகளுக்கும், பிரபல வியாபாரியும், மில் சொந்தக்காரருமான தோழர் எம். என். சிக்கண செட்டியார் அறிவித்திருக்கிறார்.

## ஹிட்லரிஷத்தின் நிலைமை.

ஜெர்மன் சர்க்கார் ஆட்சி விஷயத்தில் துருப்புகளுக்குள்ள மனப்பான்மையைப் பற்றிமிகவும்கவலைக்கிடமான வதந்திகள் உலாவி வருவது, இன்று மாலை மிகுந்த பரபரப்பைஉண்டாக்கியிருக்கிறது அவசரமான நிலைமை ஏற்பட்டால்அதைசமாளிப்பதற்காக 'ரீச்வா' துருப்புகளையும், போலீசாரையும்தயாராக வைத்திருப்பதாய் வெளிவந்த செய்தியை இப்போது உத்தியோக தோரணையில் மறுத்துவிட்டார்கள். எனினும், உள்ளூர இப்போது அமைதியற்ற நிலைமை இருந்துவருகிறது. சரீர அசௌகரியமாக இருந்து குணமடைந்துள்ள ஹர் ப்ளாம்பர்க் சமீபத்தில்தான் பர்லினுக்குத்திரும்பி வந்து, 'ரீச்வா' நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். ஹர் ப்ளாம்பர்க் டிரென்டனிலுள்ள ஆஸ்பத்திரியிலிருந்தபோது, அவரை ஹர் ஹிட்லர் இரண்டு தடவைபோய் பார்த்தார். அதிலிருந்து தான் வதந்திகள் உலாவ ஆரம்பித்தன.

## சேலத்திற்கு மேட்டூரிலிருந்து ஜலசப்ளை

### சர்க்கார் நிபந்தனைகள்

மேட்டூரிலிருந்து சேலத்துக்குக் குடிதண்ணீர் சப்ளை செய்ய சேலம் முனிஸிபாலிட்டியார் சர்க்காருக்கு ஒரு தூதுகோஷ்டியை அனுப்பினர். அவர்கள் சர்க்காரிடம்இந்தத்திட்டத்தை சீக்கிரமாகமுடித்து வைக்கக் கேட்டுக் கொண்டனர்.சர்க்கார் சில நிபந்தனைகளை ஏற்படுத்திஇருக்கின்றனரென்றும், நகரசபையின்அனுமதி பெற்றபின் அதை ஆரம்பிப்பார்களென்றும் தெரியவருகிறதுஇத்திட்டத்தைப்பூர்த்தி செய்ய22 லட்சம் ரூபாய்பிடிக்குமென்று மதிப்பிடப்படுகிறது. சர்க்கார் இதில் பாதியைகிராண்டாக கொடுத்து,பாக்கியைசேலம்நகரசபைக்குத் கடனாகக் கொடுப்பதாகவும் தீர்மானித் திருக்கின்றனர். இதற்கு மேல்இதைப்பரிபாலிக்க வருஷத்துக்கு ரூ 59,119 செல்லுமென்றுமதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படிக் கொடுக்கப்படும் கடன் வருஷத்துக்கு $4\frac{3}{4}$ சத விகித வட்டியுடன் 30வருஷத்திற்குள் நகரசபையால் கொடுக்கப்படவேண்டும்.

29-11-34ல் இதற்கென்று கூட்டப்படும் விசேஷ நகரசபைக் கூட்டத்தில் இந்த நிபந்தனைகள் யோசிக்கப்படுமெனத்தெரிகிறது.

## திருச்சி சுயமரியாதைச் சங்கம்.

### ஜஸ்டிஸ் கட்சியினர்களுக்கு வேண்டுகோள்.

25-11-34ந் தேதி மாலை 7 மணிக்கு திருச்சி சுயமரியாதைச்சங்க நிர்வாகிகளின் கூட்டம் தோழர் எஸ். நீலாவதி அவர்கள் தலைமையின் கீழ் நடந்தது. அங்கத்தினர்கள் அனைவரும் விஜயஞ்செய்திருந்தனர். அது போது பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

**தீர்மானங்கள்.**

ஜஸ்டிஸ் கட்சியின் ஆரம்பமுதல் அதன் வளர்ச்சிக்குறிய பிரசாரங்களில் முதன்மை வாய்ந்த தொண்டாற்றிய தோழர் ஜே. என். ராமநாதன் அவர்கள் அகாலமரணமானதைக்குறித்து இக்கூட்டம் வருந்துவதுடன் ஷை யார்களின் குடும்பத்திற்கும் அபிமானிகளுக்கும் மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. (தலைவர்)

இக்கூட்டம் நமது மாகாண நான்காவது சுயமரியாதை மகாநாட்டை விரைவில் நடத்துமாறு மத்தியசபை கமிட்டியினரைக்கேட்டுக் கொள்கிறது. (தலைவர்)

நமது ஜில்லாவில் ஒரு வாரப்பத்திரிகை ஆரம்பித்து இயக்க கொள்கைகளைப் பரப்புவதற்கான முயற்சிகள் எடுத்து வெற்றிகரமாக முடிக்க பின் வருபவர்களடங்கிய கமிட்டியொன்றை இக்கூட்டம் நியமிக்கிறது.

தோழர்கள் இராமசுப்ரமணியம், கே. கலியபெருமாள், என். சங்கரன், ந. சு. மு. செல்வக்கணபதி, எ. எ. கிரி, தி. திரவியம், பி. நடராஜன், எஸ். அபிமன்னன், கே. வி. எம். லட்சுமணன், டி. கே. இராமு, டி. எம். வெங்கடாசலம்,

பிரரே,:—இராமாநுஜம்
ஆமோ:—எ. எ. கிரி

இக்கூட்டம் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சமீபத்தில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மகாநாட்டில் கொணர்ந்து ஆலோசனையிலிருக்கும் வேலைத்திட்டத்தீர்மானங்கள் டிசம்பரில் கூட்டப்போகும் கட்சியின் கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேற்றி விரைவில் அமுலுக்குக்கொண்டுவரவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறது.

பிரரே:—செல்வக்கணபதி
ஆமோ:—என். சங்கரன்.

இக்கூட்டம் நமது ஒப்பற்ற பார்ப்பனரல்லாத வாலிபராகவும், திறமை வாய்ந்தவராகவும் சமூக சீர்திருத்தத்தில் மிகவும் ஆர்வ முள்ளவராகவும் உள்ள தோழர் கே. எம். பாலசுப்ரமணியம் அட்வகேட் அவர்களை இந்திய சட்டநிரூபண சபையின் நியமன அங்கத்தினராக சென்னை மாகாணத்தின் சார்பாக நியமிக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

பிரரே:—என். சங்கரன்
ஆமோ,:—டி.கே. இராமு

இக்கூட்டம் பார்ப்பனரல்லாததலைவர்கள் தோழர் சர். ஆர். கே. ஷண்முகம், எ. ராமசாமி முதலியார், தோல்வியுற்றதற்கு கட்சிக்குள்ளேயே சிலர் காரணஸ்தர்களாக விருப்பதால் அவர்களை வன்மையாகக்கண்டிக்கிறது.

பிரரே,:—கே. கலியபெருமாள்
ஆமோ,:—செல்வக்கணபதி

இக்கூட்டம் கடந்த இந்தியசட்டசபைத் தேர்தலில் பார்ப்பனரல்லாத அங்கத்தினர்களாக விருக்கும் தோழர்கள் சர். ஆர். கே. ஷண்முகம், எ. ராமசாமிமுதலியார், மற்றும் டாக்டர் பி. வரதராஜுலு அவர்களும் தோல்வி யடைந்தமைக்கு வருந்துவதுடன் பார்ப்பனரல்லாதாரை உடனே ஒரு ஸ்பெஷல் மகாநாடு கூட்டி அதில்பலவகையிலும் கட்சியைப் பலப்படுத்த முயற்சிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறது.

பிரரே,:—என். சங்கரன்
ஆமோ,:—கலியபெருமாள்

இக்கூட்டம் தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் நாஸ்திகர்களின் எண்ணிக்கையை எடுத்து வருவதற்கு அதனை ஆதரிப்பவர்கள் இச்சங்கக் காரியதரிசிக்கு எழுத்து மூலமாக விரைவில் தெரிவிக்கும் படியாகக் கேட்டுக்கொள்கிறது.

பிரரே,:—எம். கிருபாபுரி
ஆமோ,:—வி. நடராஜன்

என காரியதரிசி எழுதுகிறார்.

## சிவகெங்கை தமிழர் கைத்தொழில் கல்வி நிலையம்.

### 6-வது வருடக்கொண்டாட்டம்.

நாளது 25-11-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நிலயக் கட்டிடத்தில் அமைக்கப்பட்ட பந்தலில் சிவகெங்கைவக்கீல்தோழர் எம். பொன்னுச்சாமி அவர்கள் தலைமையில் கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சி பிரமுகரான தோழர்ஜெ. என். ராமநாதன் அவர்களின் அனுதாபதீர்மானம் தலைவரவர்களால்கொண்டுவரப்பட்டு தோழர் எஸ். சிவசுப்பிரமணியம் அவர்களால்ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது. பிறகு நிலயமாணவ, மாணவிகளால் பாட்டுகள் பாடப்பட்டன. தலைவர் முன்னுரையாக நீண்டநேரம் நிலயத்தின் முற்போக்கைப்பற்றியும், தாழ்த்தப்பட்டவர்களின் நிலையைப்பற்றியும் கூறிய பிறகு காரியதரிசியால் நிலயவருடாந்திர அறிக்கை வாசிக்கப்பட்டது. கொண்டாட்டத்திற்கு வந்திருந்தவர்களுக்கும், நிலயமாணவ, மாணவிகளுக்கும் சிற்றுண்டியும், தேநீரும் அளித்த பிறகு தலைவரவர்களால் மாணவ, மாணவிகளுக்குப்பரிசளிக்கப்பட்டது. தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் வராததால் தோழர்கள் கிருஷ்ணன், சி. எ. ராம், எஸ். வி. சுப்பிரமணியம், (பஞ்சாயத்து போர்டு மெம்பர்) பி. அருணாசலம் (ப. மெம்பர்), எம். ரெத்தினம் (ப. மெம்பர்), கே. சோனைமுத்து, எஸ். கந்தசாமி ஆகியவர்கள் நமது முன்னேற்றம், நாம் செய்ய வேண்டிய வேலை, நமது கைத்தொழில் ஆகிய வைகளைப்பற்றி மிகவும் தெளிவாகவும், விரிவாகவும்பேசிய பிறகு தலைவர் முடிவுரையாகயாவருக்கும் பதில் கூறியமர்ந்தார். காரியதரிசி வந்தனோபசாரம் கூற கொண்டாட்டம் இரவு 8 மணிக்கு முடிந்தது.

**தீர்மானம்.**

"ஜஸ்டிஸ் கட்சிக்கும், ஆதிதிராவிடமக்களுக்கும் தூண் போல நின்று உழைத்தவர்களில் ஒருவரும், பொது நல சேவையிலீடுபட்டு உழைத்தவர்களில் ஒருவருமாகிய ஜெ. என். ராமநாதன் பிரிந்தமைக்கு இந்நிலயம் மிகவும் அனுதாபப் படுகிறதுடன், அன்னார் குடும்பத்திற்கும் இதைத் தெரிவித்துக்கொள்ளுகிறது" எனக் காரியதரிசி எழுதுகிறார்.

## இந்திய சட்டசபைக்கு.

### தாழ்த்தப்பட்டார் பிரதிநிதித்வம்.

கோலார் தங்கவயல் ஆதிதிராவிடரின் பொதுக்கூட்டம் 25-11-34 மாலை 5½ மணிக்கு மேல் உரிகம் A.I. பிளாக் மைதானத்தில் நடைபெற்றது. "தமிழன்" ஆசிரியர்ஜி. அப்பாதுரையார் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் ஜி. டி. ராஜனும் எம். ஜெயராமனும் இந்திய சட்டசபையும் தாழ்த்தப்பட்டார் பிரதிநிதித்வமும் என்பதாக பேசியபின் ஆசிரியர் முடிவுரையில் உண்மைத் தலைவர்கள் இந்திய சட்ட சபையில் இருக்கவேண்டிய அவசியமும் நம்பிக்கையுள்ள பிரதிநிதிகளைப் பற்றியும் பேசியபின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள்ஏகமனதாய் நிறைவேறியது.

1. ராஜ விசுவாசத்தீர்மானம்.

2. ஒடுக்கப்பட்டவர்களுக் குரிய பொதுவான முக்கிய விஷயங்களெல்லாம் இந்திய சட்டசபையிலேயே முடிவு செய்யவேண்டியவைகளாயிருக்கின்றபடியால் ஒடுக்கப்பட்டவர்களின் பிரதிநிதிளாகக் குறைந்தது ஐந்து பிரதிநிதிகளாவது இந்திய சட்டசபையில் நியமனம் செய்யவேண்டுமென்று வைஸ்ராய் அவர்களை இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

3. ஒடுக்கப்பட்டவர்களின் பூரணநம்பிக்கைக்குச் சிறந்த பாத்திரர்களாயிருந்துவரும் கோவை ஆர். வீரையன் அவர்களையும் டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் இந்திய சட்டசபையின் ஒடுக்கப்பட்டவர் பிரதிநிதியாய் நியமிக்கவேண்டுமென்றுஇம்மகாநாடு வைஸ்ராய் அவர்களைக்கேட்டுக் கொள்ளுகின்றது. என காரியதரிசி எழுதுகிறார்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

**1935 வரு உயர்ந்த சர்க்கார் 1935 வரு**

பரீக்ஷை **பதவி சம்பளம்** பரீக்ஷை

**வேண்டுமா?**

வருஷக்கணக்கில் படித்து இன்னும்
காலத்தை வீணில் கழிக்க வேண்டாம்!

அன்பையன்ஸ் ஸ்பெஷல் மெட்ரிக் கோர்ஸ்களை தபால் மூலம் வாசித்து சென்னையில் நடக்கும் சர்க்கார் கே. சீனியர் பரீக்ஷை பாஸாகி கலெக்டர் (I. C. S.) லாயர் (L. L. B.) வேலைகளுக்கு இங்கிலாந்திலும், கொளும்பிலும் படிக்கலாம். நமது மாணவர்களின் வெற்றி 1. கே. சீனிவாஸன் (மதுரை) 2. S. சுப்ரமணியம் (திருநெல்வேலி) 3. C. பரமசிவம் (சென்னை) 4. N. நஞ்சப்பா (சேலம்) 5. V. வில்சன் (கோயம்புத்தூர்) 6. S. சாம்பசிவராவ் (கோதாவரி) பீஸ் ஹைஸ்கூலில் 2 வருஷம்படித்தவர்களுக்கு ரூ. 100. 5 தடவைகளாக, ஹைஸ்கூலில் 2 வருஷம் படியாதவர்களுக்கு ரூ 200. 10 தடவைகளாக, சொற்ப மாணவர்கள் மட்டும் எடுக்கப்படுவதால் விபரத்திற்கு உடன் ஸ்டாம்பு அனுப்பவும்.

அன்பையன்ஸ் காலேஜ்,
ஆறுமுகநேரி S.I.R.

# காங்கிரஸ் ஸ்தாபன விளக்கம்.

## மோசடியே மலிந்திருக்கிறது.

### இந்திய சட்டசபைத் தேர்தலில் ஏன் ஜஸ்டிஸ் கட்சிக்கு வெற்றியில்லை.

(கல்லூரணி தோழர் க. அ. புன்னைமுத்து)

இந்தியாவில் 100க்கு 92 பேர்கள் எழுதப்படிக்கத் தெரியாததற்குறிகள். படித்தவர்கள் என்பவர்களிலும் 100க்கு 95 பேருக்கு பகுத்தறிவு கிடையாது. குருட்டு வழக்கபழக்கமும், பார்ப்பன மதக்கட்டுப்பாடுகளை யொட்டிய வீண் சடங்குகளும் இந்தியர்களுக்குச் சிறந்த ஆசாரம்.

இந்தியத் தலைவர்களோ? இறுமாப்புடையவர்கள். இந்திய வக்கீல்களோ என்றால் அநேகர் இருகைலஞ்சத்தில் நிபுணர்கள். இந்தியப் பொது ஜனங்களோ என்றால் ஏழுபிள்ளைக்காரி வருகிறாள் என்றவுடன் ஊர்கள் தோறும் வீடுகளில் வேப்பிலையைக் கட்டும் வீரர்கள். பார்ப்பன ஆதிக்கமே இந்தியாவில் தலை சிறந்தது.

காயாசம் பூண்ட ஆசாட பூதிகளுக்கும், மந்திர ஜோதிடங்களைக் கைக்கொண்ட கபடர்களுக்கும், பூசாரிகள், புரோகிதர்கள், சாமி ஆடிகள் என்பவர்களுக்கும பிற மனிதரை மனிதவர்க்கத்தில் சேர்த்து எண்ணாத குறும்பர்களாய் தாங்களே பிர்மாவின் முகயோனியிலிருந்து பிறந்த பிராமணர்கள், மற்றையோர் கீழுறுப்புகளில் பிறந்த சூத்திரர்கள் என, எண்ணம் சொல் செயல் ஆகிய மூவகையிலும் நடத்திக் காண்பிக்கும் பார்ப்பனர்களுக்கும் இங்கொன்று அங்கொன்றாய் பேசி எங்கும் நல்லவர்கள் போல்நடிக்கும் பித்தலாட்டக்காரர்களுக்கும், முதலாளிவர்க்கத்தின் கூலிகளாயும் வால்களாயுமிருந்து நாணயக் குறைவாய் நடக்கின்றவர்களுக்கும் இந்தியாவில் செல்வாக்கு அதிகம்.

இந்தியர்களில் பெரும்பாலருடைய புத்திக் கூர்மையையும், நிலைமையையும் பின் வரும் பரீட்சானுபவகாட்சிகளால் ஒவ்வொருவரும் நன்கு தெரியக்கூடும்.

1. காலராவியாதி கண்டவனுக்கு கால் ரூபாய்க்கு மருந்து வாங்கிக் கொடுக்கமாட்டார்கள். ஒரு ஏமாற்றுக்காரன் மந்திரத்தினால் இந்தவியாதி தீர்க்கிறேன் என்றால் அவன் கேட்கும் 21பணம் புதுவஸ்திரம் 7 புட்டிச்சாராயம் இத்தியாதி பொருளைக் கொடுத்து ஏற்படும் கஷ்டத்திற்குத் தலை விதிமேல் பழி போட்டு சாந்தியடைவார்கள்.

2. "உண்மையாக 1 ரூபாய் அசல் 6பைசா செலவு 1அணா லாபம் 1-1-6 ரூபாய்விலை"யென்றால் அந்தசாமானை 10அணா 12அணா என்றுகேட்பார்கள்

அதே சாமானை, "எல்லாருக்கும் 1-15-0க்கு விற்பது, உங்களுக்காக 1அணா குறைத்து 1-14-0கொடுங்கள் உங்கள் தகப்பனார் நமக்கு ரொம்ப பழக்கம்"என்றால், 1-12-0 வரையும் கேட்டு வாங்கிவிடுவார்கள்.

3. எல்லாமக்களும் சமமாய் சம அந்தஸ்தாய் இருக்கவேண்டும், வகுப்பு உயர்வு தாழ்வு கூடாது, ஏமாற்றுஒழியவேண்டும், மக்களின்முன்னேற்றத்தடை களாயுள்ள அநாசாரப்பழக்க வழக்கம், குருட்டு நம்பிக்கைகள் ஒழிய வேண்டும் என்னும் பாரபட்சமற்ற கொள்கையுடைய இயக்கத்தைப் பழித்துப் பேசி வெறுப்படைவார்கள்.

மனிதனை மனிதன் ஏமாற்றி மனிதனை மனிதன் அல்லல்படவைத்து மனிதனுக்கு மனிதன் பிறப்பினால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் தொடக்கூடாதவன் பார்க்கக் கூடாதவன் என்பவைபோன்ற சூழ்ச்சியின் கொள்கையையுடைய இயக்கத்தைஆதரித்துப் போற்றிப் பேசி விருப்பங்கொள்வார்கள்.

4. கூலிக்கு மாரடிப்பவர்கள், இயக்கத்தின்பேரால்பிழைப்பவர்கள், குல்லாப்போட்டுப்பேசுபவர்கள்,சொல்லும் செயலும் வெவ்வேறானகபடர்கள், இயக்கத்தின் பேரால் உண்டியல் பிச்சை வாங்கி வயிறுபுடைக்கத் தின்றுகொழுப்பவர்கள் முதலியநரையான்கள் இல்லாத, சுயமரியாதை இயக்கத்தைத் தூசிப்பார்கள்.

கைக்கூலி பெற்று பிரசாரம் செய்பவர்கள், காந்தி, காங்கிரஸ் என்ற பெயரால் எல்லாத்துறையிலும்பிழைப்பவர்கள், எண்ணம் வேறு, செயல் வேறாய் நடிக்கும் வேஷக்காரர்கள், காணிக்கை உண்டியல் என்கின்றவை போன்ற பித்தலாட்டமான காரியங்களைச் செய்து வயிறு வளர்ப்பவர்களும்,பிர்மபுத்திரர்கள்என்னும்மாய்மாலப்பார்ப்பனர்களும்நிறைந்துள்ள காங்கிரஸ் இயக்கத்தை நேசிப்பார்கள்.

5. மனித சமூகத்திற்கு இன்றியமையாத மூடநம்பிக்கைகளை ஒழித்தல், வெறுக்கத்தக்க வகுப்பு வித்தியாசங்களை அகற்றல், பிறப்பிலேயே உயர்ந்தவர் நாங்களென்போர் கொட்டத்தை அடக்கல், பால்யமணம் தடுத்தல், பெண்ணுரிமை, விதவா விவாகம், சமத்துவம், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், இரக்கம், நம்பிக்கை நாணயம் முதலியவைகளை அபிவிருத்திசெய்தல் முதலிய நல்ல நல்ல விஷயங்களைப் பத்தி பத்தியாய் வெளியிடும் பத்திரிகைகளை வாங்கிப் படிக்க மாட்டார்கள்.

"அதோ மாலை 5மணிக்கு மோட்டாரில் அழகான பெண் வந்திறங்கினாள்" என்பவை போன்றதால் ஆரம்பித்து எழுதப்படும் நாவல்களுக்கும், கும்பகோணத்துமாமாங்கத்திற்குக்கும்பல் கும்பலாய் போங்கள்,தீபாவளியைக் கொண்டாடுங்கள், கிருஷ்ண ஜயந்தி, காந்தி ஜயந்தியைக் கொண்டாடுங்கள் என்பது போன்ற அநாகரிகமான விஷயங்களையும், மகாத்மா காந்தி புறப்பட்டார், நடந்தார், அவர் ஏறினார், குந்தினார், சவ்வாரி போனார், காரைநிறுத்தி இறங்கினார், இறங்கும்போது சிரித்தார், புன்முறுவலாகப் பார்த்தார், ஒன்றுக்கு இருந்தார் என்பவை போன்றசாரமற்றசெய்திகளையும் வெளியிட்டு வீணே பெயருக்காகவும் பிழைப்புக்காகவும் நடத்தப்படும் பத்திரிகைகளை ஆவலுடன் வாங்கிப்படிப்பார்கள்.

6. வருஷமெல்லாம் உழைத்துப் போடும் ஊழியக்காரனுக்கு கூலி கொடுக்கும் போது வயிற்றெரிச்சலோடு ஒன்று மூக்காலாய் கடுகடுப்பாய் கொடுப்பார்கள்.

பஞ்சாங்க தட்சணை, அய்யர் தட்சணை,குருக்கள்கட்டளை அர்ச்சனைக்கட்டளை, பரமண்டலயாத்திரைக்கனுப்புவோர் தட்சணை, குறிகாரர் தட்சணை, கோடாங்கி தட்சணை, அம்மன் கொண்டாடி தட்சணை ராமாயண கால க்ஷேபவரி, கோவில் வரி, திருவிழா வரி, பொங்கல் வரி, பண்டிகை வரி, ஜயந்தி வரி, மகாத்மாகாந்திக்கு தட்சணை, காந்தி பக்தர்களுக்கு வயிற்றுச்சோற்றுக்கு உண்டியல் தட்சணை என்று வீணான வெறும் ஏமாற்றுக்காரர்களுக்கு கொள்ளை கொள்ளையாய் அள்ளி அள்ளிக்கொடுத்துத் திருப்திப்படுத்துவார்கள்.

7. ஏழு பிள்ளைக்காரி வருகிறாள் என்றவுடன் வீடுகள் தோறும் வேப்பிலையைக்கட்டுவார்கள், உண்மையை விளக்கிச்சொல்லி எடுக்கச்சொல்பவர்களை குறும்புத்தனமாய் பழித்துப்பேசுவார்கள். இத்தன்மையாய் இந்தியர்கள் நிலைமையும், புத்தியும் இருந்து வருவதற்கு இந்திய பார்ப்பனர்களின் ஆதிக்கமும், அதிகாரமும்தான் காரணமாகுமென்றால் அதில் பிசகில்லை. ஏனென்றால், இந்தியர்களுடைய குருட்டுப்பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள், வகுப்புவேற்றுமைகள், வீண் சடங்குகள் முதலிய எல்லாக்காரியங்களும் பார்ப்பனீய சொந்த முதலும், இயக்கமும் ஆகிய சாதிகள் மதங்கள் என்பதிலிருந்தே விளைந்து வருவதாகும்.

எனவே, இப்போது நடந்த இந்திய சட்டசபைத் தேர்தலில், பார்ப்பனர்களுக்கு எல்லாவகையிலும் முழு ஆதிக்கமுடைய காங்கிரஸ் சார்பில் நின்ற அபேட்சகர்களுக்கு வெற்றியா? அல்லது பார்ப்பான் முதல் "பறையன்" வரையுள்ள எந்த வகுப்பானுக்கும் அவனவன் விகிதாச்சாரமாக உத்தியோகம் கொடுக்க சௌகரிய மளிக்க வேண்டும் என்னும் நியாயத்தைத் தழுவிய ஜஸ்டிஸ் கட்சியின் சார்பில் நின்றவர்கள் வெற்றியா? என்றால், மேலே காண்பித்தபடி இயல்பில் உள்ள இந்தியர்களுடைய நிலைமையையும், பகுத்தறிவுக் குறைவையும், பார்ப்பனர் ஆதிக்கத்தையும் பொருத்த மட்டில் பார்ப்பனராதிக்க சபையான காங்கிரஸ் சார்பில் நின்ற அபேக்ஷகர்களே வெற்றிபெற்றார்கள். காங்கிரஸ் சார்பில் நின்றவர்கள் வெற்றி பெற்றதானது இந்தியாவை பாமரர் நிரம்பிய நாடு என்று வெளி நாடுகளுக்கு பளிங்கு போல் எடுத்துக்காட்டுவதாகும்.

(தொடரும்)

## கோவை முனிசிபாலிட்டி

### வைஸ் சேர்மன் தேர்தல்

ஷை முனிசிபாலிட்டிக்கு வைஸ் சேர்மன் தேர்தல் 26-11-34ந் தேதி சேர்மன் எஸ். என். பொன்னையா கவுண்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் தோழர் ராகவாச்சாரியார் அவர்கள் வைஸ்சேர்மனாகத்தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## சுகாதாரக் கொண்டாட்டம்.

சூலூருக்கு அடுத்த காங்கயம்பாளையம் கிராமத்தின் போர்டு பாடசாலையில் 25-11-34ந் தேதி மாலை 1 மணிக்கு ஷை பாடசாலை மாணவ மாணவிகளாலும், சூலூர் லண்டன் மிஷன் ஸ்கூல் மாணவ மாணவிகளாலும் ஊர்வலம் ஒன்று நடைபெற்று சிற்றுண்டிக்குப் பின் மாணவ மாணவிகளின் பந்தய விளையாட்டு நடைபெற்று, வெற்றி அடைந்தவர்களுக்கு முறைப்படி உள்ளூர் மணியகாரர் பரிசு கொடுத்தார். பின் ஷையார் தலைமையில் தோழர்கள் சூலூர் லண்டன் பாடசாலை ஆசிரியர்கள், சு. ம. சங்கத் தோழர் எஸ். டி. சம்பந்தம், காடம்பாடி ஆசிரியர்கள், உள்ளூர் ஆசிரியர்கள் தோழர்கள், சே. கிருஷ்ணன், சுப்பண்ணன் முதலானவர்கள் சுகாதார வாழ்வு என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். தலைவர் முடிவுரையுடனும், வந்தனத்துடனும் கூட்டம் 5-30 மணிக்கு இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதினார்.

## திருமங்கலம்.

திருமங்கலம் யூனியன் பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல் நடைபெற்றதில் தோழர் பூ. பெ. பெ. சிதம்பர நாடார் அவர்களை தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா இம்மாதம் 25ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு நாட்டுபிள்ளையார் கோயில் தெருவிலுள்ள வேணு கோபால் செட்டி பார்க்கில் சிறப்பாக நடைபெற்றது. சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்களும், அபிமானிகளுமாக சுமார் இருநூறுபேர்கள் கூடியிருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் பெயர் வருமாறு:—

தோழர்கள் கே. முருகேசன், பாட்ரிக், வி. ராமசாமி, மையிலை. சீனி வெங்கிடசாமி, எம். கே. அழகப்பா, டி. என். நடராஜன், கோவிந்தராஜு முதலியார், சி. பி. சரவணம், துரைசாமி நாயுடு, துரைக்கண்ணு (உதவி ஆசிரியர் "ஆனந்தபோதினி"), நடேசமுதலியார், பி. வாசுதேவன் (ஆதிதிராவிடசேவாசங்கம்), சுவாமி தர்மதீரர், ரத்தினவேலுசெட்டியார் (காரியதரிசி. ஆர். பி. ஏ. லண்டன், கிளைச்சங்கம்), திருவாரூர் டி. என் ராமன், பக்கிரிசாமி, ஜி. பொன்னுரங்கம், ராஜரத்தின முதலியார், ராஜு முதலியார், தீனதயாளுநாயுடு ஆர். சீனிவாசராவ் (உதவி ஆசிரியர் ஆனந்தபோதினி), சின்னசாமி ஐயர், டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் (ஆசிரியர் "தமிழரசு"), இ. திருஞானசம்பந்தம் (நாகை) நாகை வீராசாமி, துரைசாமி, எம். சிங்காரவேலு, எம். நடராஜன், இ. சிவம் (உதவி ஆசிரியர் "ஊழியன்"), வி. ராமசாமி, ரத்தினசபாபதி (காரியதரிசி கலைவாணிக்கழகம்), மயிலை எல். பி. பாலசுந்தரம், பஞ்சாட்சரம், எல்லப்பன், பாலூர் முருகன், பெரியமெட் கந்தசாமியார், சென்னை சுப்பிரமணியர், சி. தங்கராஜ், எல். லூயிஸ் முதலியவர்களாகும்.

பின் "டூல்" ஆசிரியர் தோழர் ஆ. பாலசுந்தரம் பி. ஏ., எல். டி., தலைமை வகித்தார். முதலில் இருவாலிபர்கள் சமதர்மகீதங்களைப்பாடினர். காரியதரிசி தோழர் டி. சம்பந்தம் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறையில் தோழர் பாலசுந்தரம் இந்த இயக்கம் ஏற்படுவதற்கு நீண்டகாலத்திற்கு முன்னரே சுயமரியாதைக்கொள்கைகளை ஏற்றுக்கொண்டவரென்றும், ஆயினும் பற்பல அசௌகரியங்களை யொட்டி வெளியில் வந்து பிரசாரம் செயயவில்லை என்றும் அத்தகைய உண்மை சுயமரியாதையாளரின் தலைமையில் இந்த ஆண்டுவிழா நடப்பது சிலாக்கியமென்றும் கூறினர். அப்பிரேரபணையை மற்றொரு காரியதரிசியான தோழர் எஸ். ரங்கநாதம் அவர்கள் ஆமோதித்த பின் தலைவர் தலைமைவகித்து முன்னுரையாக சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைப் பற்றிவிளக்கமாகப் பேசினர்.

பின்னர் காரியதரிசியால் ஆண்டு அறிக்கை படிக்கப்பட்டது. தோழர் வி. ராமசாமி பேசுகையில் கூறியதாவது:— சென்னையைப்போன்ற ஒரு பெரிய நகரத்தில் பல எதிர்ப்புக்களினிடையே இச்சுயமரியாதை இளைஞர் மன்றத்தார்- ஓரளவேனும் காரியத்தைச் செய்திருப்பது கண்டு சந்தோஷப்படுகிறேன். சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்தில் பார்ப்பனீயத்தையும் மற்றும் பல மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்து மக்களிடையே பகுத்தறிவும், சமத்துவமும் விளங்கும்படி செய்யவே ஏற்பட்டது. ஆனால் நாளடைவில் சமயத்தையும் ஆலயங்களையும் ஏன்? கடவுளையும் கூட எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அப்போதுதான் இவ்வியக்கத்தின் ஆதரவு சற்று குறைந்தது என்று கூறி சுயமரியாதை இயக்கத்தார் காங்கிரசைக்கைப் பற்றி வேலைசெய்ய வேண்டு மென்று கூறினர்.

பின்னர் தோழர்கள் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார், எம். எஸ். முத்து, கே. எல். நாதன் ஆகியோரும் சுயமரியாதை இயக்கத்தார் காங்கிரசைக்கைப்பற்ற வேண்டுமென்னும் கொள்கையை ஆதரித்துப் பேசினர்.

பிறகுதோழர் டி. என். ராமன் அவர்கள் பேசுகையில், இதற்கு முன் பேசிய தோழர்களின் கொள்கையைத்தான் ஏற்றுக்கொள்ள முடியாமைக்காக வருந்துவதாகவும், இதனாலேயேதான் காங்கிரசைக்குறைகூறுவதாகக் கருதல்ல வென்றும், முக்கியமாகத்தமிழ்நாடு காங்கிரசில் பிராமண சூழ்ச்சி அதிகமாக இருப்பதால் சுயமரியாதைக்கொளகை அங்கு ஏறுவது கஷ்டமென்றும், காங்கிரஸ் அதனுடைய வேலையைச் செய்து கொண்டு போனால் நம் இயக்கமும் நாமும் நமது வேலையைச் செய்து கொண்டுபோவோம் என்றும் இந்தத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதைக்கொண்டே சில தோழர்கள் மயங்கிப்போயிருப்பது தவறென்றும், பார்ப்பன சூழ்ச்சியினாலேயே காங்கிரஸ் வெற்றி பெற்றதே யொழிய வேறில்லை யென்றும் கூறினர்.

தோழர் ரங்கநாதம் இதை ஆதரித்துப்பேசினர். தலைவர் தமது முடிவுரை கூறிய பின் மன்றத்தின் பொக்கிஷதார் தோழர் ராதாகிருஷ்ணன் வந்தனம்கூற கூட்டம் இனிது முடிந்தது என ஷை மன்றத்தின் காரியதரிசி எழுதுகிறார்.

## ஒரு யோசனை.

ஜஸ்டிஸ் கட்சிப் பத்திரிகைகளை வெளிப்படுத்துவதில் சரிபான அஸ்திவாரம் போட்டுக் கொண்டு பத்திரிகைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும், முதலில் தலைவர்கள் சிலர் ஒன்று கூடி பேசி ஒரு முடிவு செய்து கொள்ள வேண்டுமென்றும், நல்லதொரு திட்டம் போட்டுக்கொள்ள வேண்டுமென்றும், அரசியல் திட்டத்தில் ஒப்புக் கொள்ளக் கூடியதை ஒப்புக் கொண்டு மற்றதைத் திருத்தும்படி கேட்க வேண்டும் என்றும், பார்ப்பனரல்லாத பத்திராதிபர்கள் ஒற்றுமையாய் இருக்கவேண்டும் என்றும், சமதர்மமே நமது லட்சியமானாலும் அதைச் சிறிது தளர்த்தி விட்டு பார்ப்பனரல்லாதார் இழிவை நீக்க முதலில் பாடுபட வேண்டும் என்றும், பிராமணரல்லாத தலைவர்களும், பத்திராதிபர்களும், பிராமணரல்லாத சமூகம் பலப்படும் வரை எல்லாக் கொள்கைகளையும் விட்டு விட்டு பிராமணரல்லாத சமூகம் முன்னுக்கு வர வேண்டிய முக்கியமான திட்டங்களை வகுத்துப் பிரசாரம் செய்து வர வேண்டும் என்றும் இப்போது ஆரம்பிக்கப் போகும் திராவிடன் பத்திரிகை நம் சமூகத்திலுள்ள பாமர மக்களைச் சீர்திருத்தம் செய்யும் முறையில் நம் தேச நிலைமையை கவனித்து நடத்தப்பெற வேண்டும் என்றும், ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள தலைவர்கள் குறைந்தது 500 சந்தா சேர்த்து கொடுக்க வேண்டும் என்றும், தண்டலம்பட்டு தோழர் சித்தா ரெட்டியார் நீண்டதொரு கட்டுரை எழுதுகிறார்.

## நாடார் மகாஜன சங்கம் மதுரை.

### ஏழைமாணவர் ஸ்காலர்ஷிப் 3 வது லாட்டரி.

இன்று நமது சங்கக் காரியதரிசிகள் தோழர்கள் ஆ. அ. ஆறுமுக நாடார் பெ. சி. சிதம்பர நாடார் அவர்களும் தூத்துக்குடி எ. எம். எல். அண்ணாமலை நாடார் அவர்களும், மதுரை, தோழர்கள் ப. வ. விநாயகமூர்த்தி நாடார், என். எஸ். வி. வி. ராமலிங்கநாடார், பி. ஆர். முத்துச்சாமி அவர்களும், மதுரை டவுனிலுள்ள ஒவ்வொரு கடைக்கும் சென்று ஏராளமான டிக்கெட் புத்தகங்களை விற்பனை செய்து கொண்டிருக்கிறார்கள். மதுரையிலுள்ள மஹாஜனங்கள் அனைவரும் வெகு குதூகலத்துடன் டிக்கெட்களை பெற்று வருகிறார்கள்.

நாளை மறுதினம் மதுரைவிற்பனைப்பிரசாரத்தை முடித்துக்கொண்டு மதுரை ஜில்லாவின் சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். வெளியூரிலிருந்து டிக்கெட்கள் விற்பனையாகி பணமும் அடிக்கட்டையும் ஏராளமாய் வருகிறது.

பிரைஸ் எடுக்க வேண்டிய 10-12-34உ அதிக சமீபத்திலிருக்கிறபடியால் ஏற்கனவே சீட்டு புத்தகம் பெற்றிருக்கும் அன்பர்கள் யாவர்களும் அதிசீக்கிரம் டிக்கெட் புத்தகங்களை விற்பனை செய்து அடிக்கட்டைகளையும் பணத்தையும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் என பொதுக்காரியதரிசிகள் எழுதுகிறார்கள்.

## புதுப்பாளையம்.

### பஞ்சாயத்து போர்டு தலைவர் தேர்தல்.

இவ்வூர் பஞ்சாயத்து போர்டின் கூட்டம் 26-11-34 பிற்பகல் 12.30 மணிக்கு தற்காலிகத்தலைவர் தோழர். வி. சீதாராம ரெட்டியார் அவர்கள் தலைமையில் கூடிற்று: ஆஜராயிருந்த 10அங்கத்தினர்களும் இராஜ விசுவாச பிரமாணம் செய்தார்கள்.

பிறகு 1மணிக்கு தலைவர் தேர்தல் நடைபெற்றது. தோழர் அண்ணாமலை ரெட்டியார் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தோழர் சங்கர செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்களை ஏகமனதாக தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பிறகு 2மணிக்கு தலைவர் தோழர் பி. ஆர். குப்புசாமி அவர்கள் தலைமையில் உபதலைவர் தேர்தல் நடைபெற்றது. தோழர் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் ஏகமனதாகஉபதலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். மாலை 4மணிக்கு உபதலைவர் தோழர் அண்ணாமலை ரெட்டியார் இல்லத்தில் தேநீர் விருந்து நடைபெற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## தோட்டிகள் மறுப்பு.

### புதிய தோட்டிகள் நியமனம்.

பாளையங்கோட்டை முனிசிபல்சபையின் சாதாரணக் கூட்டம் சேர்மன் தோழர் டேனியல் தாமஸ் தலைமையில் நடைபெற்றது. வக்கீல் தோழர் பி. ஏ. தங்கசாமி, கலால் ஆலோசனை போர்டுக்கு அங்கத்தினராக (முனிசிபல் சபை பிரதிநிதியாக) தேர்ந்தெடுக்கப்பட்டார். பாளையங்கோட்டையிலுள்ள முனிசிபல் தோட்டிகள், பாளையங்கோட்டை முனிசிபல் எல்லைக்குள்ளுள்ள ஆதிதிராவிடர்கள் வசிக்கும் பச்சேரிகளில் கக்கூஸ் எடுக்க மறுத்தார்களாம். ஆதிதிராவிடர்கள் (பள்ளர்கள்) தாழ்த்தப்பட்ட ஜாதியாரென்று சொல்லப்படுவதினால் அவர்களுக்கு கக்கூஸ் எடுக்க முடியாது என்று தோட்டிகள் மறுத்ததாகத்தெரியவருகிறது. எனவே இவ் விஷயத்தை ஆலோசனை செய்து, ஆதிதிராவிடர்களுக்கு கக்கூஸ் எடுப்பதற்கு சம்மதிக்கும் சுமார் 10 தோட்டிகளை தூத்துக்குடியிலிருந்து வரவழைத்து அவர்களை, ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ 9-8-0 சம்பளத்தில் நியமிப்பதென முடிவு செய்தார்கள். பின்னர் மற்றுஞ் சில விஷயங்கள் ஆலோசனை செய்து முடிவு செய்த பிறகு கூட்டம் இனிது முடிவு பெற்றது.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

கலந்ததாயிருந்தது. முற்காலத்திலிருந்த பிரஞ்சுக் கணித சாஸ்திரி பிரக்யாதி பெற்ற டெஸ்கார்ட்டிஸ் என்பவர் ஆத்மா என்ற ஒன்று இல்லையென்றும், பிராணிகளுக்கு ஜீவாதாரக் கொள்கை யென்று கிடையாதென்றும் சொல்லி யிருக்கிறார். ஒரு வாலில்லாக் குரங்கின் உடலோ, அல்லது ஒரு கழுத்தின் உடலோ ஒரு வெறும் இயந்திரம் என்று அவர் கூறியிருக்கிறார். வேடிக்கையாகப் பேசும். அக்காலத்திய வைதீகப் பெண் ஒருத்தி "டெஸ்கார்ட்டிஸ் தீர்மானப்படி ஆண் நாய் என்ற இயந்திரத்தையும், பெட்டை நாய் என்ற இயந்திரத்தையும் சேர்த்தால் குட்டிநாய் என்னும் சிறிய இயந்திரம் நமக்குக் கிடையாது" என்று கூறினார்.

தற்காலத்திய இயந்திரசித்தாந்தம், அல்லது வாழ்க்கைத் தத்துவம், உலகதத்துவம் அல்லது லோகாயதம் என்பதற்கு இது தான் ஆரம்பம். பிரஞ்சு என் சைக்ளோ பீடிஸ்ட்கள் "நாய் விஷயத்தில் எதுஉண்மையோ அதுவேமனிதனிடத்திலும்உண்மை" என்று கூறுகிறார்கள். அவர்களில் ஒருவர் "மனிதன் ஒரு இயந்திரம்" என்ற பேர்போன ஒரு நூல் எழுதினார். டிஸ்கார்டிஸ் என்றவர் மிக நுண்ணியபரமாணுக்களிலிருந்து கிரகங்களும், நட்சத்திரங்களும் எப்படி உண்டாகி வளருகின்றன வென்பதை பற்றிய ஒரு சிந்தாந்தத்திற்கான ஆதி கருத்துக்களை அவர் புராதன கிரேக்கர்களிடமிருந்துபெற்றார். அவருடைய கருத்தை ஸ்வீடென்போர்க் கடன் வாங்கினார். அதை ஜெர்மன் தத்துவ சாஸ்திரி கரண்ட் என்பவரும், பிரக்யாதி பெற்ற பிரஞ்சு இயற்கை சாஸ்திரி பப்பூன் என்பவரும் விருத்தி செய்து வைத்தார்கள். அப்படிப்பட்ட சித்தாந்தங்கள் உலகத்தின் சிருஷ்டி கர்த்தா என்னும் எண்ணத்தை அடியோடு ஒழித்து விட்டதாகவே தோன்றுகிறது.

இந்த விதமாகவே பதினெட்டாவது நூற்றாண்டுக்கு முன்பே விஞ்ஞானம் நாஸ்திக வளர்ச்சிக்கு சக்தி அளித்துக்கொண்டு வந்தது. ஆனால் இந்த உதவி மிகவும் குறைந்ததாகவே இருந்தது. விஞ்ஞானத்தில் மனிதர்களுக்கு அக்காலத்தில் கருத்தில்லாதிருந்தது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நாஸ்திக மதமென்பது ஏகீச்சுர கொள்கையாகவே இருந்தது. அது கிறிஸ்தவ நாகரீகத்திற்கு முந்திய நாகரீகத்தைப் புகழ்ந்தது. அது பைபிளை மிகப்பலமாய்க்கண்டித்தது. அது ஒரு இலக்கிய சரித்திர இயக்கமாக இருந்தது.

ஆகையால் அவ்வியக்கம் பொதுவாய் தேவைக்கு மேற்போனதாக இருந்தது. பைபிளில் உள்ள முரண்பாடுகளைக்கண்டுபிடிக்க அதிகமான படிப்போ, முயற்சியோ வேண்டியதில்லை. நோவா, ஜோனா கதைகளைப்பற்றி ஏளனஞ் செய்யவும் பிறவற்றிற்கும் படிப்பும் முயற்சியும் அதிகம், தேவையில்லை. பதினெட்டாவது நூற்றாண்டின் முடிவில் அது சரியானபடி அதிகமான விஞ்ஞான சம்பந்தம் பெற்றது. பைபிளின் கண்டனம் தர்க்கம் முதலியவை விஞ்ஞானத்தை ஒட்டி எழுந்தன. ஹீப்ரு நூலாகிய அப்புத்தகம் வெகு ஜாக்கிரதையாக வாசிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. பழைய ஏற்பாட்டின் ஹீப்ரு நூல் பூர்வகாலங்களில் பற் பல பகுதிகளில் ஏற்பட்ட புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட விஷயங்களின் தொகுப்பு என்று கண்டுபிடித்தார்கள். கிறிஸ்துவுக்கு சில நூற்றாண்டுகளுக்கு முன்பு யூதக்குருக்கள் மார்கள் அப்புத்தகங்களின் விஷயங்களை மாற்றியிருந்தார்கள்.

அதுவே பைபிளின் உயர்தர ஆராய்ச்சி எனப்படும். பதினேந்தாவது நூற்றாண்டிலிருந்தோ அல்லது பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்தோ பத்தாவது நூற்றாண்டைப்பற்றி இங்கிலீஷ்காரர்களுக்கு நம்மால் சுலபமாய்க் கூறமுடிவது போல ஹீப்ரு பைபிளில் பற்பல நூற்றாண்டுகளின் விஷயத்தை நாம் காணமுடியும். அது ஒரு நல்ல உபயோகமுள்ள நூல். அது பழையகால சாம்ராஜ்ய விஷயங்களெல்லாம் நம்முடன் சம்பந்தம் பெற்றிருப்பதால் அதன் விசேஷம் அதிகமாக இருக்கிறது. பரிணாம உதவியில்லாமல் மக்கள் கொண்டுள்ள பைபிள் பிரமாணம் சிதறுண்டு போகத்தக்கது. பைபிளில் சிருஷ்டி விபரங்களைப்பற்றிக் கூறும் முதல் புத்தகம் எனப்படும் "ஜீனிஸிஸ்" என்பது விஞ்ஞானத்திற்கே ஒத்துவராத ஒரு முரட்டு அபிப்பிராயத்தைக் கொள்வது.

இதே சமயத்தில் சரித்திரம் விஞ்ஞான வழிபற்றிய தாயிற்று. கியாதி வாய்ந்த ஆங்கில சரித்திர ஆசிரியர்களான ஹியூம், கிப்பன் ஆகிய இருவரும் உலகத்திற்கு அநேக சரித்திர புஸ்தகங்களைக் கொடுத்து வந்தார்கள். அவர்கள் எழுதிய சரித்திரபுத்தகங்கள் அவர்களுக்கு முந்தி வெளி வந்த சரித்திரங்களையெல்லாம் குழந்தைக் கதைகளாக்கின. மேற்கோள்களாகக் கூறப்படுபவைகளைத் தர்க்கித்துப்பார்க்க வேண்டுமென்று அவர்கள் ஜனங்களுக்கு முதல் முதலாகக்கற்பித்தார்கள்.

கிப்பன் என்பவர் "ரோம் ராஜ்யத்தின் அழிவும் வீழ்ச்சியும்" என்னும் சிலாக்யமான ஒரு புஸ்தகம் எழுதினார். அதன் ஒரு பகுதி குறிப்பாய் கிறிஸ்து மத எழுச்சி என்பதைப் பற்றி விளக்கிற்று. அது நாஸ்திகம் அதிகமாகப்பரவுவதற்குப் பெரிய சாதனமாயிற்று. முதன் முதலாக மனிதனுடைய சரித்திரம் கதைகளாக இல்லாமல் எழுதப்பட்டு வந்தது. தெய்வீகச் சம்பந்தமற்ற பூரண இயற்கைச் சம்பவமாகவே அது கருதப்பட்டது. ஏகீச்சுர கொள்கை பற்றிய கிப்பன் கடைசியில் நாஸ்திகனாகி விட்டார். அவர் சரித்திரத்தில் கடவுளுடைய ஒரு விரலும் வேலை செய்ய வில்லையென்று கண்டார். பிரசித்தி பெற்ற வான சாஸ்திரியான லாப்லேஸ் என்பவர் வான மண்டலங்கள் எங்கணும் கடவுள் செய்ததாக நம்பக்கூடிய அடையாளம் ஒன்றையுமே காணமுடியவில்லை என்றார்.

ஆகையினால் விஞ்ஞானத்தை விட சரித்திரமே ஆரம்பம் முதல் முக்கியமாய் நாஸ்திகத்திற்கு அஸ்திவாரமாய் இருந்திருக்கிறது. இன்றைக்கும் சரித்திரம் முக்கியமானதுதான். எனக்கு விஞ்ஞானமும் சரித்திரமும் ஒன்றுதான். சரித்திரம் என்பது மனிதனைப் பற்றிய தொடர்ச்சியான கதை. விஞ்ஞானம் அதன் பழையகால அந்தகாரத்தைப் போக்கி வாழ்க்கை அபிவிருத்தியை நன்கு விளக்கக் கூடியது. சரித்திரத்தின் முந்திய பாகம் பிந்திய பாகத்தைப் போலவே நாஸ்திகத் தன்மை பெற்றதாயிருக்கிறது. பரிணாமக் கொள்கையை நம்பாதவர்கள் பரிணாமத்தோடு ஏன் எதிர்த்து சண்டை போடுகிறார்கள்? ஏனென்றால் அது சிருஷ்டிகர்த்தா இல்லை என்பதில் கொண்டு விடுகிறது. அது போலவே நவீன சரித்திரம் மனித சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் அற்புதச் செயல்கள் என்பவைகளையெல்லாம் ஒழித்தே விடுகிறது. பின் மேற் செல்லுகிறது. சரித்திரத்தில் மனிதன் தட்டுத் தடுமாறினால் இரக்கமில்லாமல் அது மானிடர்களுக்கே இயல்பான சம்பவம் என்று விளக்கப்பட்டுப் போகிறது.

மேலும், இப்புதிய சரித்திரத்திற்குப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் மிகவும் பெரிய உதவி கிடைத்தது. சீர்திருத்தத்தினால் கிறிஸ்து மதம் பரவாதிருந்த நாடுகளில் வெறுப்புத் தோன்றிற்று என்ற விஷயம் பொய்யானதும் அர்த்தங் கெட்டதுமாகும். கிறிஸ்து உலகில் பிறப்பதற்கு முந்தி உலக மக்கள் யாவரும் அந்தகாரத்தில் அழுந்தி மரணத்தை நெருங்கிக் கொண்டிருந்தார்கள் என்னும் கட்டுக்கதை ஆரம்பமாயிற்று. இக்கட்டுக் கதை நவீன மக்கள் மனதிலும் ஆழமாய்ப் பதிந்து விட்டது. கிறிஸ்து மதத்திற்குப் புறம்பேயிருந்த நூலாசிரியரான ஹெச். ஜி. வெல்ஸ் என்பாரும் தமது "அவுட்லைன் ஆப் ஹிஸ்டரி" என்னும் நூலில் அவ்விஷயத்தைப் புகுத்தியிருக்கிறார். கிறிஸ்து மதம் பரவாதிருந்த பண்டைக்கால பெரிய நாடுகளில் உள்ளவர்களுக்கு வெல்ஸ் மிகவும் அநீதி இழைத்திருக்கும் விபரங்களைப் பற்றி வேறு புஸ்தகங்களில் கூறுவோம்.

இக்கட்டுக் கதை சீர்திருத்தக் காலத்திலிருந்தே உண்டாயிருக்க வேண்டுமென்கிறேன். கத்தோலிக்கர்கள் சமீப காலத்தில் பிராட்டஸ்டண்டுகளைப் போலவே அதைத் தாராளமாய் உபயோகிக்கிறார்கள். ஏனென்றால் அது உண்மையாகவே மார்ட்டின் லூதர் காலத்திருந்தும், சீர்திருத்தக்காரர் காலத்திருந்தும் ஆரம்பமாயிற்று. அதை உலகம் முழுதும் நம்பிற்று. அக்காலத்திற்கு முன்பு ஏராளமான கிறிஸ்தவப் படிப்பாளிகள் இருந்தார்கள். அவர்கள் புராதன கிரீஸ், ரோம் சிறப்புகளைப்பற்றி அறிந்திருந்தார்கள். டாண்ட்டி என்பவர் வியப்பிற்குரிய தமது கிறிஸ்தவக்காவியத்தில் கிறிஸ்துவரல்லாத கவிஞர் விர்ஜில் என்பவரைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டார். கோவிலை எதிர்ப்பதற்காக பெருமை மிக்க ரோமானியர்களையும், கிரேக்கர்களையும், நரகத்தில் போட மறுக்கிறார். கிரீஸ், ரோம் ஆகியவைகளின் மேல்காட்டப்பட்டமரியாதையானது புனருத்தாரண காலத்தில் இயற்கையாகவே மிகையாகக் கூறப்பட்டது. (ரோமில் அநேக போப்களைக் கிறிஸ்தவர்கள் என்றே சொல்ல முடியாது அவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்களாகவே இருந்தார்கள்.) சீர்திருத்தக்காரர்கள் எதிர் கட்சிக்கு இயற்கையாகவே சென்று விட்டார்கள்.

நவீன சரித்திரம் சமநிலையை உண்டாக்கிற்று. டாக்டர் ரீலியோடு நான் ஒரு முறை தர்க்க வாதம் செய்தேன். அப்போது ஆதிகர்த்தாக் கொள்கையை உடையவர்களுடைய மத வெறி கொண்ட தலைவர் நாம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே இருந்த கிரேக்கர், ரோமானியர்களைவிட இன்று அதிகமாக உயர்ந்து விடவில்லையென்று அழுத்தமாகக் கூறினார். அதைக் கேட்டு நான் வியப்படைந்தேன். "இரண்டாயிரம் வருஷங்களாக இருந்து வரும் கிறிஸ்து மதத்தின் நன்மையெங்கே" என்று நான் கேட்டேன். ரீலி கூறியது சரியானதென்றும் தவறானதென்றும் கூறலாம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் நடுவில் ஐரோப்பா மறுபடியும் புராதன கிரீஸ், ரோம், நிலைமைக்கு வந்தது. அது முதல் மத ஆதிக்கம் குறைந்து வந்தது. அதை நாம் கடந்து விட்டோம்.

கிரீஸிலும் ரோமிலும் உள்ள பெரிய நீதி சாஸ்திர நிபுணர்களெல்லாம் புதிய சரித்திரத்தில் தங்களுக்குப் பிரமாணம் தேடிக்கொண்டார்கள். புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு அழகிய அபிப்பிராயமும் ப்ளாட்டோவின் வார்த்தைகளுக்கும், ஸ்டாயிக்ஸ் சிஷ்யர்களின் வார்த்தைகளுக்கும் ஒத்திருந்ததாகக் காட்டப்பட்டது. நாஸ்திகத்திற்கு அது மற்றொரு கையாயிற்று. உலகம் ஏமாற்றப்பட்டது. ஆனால் மிகவும் அழகிய சக்தி வாய்ந்த ஆயுதம் பிறகு கண்டு பிடிக்கப்பட்டது.

(தொடரும்)

## பகுத்தறிவுக் கழக வெளியீடுகள்.

### பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

### முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

(சார்லஸ் T. கோர்ஹாம் மொழிபெயர்ப்பு)

இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும் மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

### நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

(பெர்ட்டிரண்ட்ரசல் மொழிபெயர்ப்பு.)

இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

### மதம் என்றால் என்ன?

(ராபர்ட் G. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 2.

### கடவுள்.

(ராபர்ட் ஜி. இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில்உலகிலுள்ள பல்வேறு கடவுள்களின்தன்மைகளையும், உலகத் தோற்றத்திற்குக்காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும்விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட்பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 5.

### மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

(பெர்ட்டிரண்ட் ரசல் மொழிபெயர்ப்பு)

இந்நூல் மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது. விலை அணு 3.

### நான் சம்சயவாதி ஆனதேன்?

(இங்கர்சால் மொழிபெயர்ப்பு.)

இதில், தான்கடவுளைப்பற்றிக்க வலைப்படாதவனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணு 3.

### பிரபஞ்ச உற்பத்தி

இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

### மதப் புரட்சி.

இஃது தோழர் ஜோசப் மெக்காபி அவர்களால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாகும். விலை அணு 4

### குடி அரசு கலம்பகம்.

இந்நூல், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் குடி-அரசில்எழுதிய தலையங்கங்களையும், பலமகாநாடுகளில்பேசியபேச்சுகளையும் ஒன்று சேர்த்துத்திரட்டியதாகும். 1-ம் பாகம். விலை அணு 6.

### பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்.

(பாதிரி சேனிக்யூ மொழிபெயர்ப்பு.)

இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோகங்களும், உள் எண்ணங்களும் பளிங்குபோல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. 1-ம்பாகம் விலை அணு 3.

### பிரகிருதி வாதம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவை இதில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை அணு 3.

### மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

இதில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள பேதங்கள் விளக்கப்பட்டிருக்கிறது. விலை அணு 3.

### "மெய்ஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்"

தோழர் ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதப்பட்டது. இதில் சகல விதமான மூடநம்பிக்கைகளும், விபரமான பதில்கள் இருக்கின்றன. சுமார் 128 பக்கங்கள் உள்ள நூல். விலை அணு 6.

ஷை இரண்டாம்பாகம்

சுமார் 115 பக்கங்கள் கொண்டதாகும். விலை அணு 5.

### பாதிரிகளின் பிரமச்சரிய லட்சணம்.

ஆசிரியர், ரெவரெண்டு

ஜி. டவுன் ஷெண்டு பாக்ஸ் M.A. மொழிபெயர்ப்பு

இதில் பிரமச்சரியம் என்னும் பெயரால் பல பாதிரிகள் செய்து வந்த அக்கிரமங்களைக் குறித்துச் செய்த சொற்பொழிவாகும். விலை அணு 4.

### மரணத்திற்குப் பின் ஜீவன் உண்டா?

என்பதைப் பற்றி பல ஆதாரங்களுடன் ஆராய்ச்சி செய்துள்ள ஆங்கிலப் புத்தகத்தின் மொழிபெயர்ப்பாகும். விலை அணு 4.

விலாசம்:—

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம்**

**லிமிட்டெட், ஈரோடு.**

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (தமிழ் மொழிபெயர்ப்பாகும்.)

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது ருஷிய பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V.I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும். விலை அணா 4.

## பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை எடுத்துக்காட்டும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட ஆராய்ச்சி நிரம்பிய நாஸ்திக விளக்க நூல். விலை அணா 4.

## கைவல்ய சாமியாரின் கட்டுரைகள்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இது இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் கண்ணாடிபோல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கும் ஒரு ஆராய்ச்சி நூல். பாலகாண்டம் அணா 4.

அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் சூட்சிகளையும் ஆபாசங்களையும், அவைகள் உண்டாக்கப்பட்ட எண்ணங்களையும் விளக்கிக் காட்டும் பெரியபுத்தகம். டிம்மி 150 பக்கம் கொண்டது. விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்டது. விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் மேயோ கூற்றை எடுத்துக்காட்டி இந்திய நாட்டின் நிலைமையை விளக்கி எழுதப்பட்ட நூல். விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனீயத்தை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1.

## சோஷியலிசம்.

உலகானுபவப்பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intelligent womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் பார்க்கவேண்டிய நூல். விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் சென்னையில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசிய தலைமையுரையை ஒன்றாகத் திரட்டியதாகும். சமூகசீர்திருத்தமடைய ஆர்வமுள்ள தோழர்கள் ஒவ்வொருவர் கையிலும் இது இருக்க வேண்டியதவசியமாகும்.

விலை அணா 2.

## பர்னார்ட்ஷா உபந்யாசம்

இந்நூல் அறிஞர் பர்னார்ட்ஷா அவர்கள் அமெரிக்காவில் ரஷ்யாவைப்பற்றி செய்த பிரசங்கத்தை ஒன்றாகத் திரட்டியதாகும். விலை அணா 1.

## ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்.

இது தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல் நாட்டுச்சுற்றுப்பிரயாணத்திலிருந்து திரும்பி வருங்கால் கொழும்பு கண்டி முதலிய இடங்களில் செய்த சொற்பொழிவுகளை ஒன்று திரட்டியதாகும். தோழர் ஈ. வெ. ரா அவர்களின் மேல் நாட்டு அனுபவங்களும், பல ஆழ்ந்த அபிப்பிராயங்களும் கொண்டது.

விலை அணா $\frac{1}{2}$.

## மநுநீதி விளக்கம்.

விலை அணா 2.

## அகத்தியர் ஆராய்ச்சி

விலை அணா 2.

## இராமலிங்க சுவாமிகள் பாடல்

விலை அணா 2.

## சுயமரியாதைப் பாடல்

விலை அணா 2.

## கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 2.

## சுயமரியாதை தாலாட்டு

விலை அணா 2.

## சோதிடப் புரட்டு

விலை அணா 2.

## கத்தோலிக்கர் வீண் கூச்சல்

விலை அணா $\frac{1}{2}$.

புத்தகங்கள் புக்போஸ்டில் அனுப்பவேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.